## உயர்கல்வி & வேலைவாய்ப்பு

# வழிகாட்டி

### சாதிக்கலாம் வாங்க



தமிழ்நாடு அரசின்
'மாபெரும் தமிழ்க் கனவு'
திட்டத்தின்கீழ்
இந்த வழிகாட்டி
வெளியிடப்படுகிறது.


முதல் பதிப்பு – 2022
திருத்திய பதிப்பு – 2023


**நூல் உருவாக்கம்**

பக்க வடிவமைப்பு:
**Pranvati Digital Services, Chennai.**

இந்நூல் 80 ஜி.எஸ்.எம்
எலிகண்ட் மேப்லித்தோ
தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூலை அச்சிட்டோர்:

தமிழரசு,
தரமணி, சென்னை – 600113

**எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்**

*– பெரும்புலவன் பாரதி*

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 31-01-2023



## அணிந்துரை

தமிழ்நாட்டின் மிகப் பெரிய வளம் நம் இளைஞர்கள். குறிப்பாக, கல்லூரி மாணவர்கள். அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் பெறும்போது, சமூகமும் நலம் பெறும். இன்று கல்லூரியில் பயிலும் இளைஞர்கள் நாளைய சமூகத்தின் அச்சாணிகள். அவர்கள் அரசையும் அரசாங்கத்தையும் வலுப்படுத்த உதவும் தூண்கள் என்பது மிகையல்ல.

ஒரு மாநிலம் சிறந்து விளங்க மூத்தோருடைய சிந்தனை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இளைஞருடைய செயலாற்றலும். ஆற்றல் மிக்க இளைஞர்களை ஆற்றுப்படுத்தும் பணியை முறையாக மேற்கொண்டால் அவர்கள் தரணியில் நெஞ்சு நிமிர்த்தி நடைபோடுவர். அந்த வகையில் தமிழ்நாடு அரசு, கல்வியில் சிறந்த நம் மாணவர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்பு, உயர்கல்வி, தொழில்முனைவு ஆகியவை தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவிக்க வேண்டியது தனது மிக முக்கியக் கடமை என்பதை உணர்ந்திருக்கிறது.

ஆகவே, உலக அரங்கில் தமிழ்நாட்டு மாணவர்கள் முத்திரை பதிக்க எந்தெந்த வழிகளில் உதவ முடியுமோ அந்தந்த வழிகளில் உதவும் பொருட்டு அனைத்து நடவடிக்கைகளையும் அயராமல் எடுத்துவருகிறது தமிழ்நாடு அரசு. அதிலொரு முயற்சிதான் இந்த உயர்கல்வி & வேலைவாய்ப்பு வழிகாட்டி.

என்றென்றும் நினைவில் பசுமைகொள்ளும் கல்லூரிக் காலத்தில் மகிழ்ச்சியான, ரம்மியமான அனுபவங்களைப் பெற்றிருப்பீர்கள். இனி நீங்கள் வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும். வளரிளம் பருவத்திலிருந்து மாறி இளைஞர்களாகச் சமூகத்துக்குள் காலடி எடுத்துவைக்க இருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் தணியாத லட்சியமும், எதிர்காலம் குறித்த கனவும் நிச்சயம் இருக்கும்.

நீங்கள் வாழ்க்கையில் எந்தத் திசையில் பயணிக்கப்போகிறீர்கள் என்பதைத் தீர்மானிப்பது உங்களது இந்தக் கல்லூரிப் படிப்புதான். போட்டித் தேர்வுகளை எழுதுவதா, தனியார் வேலைவாய்ப்புகளை நாடுவதா, குடிமைப்பணித் தேர்வுக்குத் தயார்படுத்திக்கொள்வதா, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு முயல்வதா என ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு விதமான கனவுகள் அலைமோதும்.

வேலையில் சேர்வது என்றால் அதில் எத்தகைய வேலை என்பதைத் தீர்மானித்து அதற்குத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். உயர்கல்வி பயில ஆர்வம் இருந்தால் அதுகுறித்துத் திட்டமிடுவதும் அவசியம். சிலருக்கு வெளிநாடுகளில் சென்று கல்வி பயில வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். சிலருக்குச் சுயமாகத் தொழில் தொடங்கும் எண்ணம் இருக்கும். தொழில்நுட்ப யுகத்தில் புத்தாக்கத் தொழில்களைத் தொடங்கும் முயற்சியிலும் சிலர் ஈடுபடலாம்.

இப்படி உங்கள் மனதில் துண்டுதுண்டாகச் சிதறிக் கிடக்கும் சிந்தனைகளை ஒழுங்குபடுத்தி, ஓர் இலக்கை நோக்கி உங்களைச் செலுத்துவதற்கான தூண்டுகோலாக இந்த நூல் அமையும்.

வங்கித் தேர்வு, ஒன்றியப் பணியாளர் தேர்வு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வு, இந்திய குடிமைப்பணித் தேர்வு உள்ளிட்ட பல போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகத் தேவையான விவரங்களை இந்நூல் கொண்டுள்ளது. வெளிநாடுகளில் உயர்கல்வி பெறவும் வேலைக்குச் செல்லவும் அவசியமான தகவல்களும் வளர்ச்சிக்கான படிப்புகள் குறித்த தகவல்களும் கல்வி உதவித்தொகைகள் பெறுவதற்கான வழிமுறைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சுயதொழில், புத்தொழில் போன்றவற்றுக்கான முதலீட்டை வங்கிக் கடன் வாயிலாகப் பெறுவது பற்றிய ஆலோசனைகளும் வழிமுறைகளும் உள்ளன.

மாணவர்களின் அடுத்தகட்டத் திட்டமிடலுக்கு உதவும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது இந்நூல். இது மாணவர்களின் தேவையையும் எதிர்பார்ப்பையும் பூர்த்திசெய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பரந்து விரிந்த பூமியில் தங்களது லட்சியக் கனவுகளை நிறைவேற்ற, இறகு விரித்து இலக்கு நோக்கிப் பயணிக்க உள்ள ஒவ்வொருவருக்கும் இந்நூல் ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும் என நம்புகிறேன். உங்கள் இலக்கை அடைய வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

# பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | நான் முதல்வன்: இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் | 1 |
| 2 | வெளிநாட்டுக் கல்வி: படிப்பைத் தேர்ந்தெடுப்பது எப்படி? | 4 |
| 3 | உலக நாடுகளில் ஆராய்ச்சிப் பணிகளும் வாய்ப்புகளும் | 11 |
| 4 | இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்புகள் | 15 |
| 5 | கல்லூரி மாணவர்களுக்கான அரசு உதவித் திட்டங்கள் | 18 |
| 6 | உலக நாடுகள் தரும் ஊக்கத்தொகைகள் | 27 |
| 7 | வளர்ச்சிக்கான படிப்புகளைப் படியுங்கள் | 31 |
| 8 | உயர்கல்விக்கு உதவும் வங்கிக் கடன்! | 36 |
| 9 | வேலை தேடுகிறீர்களா, இதைப் படியுங்கள்... | 39 |
| 10 | ஆட்சியராகலாம் வாங்க! | 46 |

| | | |
|---|---|---|
| 11 | வங்கி வேலை வேண்டுமா? | 50 |
| 12 | ஒன்றிய அரசு வேலைக்குப் போகலாமா? | 53 |
| 13 | அறியப்படாத பொதுத்துறை நிறுவனப் பணிகள் | 56 |
| 14 | முப்படைப் பணியில் சேரலாமே! | 60 |
| 15 | தமிழ்நாடு அரசுப் பணியில் ஆர்வமா? | 63 |
| 16 | எளிதாகத் தொழிலதிபர் ஆகலாம்... | 67 |
| 17 | புதுயுகத் தொழில் தொடங்கு! | 70 |
| 18 | அதிக முதலீடு தேவைப்படாத இணையத் தொழில்கள் | 74 |
| 19 | பயன் தரும் செயலிகள் | 79 |
| 20 | மொழிகள் கற்போம் வாய்ப்புகள் பெறுவோம் | 84 |
| 21 | சமூகம் பழகு: உலகுடன் ஒட்ட ஒழுகுவோம்! | 88 |

# 1 நான் முதல்வன்: இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்

முதலமைச்சரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தை 01 மார்ச் 2022 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார். தமிழ்நாடு முழுவதும் ஆண்டுதோறும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரின் கல்வி, அறிவு, திறன் மற்றும் ஆற்றல் மூலம் அவர்களின் திறமைகளை நாட்டின் நலனுக்குப் பயன்படுத்த முயல்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பல்வேறு படிப்புகள் பற்றிய அவ்வப்போதைய தகவல்களையும், தொழில் துறைகளுக்குத் தேவையான குறிப்பிட்ட திறன்கள் தொடர்பான தகவல்களையும், கல்லூரி மாணவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அனைத்து விவரங்களையும் வழங்குவதே நான் முதல்வன் தளத்தின் நோக்கம். இது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கை இலட்சியங்களை அடையும் வகையில், தங்களுக்கு விருப்பமான துறையில் பயிற்சிபெற உதவுகிறது.

தொழில்துறையில் தற்போதுள்ள பணியிட இடைவெளிகளை நிரப்பக்கூடிய திறன் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்கும் வகையில் பல்வேறு திறன் பயிற்சிகளை அவர்களுக்கு அளிப்பதற்கான ஆற்றல்மிகு பயிற்றுநர்களை அடையாளம் காண்பதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இந்த முதன்மைத் திட்டத்தின் மூலமாக மாணவர்கள் பயிற்சிபெற முடியும். தங்களுடைய திறன்களுக்கு ஏற்ப அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதையும் இத்திட்டம் உறுதிசெய்கிறது. மாநிலக் கல்வி நிறுவனங்களில், மாணவர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

நான் முதல்வன் தளத்தில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான கல்வி நிறுவனங்கள் குறித்தும் 300–க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கான பாதைகள் குறித்துமான விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

## தொலைநோக்குப் பார்வை

மாநிலத்தில் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகளை நெறிப்படுத்தி, திறமையான மனிதவளத்திற்கான, வளர்ந்துவரும் சந்தைத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், இத்திட்டம் இளைஞர்களுக்குத் திறன் பயிற்சியை வழங்குகிறது. மேலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் சூழலை உருவாக்குகிறது; இந்தியாவிலும், உலகம் முழுவதிலும், மாறிவரும் நிறுவனச் சூழலில், இளைஞர்கள் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கும், கற்பதற்கும் அவர்களைத் தயார்படுத்துகிறது.

தமிழ்நாட்டின் இளைஞர்கள் தங்களுக்கு விருப்பமான துறைகளில் திறன் பெற உதவும் வகையில் தொடர்ந்து வாய்ப்புகளை அளிப்பதுடன், அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளுடன் அவர்களுக்கு ஆதரவளிப்பதும் இத்திட்டத்தின் தொலை நோக்குப் பார்வையாகும்.

## குறிக்கோள்கள்


- தமிழ்நாட்டின் இளைஞர்களைத் திறன் பெறச் செய்வதில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

- பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தேவையான அளவீடுகளைப் பின்பற்றுதல்.
- சீரமைப்பு, பயனுள்ள ஒருங்கிணைப்பு ஆகியவற்றைக் கொண்டுவருதல்.
- திறன் மேம்பாட்டுத் துறையில் பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு (CSR) போன்ற தனியார் துறை முன்முயற்சியை ஊக்குவிப்பதற்காகப் பொதுத்துறை தனியார் துறை கூட்டுப் பங்களிப்பை ஊக்குவித்தல்.
- வேலைவாய்ப்புகளை வழங்குவதில் ஆதரவளித்தல்.

> **நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக மாணவர்கள் பயிற்சி பெற முடியும். தங்களுடைய திறன்களுக்கு ஏற்ப அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதையும் இத்திட்டம் உறுதி செய்கிறது. மாநிலக் கல்வி நிறுவனங்களில், மாணவர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படும்!**

## பயிற்சி வகுப்புகள்

நான் முதல்வன் மாநிலம் முழுவதும் உள்ள 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்குப் பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய அரசின் உதவித் திட்டங்களின் கீழ் இலவச வேலைவாய்ப்புடன் தொடர்புடைய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குகிறது. தேசிய அளவில் சான்றளிக்கப்பட்ட இந்தப் பயிற்சி வகுப்புகள், பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் சுகாதாரம், ஊடகம் & பொழுதுபோக்கு, பசுமைசார் பணிகள், சில்லறை வணிகம், அழகு, கட்டுமானம், மின்னணுவியல் & வன்பொருள், உணவு பதப்படுத்துதல், சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (ஐடிஇஎஸ்), தோல், சரக்குப் போக்குவரத்து போன்ற 20க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளில் மாநிலம் முழுவதுமுள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மையங்களில் நடத்தப்படுகின்றன.



## திட்டத்தின் பயன்கள்

- நான் முதல்வன் இணையதளம் https://www.naanmudhalvan.tn.gov.in மாணவர்களுக்குத் தொழில் சார்ந்த திறன் பயிற்சி, போட்டித் தேர்வுப் பயிற்சி, உயர்கல்வி நுழைவுத் தேர்வுப் பயிற்சி ஆகியவற்றை வழங்குகிறது.
- ஆங்கிலம், ஜப்பானிய மற்றும் ஜெர்மன் மொழிகளைக் கற்கவும் படிப்புகள் உள்ளன.
- தொழில்நுட்பத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், நிறுவனத் திறன்கள் ஆகியவற்றில் தொழில்துறை தொடர்பான திறன் தொகுதிகளுக்கான அணுகுமுறை பேணப்படும்.
- சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்வித்துறைக் கூட்டாளர்களின் ஒத்துழைப்பு மூலம் அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரியில் நுழைந்தவுடன் ஆங்கில மொழித் திறன் வழங்கப்படும்.
- அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படைக் கணினித் திறன்களைச் செயல்படுத்த, புகழ்பெற்ற FORTUNE 50 நிறுவனங்களின் பயிற்சி வகுப்புகள் வழங்கப்படுகின்றன.
- புகழ்பெற்ற நிறுவனங்கள் தங்களிடம் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் இடைமுகப் பயிற்சி (Internship) வாய்ப்புகளை நான் முதல்வன் தளத்தில் பதிவிடலாம்.
- இத்திட்டத்தின் மூலம் நிறுவனங்கள் அவர்களுக்குத் தேவையான பணியாளர்களை வேண்டிய திறன்களில் பயிற்சி அளித்து பணியமர்த்திக்கொள்ளலாம்.
- தொழில் நிறுவனங்கள் தங்கள் களத்தில் உள்ள திறன் இடைவெளிகளை நான் முதல்வன் திட்டத்தின் மூலம் சரிசெய்ய முடியும்.
- உலகெங்கிலும் உள்ள சிறந்த கல்வியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களிடமிருந்து வழிகாட்டுதல் (Mentorship), ஆசிரிய மேம்பாடு, ஆராய்ச்சி முன்னோடிகள் மூலம் இளைஞர்களின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்க கல்லூரிகளுடன் கூட்டுறவை உருவாக்குகிறோம்.
- மதிப்புமிக்க தொழில் சார்ந்த பயிற்சிகள் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகின்றன.
- குறைந்த கட்டணத் தொழில்நுட்பப் பயிற்சிகள் மற்றும் சான்றிதழ்களை ஆசிரியர்கள் இத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

## பள்ளிகள்

நான் முதல்வன் முயற்சியானது மாநிலத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது. 9–12 ஆம் வகுப்பு மாணவர்களின் உயர்கல்விப் படிப்புகள் மற்றும் அதன் விளைவாக வேலைகள் பற்றிய தகவல்களை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. STEM கல்விமுறையின் பயன்பாட்டை உயர்த்த இத்திட்டம் கல்விக் கடன்கள் மற்றும் உதவித்தொகை பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு எளிதான முறையில் விளக்குகிறது.

## கல்லூரிகள்

29 ஆகஸ்ட் 2022 அன்று பொறியியல் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டம் தொடங்கப்பட்டது. 19 முதல் தரத் திறன் படிப்புகளைக் கட்டாயப் பாடமாக வழங்குகிறோம். 372 கல்லூரிகள் மூலம் 4,93,896 மாணவர்கள் எதிர்கால வேலைவாய்ப்புக்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

1,084 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சார்ந்த 10,33,680 மாணவர்கள் பயனடைய உள்ளனர். 464 பாலிடெக்னிக் கல்லூரிகளில் 1,18,043 மாணவர்கள் பயனடைவார்கள்.

**நன்றி: தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்**

# 2 வெளிநாட்டுக் கல்வி: படிப்பைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

வெளிநாடுகளில் உயர்கல்வி பயில்வதில் நிறைய அனுகூலங்கள் உள்ளன. வளர்ந்த நாடுகளில் இளநிலை அல்லது முதுநிலைப் படிப்பு பயிலச் செல்லும்போது அந்த நாடுகளிலேயே வேலைவாய்ப்பு பெற வாய்ப்புள்ளது; வெளிநாடுகளில் பயின்றுவிட்டு இந்தியா திரும்பினால் முன்னோடித் தொழில் நிறுவனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பும் நல்ல ஊதியமும் கிடைக்கின்றன.

வெளிநாடுகளில் பல பண்பாட்டுச் சூழலில் மாறுபட்ட கல்வித் திட்டத்தில் பயிலும்போது மாணவர்களுக்கான கற்றலின் நோக்கத்தில் நல்ல பலனைப் பெற இயலும். உதாரணத்திற்கு, பிரிட்டனில் ஓராண்டு காலத்திற்குள் முதுநிலைக் கல்வி பயிலவும் வாய்ப்புண்டு. மேலும், ஆய்வுசார் பாடத்திட்டங்களை நேரடியாகத் தொழில் துறை நிறுவனங்களோடு இணைந்து கற்கும் வாய்ப்பையும் தருகிறது.

வெளிநாடுகளுக்குச் சென்று பயிலும் மாணவர்கள் வரிசையில் தமிழ்நாடு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிடும்போது ஏறத்தாழ 7% மாணவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பயில ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால், வெளிநாடு சென்று பயில்வதற்கான விழிப்புணர்வு பெறுவதில் அல்லது அதற்கான வாய்ப்புகளைத் தெரிந்துகொள்வதில் பல சிரமங்கள் உள்ளன. குறிப்பாக, வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களின் தரம் என்ன? எங்கு, என்ன படிப்புகளை எடுத்துப் பயிலலாம்? என்ன மாதிரியான முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும்? நுழைவுத் தேர்வு அல்லது தகுதித் தேர்வுகள் எழுத வேண்டுமா? உயர்கல்வி ஆராய்ச்சி வாய்ப்புகளை எப்படி அறிந்துகொள்வது? அதற்கான உத்திகள் என்னென்ன? இப்படிப் பல்வேறு ஐயங்கள் நம் மாணவர்களுக்கு உள்ளன. இவை குறித்த தகவல்களைப் பார்ப்போம்.

## வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களின் தரம்

ஒவ்வொரு நாடும் அவர்களது கல்வி நிறுவனங்களின் தர வரிசைப் பட்டியலை வெளியிடுகிறது; அவை அரசு அல்லது அரசு அல்லாத தனியார் அமைப்புகள் (பத்திரிகைகள், இதழ்கள், புள்ளிவிவர நிறுவனங்கள் போன்றவை) மூலம் வெளியிடப்படுகின்றன. உலக அளவிலான கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் QS World University Ranking எனப்படும் Quacquarelli Symonds மற்றும் 'Elsevier' நிறுவனமும் இணைந்து வெளியிடும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியல் அதிகக் கவனம் பெற்றது.

**இந்தத் தர வரிசைத் தேர்வானது 6 முக்கியமான அம்சங்களை உள்ளடக்கியது.**

**1. கல்வித் தர மதிப்பாய்வு**

**2. ஆசிரியர்/மாணவர் விகிதம்**

**3. ஆசிரியர்களுக்கான மேற்கோள்கள் (ஆய்வுக் கட்டுரைகள்)**

**4. நிறுவனத்தின் நன்மதிப்பு**

5. சர்வதேச மாணவர் விகிதம்

6. சர்வதேசப் பணியாளர் விகிதம்

வெளிநாடுகளில் பயில வேண்டும் எனத் திட்டமிடும் மாணவர்களுக்கு இந்தத் தரவரிசைப் பட்டியல் மிகவும் உதவியாக இருக்கும். குறிப்பாக, 5 மற்றும் 6 ஆவது அம்சங்களில் மதிப்பிடப்பட்டிருக்கும் சர்வதேச மாணவர் மற்றும் பணியாளர் விகிதத்தைக் கொண்டு ஒரு பல்கலைக்கழகம் எந்த அளவிற்குப் பரந்துபட்ட சர்வதேசக் கட்டமைப்பைத் தங்கள் வளாகத்திற்குள் கொண்டிருக்கிறது என விளங்கிக்கொள்ள இயலும். அதேபோல, பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'கார்டியன்' (Guardian), thecompleteuniversityguide.co.uk இணையதளங்களின் தரவரிசைப் பட்டியல் ஓரளவு நம்பகத்தன்மை வாய்ந்தது. கனடா நாட்டின் 'டைம்ஸ்' இதழ் வெளியிடும் அந்நாட்டிற்கான தரவரிசைப் பட்டியலையும் நல்ல உதாரணமாகக் கொள்ளலாம்.

## வெளிநாடுகளில் உயர்கல்வி பெறத் தகுதித்தேர்வு



இளநிலை, முதுநிலைப் படிப்புகள் இரண்டிற்குமே மதிப்பெண் விகிதம் ஒரு அடிப்படைத் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்திய உயர்கல்விச் சூழல் என்பது மாணவர்களின் மதிப்பெண்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதால் இது குறித்த விழிப்புணர்வு எல்லா மாணவர்களுக்கும் இருக்கும். ஆனால், ஒரு சில நாடுகளுக்கு மொழியறிவுச் சான்றிதழ் மிக முக்கியமானது.

ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பயில ஆங்கில மொழிப் புலமையில் அவர்கள் பரிந்துரைக்கும் தகுதித் தேர்வில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். உதாரணத்திற்கு பிரிட்டன், ஆஸ்திரேலியா நாடுகளில் பயில IELTS (International English Language Testing System) எனப்படும் ஆங்கில மொழிப்புலமைத் தகுதித் தேர்வில் இளநிலைப் படிப்புகளுக்குக் குறைந்தபட்சம் 6.0 மற்றும் முதுநிலை, ஆராய்ச்சிப் படிப்புகளுக்குக் குறைந்தபட்சம் 6.5 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். இந்தத் தேர்வானது கேட்டல், படித்தல், எழுதுதல், பேசுதல் என்ற பிரிவுகளில் மதிப்பிடப்படுவது. இந்தத் தேர்விற்குக் கட்டணம் உண்டு. மேலும், இந்தத் தேர்விற்கான சான்றிதழ் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதால் அதற்கேற்பத் திட்டமிடுவது நல்லது. IELTS போலவே மற்றொரு ஆங்கிலப் புலமைத் தேர்வான TOEFL (Test of English as a Foreign Language) சான்றிதழை 119 நாடுகளில் உள்ள 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் மொழித் தகுதியாக ஏற்றுக்கொள்கின்றன. ஆகவே, எந்த நாட்டிற்கு எந்த மொழிப் புலமைத் தேர்வு எழுத வேண்டும் என்று சரிபார்த்துக்கொள்வது மிக அவசியம்.

இளநிலைப் படிப்புகளுக்கு மதிப்பெண்களைப் பொறுத்து ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் தகுதி அடிப்படை மாறுபடும். இந்தியாவில் சிபிஎஸ்இ மற்றும் சர்வதேசப் பாடத்திட்டத்தில் (CBSE/ISC Standard) பன்னிரண்டாம் வகுப்பு பயின்றவர்கள் பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயில குறைந்தபட்சம் பன்னிரண்டாம் வகுப்பில் 80–95% மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும். இந்த விழுக்காடு ஒவ்வொரு துறைக்கும் மாறுபடும். இந்தியாவின் மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கர்நாடகம், குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள மாநிலப் பாடத்திட்டத்தின்கீழ் பயிலும் மாணவர்களும் பிரிட்டனில் நேரடியாக நுழைவுத் தேர்வு இல்லாமல் இளநிலைப் படிப்புகளைப் பயிலலாம். ஆனால், இவர்கள் மருத்துவத் துறையில் சேர இயலாது. ஆகவே, ஒவ்வொரு துறைக்கும் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண் விழுக்காடு குறித்த தகவலைப் பெறுவது முக்கியமானது. இத்தகவலை ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் அல்லது கல்வி நிறுவனத்திலும் உள்ள சர்வதேச அலுவலகம் வாயிலாக மின்னஞ்சல் மூலம் பெறலாம்.

இந்திய மாணவர்கள் தங்கள் முதுநிலைப் படிப்புகளுக்காக வெளிநாடு செல்வது ஒப்பீட்டளவில் இளநிலைப் படிப்புகளைவிட மிக அதிகம். குறிப்பாக, அறிவியல், பொறியியல், கணிப்பொறி நுட்பம், மேலாண்மை, செவிலியர் மற்றும் மருத்துவப் பிரிவுகளில் சிறப்புப் படிப்புகள் பயிலவே வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். இந்த எண்ணிக்கை, உள்நாட்டில் சிறப்புப் படிப்புகளைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது 60% அதிகம். இவற்றில் சில பாடப் பிரிவுகளுக்குக் கல்வி பயில உதவித்தொகை கிடைக்கும்.

உதாரணத்திற்கு, வெளிநாட்டு மாணவர்கள் ஜப்பான் நாட்டில் முதுநிலை ஆய்வுப் படிப்புப் பயில Monbukagakusho (MEXT) Scholarship திட்டம் மூலம் மாதம் 1,44,000 யென்னை அந்த நாடு (ரூ.90 ஆயிரம்) வழங்குகிறது. மேலும், கல்விக் கட்டணம் நேரடியாகக் கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படுகிறது. இதற்கான விண்ணப்பப் படிவத்தை அந்தந்த நாடுகளில் உள்ள ஜப்பானியத் தூதரகம் மூலம் தருகிறார்கள், அல்லது இணையதளம் வாயிலாகவும் பெறலாம். இதேபோல, தென்கொரிய அரசு அங்கு முதுநிலைப் படிப்புகளுக்கு உதவித்தொகை (Global Korea Scholarship) வழங்குகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் (Europe Union) தனது உறுப்பு நாடுகளில் முதுநிலைப் படிப்புகள் பயில Erasmus Mundus Scholarship திட்டம் மூலம் உதவுகிறது. இந்தத் திட்டத்தின் சிறப்பே முதுநிலை மாணவர்கள் ஒவ்வொரு பருவப் பாடத்திட்டத்தையும் (Semester) ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள உறுப்பு நாடுகளில் பயில முடியும். குறைந்தபட்சம் முதுநிலைப் படிப்பை 3 நாடுகளில் பயிலும் வாய்ப்பை இத்திட்டம் தருகிறது. இதன் மூலம் மாணவர்கள் திறன் அறிவு (Skills) மற்றும் பயிற்சி (Training) பெற முடியும் என ஐரோப்பிய ஒன்றியம் நம்புகிறது. இவை தவிர ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், ஆஸ்திரியா, செக் குடியரசு, பிரான்ஸ், கிரீஸ், ஹங்கேரி, அயர்லாந்து, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் வெளிநாட்டு மாணவர்களுக்கென்று தனித்த உதவித்தொகைத் திட்டங்களை முதுநிலை மாணவர்களுக்குத் தருகின்றன.

**பொதுவாக, வெளிநாடுகளில் முதுநிலைப் படிப்புகளை இரண்டு வழிகளில் உதவித்தொகையுடன் பயிலலாம்.**

1. வெளிநாடுகளில் உள்ள உதவித்தொகைத் திட்டத்திற்கு (Scholarship) விண்ணப்பித்து அதன் வாயிலாகச் செல்வது.
2. சுயநிதி (Self financing) மூலம் வெளிநாடுகளுக்குச் சென்று பயில்வது. 2,000 முதல் 5,000 டாலர் வரை சிறிய உதவித்தொகைகளைப் பல்கலைக்கழகம் அல்லது தன்னார்வலர் அமைப்புகள் வழங்குகின்றன. இவை ஓரளவிற்குச் சுயநிதி மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.

முதுநிலைக் கல்விக்கான உதவித்தொகை குறித்த தகவல்கள் www.findamasters.com போன்ற இணையதளங்களில் எளிதாகக் கிடைக்கின்றன. அதேநேரம், குறிப்பிட்ட உதவித்தொகைத் திட்டங்கள் தொடர்ந்து சமகாலத்தில் நடைபெறுகிறதா என்பதை சரிபார்த்துக்கொள்வது நல்லது. ஆங்கில மொழி அல்லாத பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட நாடுகள் தங்கள் தாய்மொழியை முதல் பருவத்தில் ஒருசில மாதங்களுக்குப் புதுமுகப் பயிற்சியாக இலவசமாகக் கற்றுத்தருகின்றன. ஆகவே, மொழி தெரியவில்லை என்ற கவலை வேண்டாம். தென் கொரியா போன்ற நாடுகள், முதுநிலைப் படிப்புகளுக்கான உதவித்தொகைத் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும்போது அடிப்படை அளவில் கொரிய மொழி (Test of Proficiency in Korean – TOPIK) அவசியம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கின்றன. ஆகவே, பிற மொழி கற்கும் சூழல் அமைந்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

## நுழைவிசைவு (Visa)

வெளிநாடுகளுக்கு உயர்கல்விக்குச் செல்ல விரும்பும் மாணவர்கள் எந்த நாட்டிற்குப் போக வேண்டும் என முடிவெடுத்த பின் செய்ய வேண்டிய முதல் பணி, அந்த நாட்டின் குடியேற்றத்திற்குத் (Visa) தேவையான ஆவணங்கள் குறித்த தகவல்களைத் தூதரக (Embassy) இணையதளம் மூலம் தெரிந்துகொள்வது. குறிப்பாக, குறைந்தது ஆறு மாதம் நடப்பில் உள்ள வங்கிக்கணக்கை ஆவணமாகச் சமர்ப்பிக்குமாறு பிரிட்டன் போன்ற நாடுகள் கேட்கும். இதுபோன்ற தகவல்களை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்தால் தேவையற்ற சிரமங்களைத் தவிர்க்கலாம். மேலும், கல்விச் சான்றிதழ்களை (Testimonial) உரிய நேரத்தில் பெற்று வைத்திருத்தல் அவசியம். பெரும்பாலான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களின் இளநிலைப் பட்டயப் படிப்பின் மொத்த மதிப்பெண் பட்டியலை அவர்கள் பயின்ற கல்வி நிறுவனத்தின் அதிகாரபூர்வ முத்திரை பதித்த மூடிய உறைக்குள் சீலிட்டு (Transcripts) கேட்பார்கள். ஆகவே, இதுபோன்ற ஆவணங்களை முன்கூட்டியே பெற்று வைத்துக்கொள்ளுதல் மிக அவசியம்.

சில நாடுகள் இந்திய மாணவர்களின் கல்விச் சான்றிதழ்களின் நம்பகத்தன்மையையும் (Creditability) தங்கள் நாட்டின் கல்வித்திட்டத்திற்கு இணையாக (Equivalent certificate) மாணவரின் கல்விச் சான்றிதழ் உள்ளதா என்பதையும் கேட்பார்கள். இதற்கான சான்றளிப்பை (Attestation) இந்தியாவில் உள்ள குறிப்பிட்ட நாட்டின் தூதரக அலுவலகம் மூலம் பெற்றுக்கொள்ளலாம். நாம் கல்விக் கட்டணத்தை உரிய நேரத்தில் ஒவ்வொரு பருவத்திற்கும் செலுத்த இயலும் என்பதற்கான வங்கிக் கணக்கு ஆதாரத்தை விசா பெறும்போது சமர்ப்பிக்க வேண்டும். ஆகவே, வங்கிக் கடன் மூலம் செல்லும் சுயநிதி (Self financing) மாணவர்கள் முன்கூட்டியே வங்கி இருப்பில் இருக்க வேண்டிய சேமிப்புத் தொகை குறித்துத் திட்டமிடுதல் அவசியம். உதவித்தொகை (Scholarship) மூலம் வெளிநாடு செல்பவர்கள் அந்தக் கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட அனுமதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். விசா பெறுவதில் சுயநிதி மாணவர்களைப் போல இவர்களுக்கு அதிக சிரமம் இருக்காது. நாடுகளின் தூதரகங்கள் அவ்வப்போது தங்களது குடியேற்றத்திற்கான விதிமுறைகளை (Visa regulations) மாற்றிக்கொண்டே இருக்கும். ஆகவே, தொடர்ந்து கண்காணிப்பது நல்லது.

பெரும்பாலான மாணவர்கள், விசா வாங்குவதற்குத் தனியார் நிறுவனங்களை அணுகுகின்றனர். இயன்றவரை நீங்கள் விண்ணப்பிக்கும் கல்வி நிறுவனத்தின் அதிகாரபூர்வ நிறுவனங்கள் (Authorised agency) வாயிலாக விண்ணப்பிப்பது பாதுகாப்பானது.

## ஆய்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் உலக நாடுகள்

ஒவ்வொரு நாடும் தனது தொழில் துறை வளர்ச்சியை விரிவாக்க ஒவ்வொரு உத்தியைக் கையாள்கிறது. மேற்குலகு நாடுகள் மற்றும் கிழக்காசிய நாடுகளான தென்கொரியா, தைவான், ஜப்பான் போன்றவை பல்கலைக்கழகங்கள் வாயிலான மனிதவள மேம்பாட்டு வளர்ச்சியைத் தொழில் துறை வளர்ச்சிக்கான திறவுகோலாகப் பார்க்கின்றன. ஆய்வுத் துறையிலிருந்து பெறப்படும் புதுமையான மற்றும் நவீனக் கண்டுபிடிப்புகள் அந்நாட்டின் உற்பத்தி மற்றும் சேவைச் சந்தைக்குத் தேவையான உபகரணங்கள், மற்றும் நுட்ப வசதிகளுக்கு மூலதனமாக உள்ளன. இவை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உந்துகோலாக இருப்பவை.

ஒவ்வொரு நாடும் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) குறிப்பிட்ட சதவிகிதத்தை ஆய்வுக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணியில் முதலீடு செய்கிறது. இம்முதலீட்டின் மூலம் கல்வி நிறுவனங்களில் உள்ள ஆய்வுத் துறையில் மனிதவள ஆற்றலை மேம்படுத்த இயலும். குறிப்பாக, பிஎச்டி முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கான உதவித்தொகை மற்றும் முதுமுனைவு ஆய்வாளர்களுக்கான ஊதியம் எனப் பல்வேறு தளங்களில் இம்முதலீடு உதவுகிறது.

இளநிலை, முதுநிலைப் பட்டயப் படிப்புகள்போல அல்லாமல் உயர்கல்வி ஆராய்ச்சித் துறைக்கான வாய்ப்பு மிகவும் வித்தியாசமானது. இதற்கான வாய்ப்பு பெற மாணவர்கள் சற்றே கூடுதலாக உழைக்க வேண்டும்.

> **கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும்போலவே வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும். ஆகையால், ஒருவன் சாகும்வரை கல்லாமல் காலங்கழிப்பது ஏன் என்ற திருவள்ளுவரின் கேள்வியை வெளிநாடு சென்று உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் நினைவில்கொள்ள வேண்டும்!**

## வெளிநாட்டு உயர்கல்வி ஆராய்ச்சிக்கு உதவித்தொகை

வளர்ந்த, வளரும் நாடுகள் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தங்கள் நாடுகளில் பிஎச்டி முனைவர் பட்ட ஆய்வு செய்ய உதவித்தொகை தருகிறது. வெளிநாட்டு மாணவர்கள் இரண்டு வகையில் இந்த உதவித்தொகையைப் பெறலாம்.

1. அரசு அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவித்தொகைக்கான போட்டியில் கலந்துகொண்டு பெறுவது.
2. ஏற்கெனவே நிதி உதவி பெறப்பட்டஆய்வுத் திட்டத்தில் (Funded Projects) ஆய்வு உதவியாளர் (Research Assistant) அல்லது இளநிலை ஆய்வாளர் (Research Fellow) பதவிக்கு விண்ணப்பித்து அதன் வாயிலாகப் பெறுவது.

இந்த இரண்டு வழிமுறைகளிலும் மாணவர்கள் முதலில் செய்ய வேண்டியது, எந்தக் கல்வி நிறுவனத்தில் ஆய்வுப் படிப்பை மேற்கொள்ள விரும்புகிறார்களோ அந்த நிறுவனத்தில் பணிபுரியும் பேராசிரியர்களைத் தொடர்புகொண்டு அவர்களது ஆய்வுக் குழுவில் பணியாற்றுவதற்கான சம்மதக் கடிதத்தைப் (Consent letter) பெறுவது.

### வெளிநாட்டில் கற்க உதவும் இணையதளங்கள் சில

- அமெரிக்கா: https://www.usief.org.in/
- ஆஸ்திரேலியா: https://india.embassy.gov.au/
- கனடா: https://www.canadainternational.gc.ca/
- சிங்கப்பூர்: https://www.moe.gov.sg/
- பிரான்ஸ்: https://www.inde.campusfrance.org/
- பிரிட்டன்: https://www.britishcouncil.in/
- சுவீடன்: https://si.se/en/

உலகெங்கும் உள்ள நாடுகளின் அரசுகள், பல்கலைக்கழகங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆய்வுப் படிப்பிற்கான உதவித்தொகையை வழங்குகின்றன. கீழ்க்காணும் உதவித்தொகைத் திட்டங்கள் உலகின் பரவலான கவனம் பெற்றவை. ஒவ்வொரு வருடமும் இந்த உதவித்தொகைத் திட்டம் குறிப்பிட்ட மாதத்தில் விண்ணப்பங்களை வழங்குவதால், இது குறித்து மாணவர்கள் முன்கூட்டியே திட்டமிடலாம்.

- Germany: DAAD PhD Scholarships (German Academic Exchange Service)
- South Korea: Global Korea Scholarship
- Japan: Japanese Government (MEXT) Postgraduate Scholarships
- Australia: PhD Top-Up Scholarship/Research Training Program
- Taiwan: Taiwan International Scholarship Program 2022
- China: Chinese Government Scholarship
- Canada: Queen Elizabeth Scholarships/Vanier Canada Graduate Scholarships (Vanier CGS)

## ஆய்வு உதவித்தொகைத் தகவல்கள்

முதுநிலைப் படிப்பிற்குப் பிறகு ஆய்வுசார் படிப்புகளுக்காக இயங்கும் குழுக்களோடு இயன்றவரை இணைந்திருங்கள் (Networking).

பல இணையதளங்கள் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கான உதவித்தொகை (Stipend) அல்லது ஆய்வு உதவியாளர் (Research Assistant) பணிக்கான உதவித்தொகை குறித்த தகவல்களை வெளியிடுகின்றன. உதாரணத்திற்கு, www.jobs.ac.uk என்ற இணையதளம் மூலம் பிரிட்டனில் உள்ள கல்வி நிறுவனங்களில் உள்ள ஆய்வுசார் பணிகளுக்கான உதவித்தொகைத் திட்டங்களை அறிய முடியும். ஐரோப்பிய நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியாகும் ஆய்வுத் திட்ட உதவித்தொகைப் பணியிடங்களை https://euraxess.ec.europa.eu/jobs என்ற இணையதளம் மூலம் பெறலாம். இதுபோன்ற பல இணையதளங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் பிரத்யேகமாக உள்ளன.

scholarship-positions.com, findaphd.com போன்ற இணையதளங்கள் மூலம் உலகெங்கும் உள்ள உதவித்தொகைத் திட்டங்கள் குறித்த தகவல்களைப் பெற முடியும்.

தற்போது, முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான வாய்ப்புகளைத் தெரிந்துகொள்வதில் சமூக ஊடகங்கள் (Social Media) முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, LinkedIn, Twitter, ResearchGate ஆகியவை மூலம் பேராசிரியர்கள், கல்வி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் போன்றவை முனைவர் ஆய்வுப் படிப்பிற்கான வாய்ப்புகளை நேரடியாகப் பகிர்கின்றன. ஃபேஸ்புக்கில் இதற்கென உள்ள குழுக்களில் நீங்கள் உறுப்பினராகப் பங்கேற்பதன் மூலம் எளிதாகத் தகவல்களைப் பெற இயலும்.




வெளிநாடுகளில் உள்ள முன்னோடிக் கல்வி நிறுவனங்களில் ஆய்வு உதவித்தொகை அல்லது முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான வாய்ப்பு என்பது உலகளாவிய போட்டியாகும். சராசரியாக ஒரு வாய்ப்பிற்கு நூறு முதல் ஆயிரக்கணக்கில் மாணவர்கள் போட்டியிடுகிறார்கள். வெற்றி சதவிகிதம் 0.1 முதல் 1% மட்டுமே. ஆகவே, ஆய்வு உதவித்தொகைப் போட்டியில் ஒருவேளை நீங்கள் தோற்கும்போது சோர்வடைய வேண்டாம். அதை ஒரு அனுபவமாகக் கொண்டு நேர்முகத் தேர்வில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சிறந்த முறையில் பதில்களைத் தயார்செய்து மீண்டும் அடுத்த போட்டியில் வெல்ல முயலுங்கள்.

இயன்றவரை உங்களுக்கென்று ஒரு வழிகாட்டியைத் (Mentor) தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். அவர் உங்களது கல்லூரிப் பேராசிரியராகவோ, உங்களது நலம்விரும்புபவராகவோ இருக்கலாம். ஒவ்வொரு கட்டத்திலும் உங்களது திட்டங்களை அவர்களிடம் விவாதித்து ஆலோசனைகளைப் பெறுங்கள்.

**'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு'**

என்ற குறளை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும். ஆகையால், ஒருவன் சாகும்வரை கல்லாமல் காலங்கழிப்பது ஏன் என்ற திருவள்ளுவரின் கேள்வியை வெளிநாடு சென்று உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் நினைவில்கொள்ள வேண்டும்.

**நன்றி: முனைவர் சுதாகர் பிச்சைமுத்து, 'பிபிசி தமிழ்'**

# 3 உலக நாடுகளில் ஆராய்ச்சிப் பணிகளும் வாய்ப்புகளும்

உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் அயல்நாட்டினருக்கான பலதரப்பட்ட ஆராய்ச்சித் துறைப் பணி வாய்ப்புகள் காத்திருக்கின்றன. அவற்றை எப்படி அணுகுவது, என்னென்ன திறன்கள் மற்றும் தேர்ச்சி பெற்றிருப்பது எனப் பலரது கேள்விகளுக்கு முடிந்த அளவிற்குத் தகவல்களைத் திரட்டியுள்ளேன். குறிப்பாக, அறிவியல் துறையின் வேலைவாய்ப்புகள் குறித்தான தகவல்களை இப்பதிவில் பார்ப்போம்.

## முனைவர் பட்ட ஆய்வுப் பணி – தகுதிகள்

- நம் ஊரில், முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பு மற்றும் 2 ஆண்டுகள் படிப்பின்போது 6 மாத ஆய்வு அனுபவம், ஆய்வுக்கட்டுரை வெளியிட்டு இருத்தல், தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டிருத்தல் முதல் அவசியம்.
- முதுநிலை அறிவியல் பட்டப்படிப்புக்குப் பின்னர், ஒன்று–இரண்டு ஆண்டுகள் ஆய்வுத்துறை அனுபவம் மற்றும் ஆய்வுக்கட்டுரை வெளியிட்டு இருத்தல் கூடுதல் பலம் சேர்க்கும்.
- சில பல்கலைக்கழகங்கள், IELTS, TOEFL, GRE போன்ற தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தும்.
- முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பின்போது ஆராய்ச்சி அனுபவமும், சர்வதேசப் பதிப்பகங்களில் ஆய்வுக்கட்டுரைகள் (1–3) வெளியிட்டு இருந்தால் முன்னுரிமை கிடைக்கும்.
- முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பின் போதான ஆய்வுக்கட்டுரை வெளியீட்டில், அயலகப் பல்கலைக்கழகத்துடனான கூட்டு ஆய்வில் ஈடுபட்டிருப்பின் முன்னுரிமை கிடைக்கும்.
- முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பின்போது ஆய்விற்காக 3–6 மாதங்கள் அயலகப் பல்கலைக்கழக ஆய்வகங்களில் பணியாற்றிருப்பின் முன்னுரிமை கிடைக்கும்.
- முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பு மற்றும் அதன் பின்னரான ஆராய்ச்சிப் பணியில் ஆய்வுக்கட்டுரைகளோடு, பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வறிக்கை வெளியிட்டு இருத்தலும் அவசியம்.
- கோட்பாட்டு அறிவியல் ஆராய்ச்சி எனில், அந்தந்தத் துறை சார்ந்த ஆராய்ச்சிக்கான கணினி மென்பொருள், காட்சிக்கணிதல் (Modelling), ஒப்புருவாக்கம் (Simulation) தொடர்பான ஆய்வு அனுபவம், ஆய்வுக்கட்டுரை வெளியிட்டு இருத்தல் மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்க அனுபவம் அவசியம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு, முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.



## ஐரோப்பிய நாடுகள்




முனைவர் பட்டத்திற்கான ஆய்வு என்பது ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு போன்றதுதான். மாதாந்திர ஊதியமும் சில பல்கலைக்கழகங்களில் இளநிலை, முதுநிலை மாணாக்கருக்குப் பாடம் எடுக்க வேண்டியதாகவும்கூட இருக்கும். எவ்வளவு ஊதியம் பெற முடியும் என்பதை அந்தந்தப் பல்கலைக்கழகத்தின் துறை மற்றும் ஆராய்ச்சிக் குழு வெளியிடும் வேலைவாய்ப்புச் செய்திகளில் காணலாம். இங்கே கிடைக்கும் ஊதியம் கொண்டு, கணவன், மனைவி, குழந்தைகள் எனக் குடும்பமாக வாழ போதிய சூழல் இருக்கும்.

ஐரோப்பிய நாடுகளில், அந்தந்தப் பல்கலைக்கழகப் பணியிட வாய்ப்புப் பக்கங்களில் முனைவர் பட்ட ஆராய்ச்சி முதல் முதுமுனைவர் ஆராய்ச்சி, ஆராய்ச்சியாளர் மற்றும் பேராசிரியர்களுக்கான வாய்ப்புகள் பற்றி விளம்பரம் வெளியிடுவர். அதில் வகைப்படுத்தப்பட்டுள்ள திறமை, ஆய்வு அனுபவம், கல்வி அனுபவம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மட்டுமே ஆராய்ச்சிப் பணிக்கென மாணவ, மாணவிகளைத் தேர்ந்தெடுப்பர்.

> ஐரோப்பிய நாடுகளில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வு என்பது வேலைவாய்ப்பு போன்றதுதான். இங்கே கிடைக்கும் ஊதியம் மூலம், குடும்பத்துடன் வாழ்வதற்கான போதிய சூழல் இருக்கும்!

## இந்திய அறிவியல் துறை: உயர்கல்வியும் ஆராய்ச்சியும்

அறிவியல் துறையில் கல்வி பயில்பவர்களுக்கான பல்வேறு புதிய வாய்ப்புகள் கல்வித்துறையில் மட்டுமின்றி, ஆராய்ச்சித்துறைகளிலும் கொட்டிக்கிடக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் மாணவ, மாணவிகள் வெற்றிபெற எத்தகைய தேர்வுகளுக்குத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும், தங்கள் பள்ளிக்கல்வி, இளநிலை, முதுநிலைப் படிப்புகளை எத்தகைய திசை நோக்கிச் செலுத்த வேண்டும் என்பதைப் பார்க்கலாம்.

### CSIR–NET தேர்வு

தேசியத் தேர்வாணையத்தினால் நடத்தப்படும் CSIR–UGC NET தேர்வானது, வேதி அறிவியல், இயல் அறிவியல், உயிர் அறிவியல், கணிதவியல், கடலியல், தாவர அறிவியல், வளிமண்டலம் உள்ளிட்ட துறைகளின் உட்பிரிவுகளில் உயர்கல்வி, இளநிலை ஆராய்ச்சியாளர், விரிவுரையாளர், துணைப் பேராசிரியர்களுக்கான தகுதியினை உறுதிசெய்கிறது.

இளநிலை ஆராய்ச்சிக் காலத்தில் மாதம் 31,000 ரூபாயும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு மாதம் 35,000 ரூபாயும் தொடக்க ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

### GATE தேர்வு

இளநிலைப் பொறியியலாளர்களுக்கு முதுநிலைப் பொறியியல் மற்றும் அரசுப் பணிகளுக்கான தகுதித் தேர்வாக GATE இருப்பது பலரும் அறிந்த ஒன்றுதான். அதேவேளை, இயற்பியல், வேதியியல், கணிதவியல், புள்ளியியல், உயிர் அறிவியல், சமூக அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், புவி அறிவியல் உள்ளிட்ட பிரிவுகளும் GATE தேர்வில் அடக்கம்.

இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்திய அறிவியல் கழகம், ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்கள், ஒன்றிய அரசின் ஆராய்ச்சி மையங்கள் உள்ளிட்டவற்றில் ஊக்கத்தொகையுடனான உயர்கல்வி பெறுவதற்கும் மேலதிகமான ஆராய்ச்சிப் பணிகளுக்கான வாய்ப்புகளுக்கும் இத்தேர்வு பயன்படும்.

முதுநிலைக் கல்வியில் தொடக்கமாக மாதம் 12,500 ரூபாய் ஊக்கத்தொகை கல்விக்காலம் முழுமைக்கும் கிடைக்கிறது. இத்தேர்வின் வழியாகவும், ஆசிய நாட்டுப் பல்கலைக்கழகங்களில் சிலவற்றுக்குத் தகுதி உறுதிசெய்யப்படுகிறது.



## ஊக்கத்தொகையும் ஆய்வுக்கால ஊதியமும்

அறிவியல் துறையைத் தேர்ந்தெடுப்போருக்குச் சமூகநீதி அடிப்படையில் மாநில/ஒன்றிய அரசுகளின் ஊக்கத்தொகைகள் உண்டு. இளநிலைக் கல்வியை நிறைவு செய்த பின்பு முதுநிலைக் கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் மூலமாக இந்திய அளவில் பல்வேறு ஊக்கத் தொகைகள் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். முதுநிலைக் கல்வி நிறைவு செய்த பின், ஆராய்ச்சி மையங்களில், IIT/IISc உள்ளிட்ட ஆராய்ச்சிக் கல்வி நிலையங்களில், மாநிலப் பல்கலைக்கழகங்களில், ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்ட ஆய்வு முதல் முதுமுனைவர் ஆராய்ச்சிக் காலம் வரையில் பல்வேறு ஊதிய வாய்ப்புகளும் உண்டு. ஆராய்ச்சிக் காலத்தில் பல நாடுகளுக்குச் சென்று பகுதி நேர ஆராய்ச்சியை நிறைவு செய்து திரும்பும் வகையில், பல்வேறு சர்வதேச ஊக்கத்தொகை வாய்ப்புகளும் இந்திய அரசின் நிதிகளும் அறிவியல் துறையில் கொட்டிக்கிடக்கின்றன.

> “கல்வி ஏன் அழகானது என்றால் அதை உங்களிடமிருந்து யாராலும் பறித்துவிட முடியாது.
>
> *—பி.பி. கிங்*”

## இளநிலை முதல் முதுநிலை அறிவியல் வரை

முதுநிலை அறிவியல் துறையில் சில ஊக்கத்தொகைகள் தகுதித் தேர்வுகள் மூலமும் பல ஊக்கத்தொகைகள் சமூகநீதியின் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, Post–Graduate Merit Scholarship For University Rank Holders வழியாக, இளநிலைக் கல்வியில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை பெறும் மாணவ, மாணவிகள் முதுநிலைக் கல்வி பயிலும்பொழுது, மாதம் 3,100 ரூபாய் வழங்கப்படுகிறது.

12 ஆம் வகுப்பு நிறைவுசெய்துவிட்டு, இளநிலை அல்லது ஒருங்கிணைந்த முதுநிலை கல்வி பயில்வோர் JEE நுழைவுத் தேர்வில் 10,000 இடங்களுக்குள் பெற்றிருந்தால் Inspire Scholarship வழியாக மாதம் 5,000 ரூபாய் பெறுவார்கள்; மேலும் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு வருடம் 80,000 ரூபாய் கூடுதலாகவும் வழங்குவார்கள், எல்லோருக்கும் கோடை கால ஆராய்ச்சிப் பணிகளுக்கெனத் தனியாக 20,000 ரூபாயும் கிடைக்கும்.

## முதுநிலை முதல் ஆய்வுக்காலம் வரை

இந்திய அளவில் Junior Research Fellow/Senior Research Fellow என்ற ஆய்வுக்கால ஊக்கத் தொகையாக, ஒன்றிய பல்கலைக்கழகங்கள், ஒன்றிய ஆராய்ச்சி மையங்கள், ஆராய்ச்சிக் கல்வி நிலையங்கள், மாநிலப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் தொடக்கத்திலேயே மாதம் 31,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

நன்றி: முனைவர் விஜய் அசோகன், இயக்குநர், முல்லை சர்வதேச அகாடமி

# 4 இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்புகள்

1980 ஆம் ஆண்டு வரை இந்திய உயர்கல்வியானது மொழிகள் மற்றும் கலையியல் துறைகளுக்கே முக்கியத்துவம் அளித்துவந்தது. இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (ஐஐடி), பிர்லா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் சயின்ஸ் (பிட்ஸ்), பிராந்திய பொறியியல் கல்லூரிகள் (ஆர்இசி), இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் (ஐஐஎம்) முந்தைய கல்வி முறையில் மாறுதல்களைக் கொண்டுவந்தன. இக்கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் வழிகாட்டியாக அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் அமைந்தன.

1980–களுக்குப் பிறகு உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அரசின் வசமிருந்த கல்வித்துறையில் தனியார் பங்களிப்பு அதிகரிக்க, உயர்கல்வி அபரிமிதமான வளர்ச்சியை எட்டியது.

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தித் திறனை (ஜிடிபி) அதிகரிப்பதில் மனிதவள மேம்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமிடுவதும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு வழிவகுப்பதும் உயர்கல்வி நிறுவனங்கள் என்றால் அது மிகையல்ல.

இந்தியாவில் உயர்கல்வி அமைப்பு அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

இந்தியாவில் தற்போது 888 பல்கலைக்கழகங்கள் உள்ளன. 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகள் உள்ளன. மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 542 ஆகவும், பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 3,500 ஆகவும், பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை 3,400 ஆகவும் உள்ளது.

சர்வதேச அளவில் உயர்கல்வி நிறுவனங்களில் முதன்மை மையங்களாகத் திகழும் ஐஐடி–க்கள் இந்தியாவில் 23 உள்ளன. நிர்வாகவியல் கல்வியை வழங்கும் கல்வி மையங்கள் (ஐஐஎம்) 20 இந்தியாவில் இயங்குகின்றன.

## தேசிய தரவரிசை

ஆண்டுதோறும் தேசியக் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியல் (National Institutional Ranking Framework) என்ஐஆர்எப் பட்டியல் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுவருகிறது. இதில் தொடர்ந்து 5ஆம் முறையாக சென்னை ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது. இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி), பெங்களூரு சிறந்த பல்கலைக்கழகமாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. சிறந்த மேலாண்மைக் கல்வி நிறுவனமாக ஐஐஎம் அகமதாபாத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 22 பல்கலைக்கழகங்கள் இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளன. 35 கலை அறிவியல் கல்லூரிகளும், 15 பொறியியல் கல்லூரிகளும், 8 மருத்துவக் கல்லூரிகளும் அந்தந்தப் பிரிவுகளில் 100 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளன.

ஒவ்வொரு கல்வி நிறுவனமும் 5 முக்கியக் காரணிகளை வைத்து மதிப்பிடப்படுகிறது. கற்றல், கற்பித்தல் மற்றும் அதற்கான வளங்கள் (Teaching Learning & Resources), ஆராய்ச்சி மற்றும் தொழில்முறைப் பயிற்சி (Research and Professional Practice), பட்டப்படிப்பு (Graduation Outcome), வெளிப்படுதல் மற்றும் உள்ளடக்கம் (Outreach & Inclusivity), கருத்து (Perception) ஆகிய காரணிகள் தரவரிசைப் பட்டியலைத் தீர்மானிக்கின்றன.

## சர்வதேசத் தரவரிசை

லண்டனைச் சேர்ந்த குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் எனப்படும் க்யூஎஸ் அமைப்பு உலக அளவில் கல்வி நிறுவனங்களை ஆய்வுசெய்து தரவரிசைப் பட்டியலை வெளியிடுகிறது. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் செயல்படும் 2,900 உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வுசெய்து தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. க்யூ.எஸ் தரவரிசைப் பட்டியலில் மும்பை ஐஐடி 147ஆம் இடத்தையும், அண்ணா பல்கலைக்கழகம் 427ஆம் இடத்தையும், சென்னை பல்கலைக்கழகம் 526ஆம் இடத்தையும் பிடித்துள்ளன. இந்தியாவிலிருந்து 45 பல்கலைக்கழகங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. பெங்களூருவில் இயங்கிவரும் இந்திய அறிவியல் கழகம் 225ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

## வேலை தரும் படிப்புகள்

வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி உள்ளிட்டவற்றை மையமாகக் கொண்டுதான் உயர்கல்வி பாடத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. எந்தப் பாடப் பிரிவு அதிக வேலைவாய்ப்பை வழங்குகிறதோ அந்தப் பாடப் பிரிவில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்வது இயல்பு.

அந்த வரிசையில் தற்போது செயற்கை நுண்ணறிவு (ஏஐ) எனப்படும் பாடப் பிரிவில் தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இந்தியாவில் மட்டுமே இத்துறையில் 45 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு அடுத்தபடியாக டேட்டா சயின்ஸ் (தரவு அறிவியல்) மற்றும் மெஷின் லேர்னிங் (இயந்திர கற்றல்) ஆகிய பாடப் பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

அனைத்துக்கும் மேலாக ஒரே சமயத்தில் இரண்டு பட்டப் படிப்புகளைப் படிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி முழு நேர வகுப்பில் ஒரு பட்டப் படிப்பும், தொலைதூரக் கல்வி முறையில் மற்றொரு பட்டப் படிப்பும் பயில்வதற்கான வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது.

## கலை அறிவியலில் உயர்கல்வி

பொறியியல், மருத்துவம் படிப்புகளுக்குத்தான் வேலைவாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்றில்லை. சட்டம் பயில்வது, மொழியியல் பாடங்கள் மற்றும் கலை அறிவியல், திரைப்படக் கலைப் படிப்புகளில் சேர்வதும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

இளங்கலைப் படிப்பு முடித்த பெரும்பாலான மாணவர்கள், உயர்கல்வியைத் தொடர வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். இந்தியாவில் உள்ள பல உயர்கல்வி நிறுவனங்கள் இத்தகைய வாய்ப்பை அளிக்கின்றன.

## நிர்வாகவியல் படிப்புகள்

நிர்வாகவியலில் பிஜி டிப்ளமா (பிஜிடிஎம்), முதுகலை வணிகவியல் நிர்வாகம் (எம்பிஏ), எம்டெக், புராஜெக்ட் மேனேஜ்மென்ட் உள்ளிட்ட படிப்புகள் வேலைவாய்ப்பை அள்ளித் தருபவையாக விளங்குகின்றன.

நிர்வாகவியல் படிப்புகளை அளிப்பதில் முன்னணிக் கல்லூரியாகத் திகழும் நர்ஸி முன்ஜீ நிர்வாகவியல் கல்வி மையம் (என்எம்ஐஎம்எஸ்) மும்பை, ஷிர்பூர், பெங்களூரு, ஹைதராபாத், இந்தூர், நவி மும்பை, துலே, சண்டீகர் ஆகிய இடங்களில் வளாகங்களை அமைத்துச் செயல்படுகிறது. சர்வதேச அளவில் பிரபலமான கல்வி மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதேபோல ஜாம்ஷெட்பூரில் உள்ள

சேவியர் நிர்வாகவியல் கல்வி மையம் (எக்ஸ்எல்ஆர்ஐ), சென்னையை அடுத்துள்ள ஒரகடத்தில் வளாகத்தை அமைத்துச் செயல்படுத்துகிறது. இந்தியாவில் உள்ள பழமையான (1949) நிர்வாகவியல் கல்வி மையங்களில் ஒன்றாக இது திகழ்கிறது. புனேயில் உள்ள சிம்பியாஸிஸ் சர்வதேச தன்னாட்சி பல்கலைக்கழகமும் சிறந்த கல்வி மையங்களுள் ஒன்றாகும்.

## சட்டம், தணிக்கை, தொல்லியல், திரை...

சட்டப் படிப்பில் சைபர் சட்டம், காப்புரிமைச் சட்டம், நிறுவனங்கள் சட்டம் எனச் சிறப்புப் பிரிவுகளில் கவனம் செலுத்துவதன் மூலம் தனித்துவமாகத் திகழ முடியும். சிறப்புப் பிரிவுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு எப்போதுமே தேவை இருக்கும். பெங்களூருவில் உள்ள தேசிய இந்திய சட்டப்பள்ளி (என்எல்எஸ்ஐயு), தேசிய சட்டப் பல்கலைக்கழகம் (என்எல்யு), புனேயில் உள்ள எம்ஐடி உலக சமாதானப் பல்கலைக்கழகம், ஹைதராபாதில் உள்ள நல்சார் சட்டப் பல்கலைக்கழகம் ஆகியன பிரபலமான சட்டப் பல்கலைக்கழகங்களாகத் திகழ்கின்றன.

இதேபோல சிஏ, சிஎஃப்ஏ, சிஎஃப்பி, சிஹெச்எஃப்சி உள்ளிட்ட தணிக்கை சார்ந்த படிப்புகளை முடிப்போருக்கும் வேலைவாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது. நிறுவனங்களில் வேலையை எதிர்நோக்கி இருக்காமல் தனியாகவே தொழில் தொடங்கும் படிப்பாக இவை திகழ்கின்றன.

இந்தியாவில் தொல்லியல் துறை படிப்புக்குப் பேர்பெற்றது புனேயில் உள்ள டெக்கான் கல்லூரி. நம் நாட்டின் பண்பாடு, வரலாறு ஆகியவற்றில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் தொல்லியல் துறை குறித்து இங்கே பயிலலாம். இந்தக் கல்லூரியில் தொல்லியல் துறைப் படிப்பு தொடங்கி ஏறத்தாழ 80 வருடங்கள் ஆகிவிட்டன. தொல்லியல் துறையில் முதுநிலைப் பட்டப் படிப்பும், முதுநிலைப் பட்டயப் படிப்பும் வழங்கப்படுகின்றன. இந்தக் கல்லூரியில் சிறப்பான நூலகம் ஒன்று செயல்படுகிறது. தொல்லியல் துறை தொடர்பான அரிதான நூல்கள் இங்கே கிடைக்கின்றன.

திரைப்படத் துறையில் விருப்பமுள்ளவர்கள் இந்தியாவின் புகழ்பெற்ற புனே திரைப்படக் கல்லூரியில் சேரலாம். ஒன்றிய அரசின் தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இந்தக் கல்லூரி 1960ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. இயக்கம், நடிப்பு, ஒளிப்பதிவு, ஒலி அமைப்பு, எடிட்டிங் உள்ளிட்ட பல பிரிவுகளில் படிப்புகள் உள்ளன. இந்தப் பிரிவுகளில் சேர பட்டப் படிப்பு முடித்திருக்க வேண்டும். இணையவழியில் விண்ணப்பிக்கலாம். தேசிய அளவில் நடத்தப்படும் JET தேர்வெழுதி வெற்றிபெற்று கல்லூரியில் சேர்க்கை பெறலாம். புனே திரைப்படக் கல்லூரி மாணவர் என்பது இந்திய அளவில் திரைப்படத்துறையில் ஒருவருக்கு நல்ல வாய்ப்புகளைப் பெற்றுத்தருவது திண்ணம்.

மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளில் இளங்கலைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் வேலைவாய்ப்புகளை அளிக்கும் நிறுவனங்கள் முதுகலைப் பட்டதாரிகளைத்தான் விரும்புகிறது. மேலும், சிறப்புக் கல்வி மையங்களில் முதுகலை பயின்றவர்கள் திறமையானவர்களாகத் தங்களது தொழிலுக்குச் சிறப்பானவர்களாக இருப்பதாலும் இந்த நிலை பரவலாக அதிகரித்துள்ளது. எனவே, முதுகலைப் படிப்புகளைத் தேர்வுசெய்து படிப்பது மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கச் செய்யும்.

வெளிநாடு சென்று பயில்வதன் மூலம்தான் சிறப்பான கல்வியைப் பெற முடியும் என்ற நிலை மாறி இந்திய பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் சிறப்பான பாடத்திட்டங்களை வகுத்துள்ளன. உயர்கல்வியைப் பொறுத்தமட்டில் பிற நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வழிகாட்டும் வகையில் பாடத்திட்டங்களைக் கொண்டுள்ளது. இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. பிற நாட்டினரும் இந்தியக் கல்வி மையங்களைத் தேர்வுசெய்வதிலிருந்தே இந்தியக் கல்வியின் தரத்தை உணரலாம்.

நன்றி: எம்.ரமேஷ், ஊடகவியலாளர்

# 5 கல்லூரி மாணவர்களுக்கான அரசு உதவித் திட்டங்கள்

உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ஒன்றிய, மாநில அரசுகள் சார்பில் பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாணவர்களுக்குப் பயன்படும் முக்கியக் கல்வி உதவித்தொகை விவரங்கள் குறித்த அறிமுகம் இது.

## தொழில் படிப்புகளில் கட்டணச் சலுகை

அரசு, தனியார் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள் போன்றவற்றுக்கு அரசு நடத்தும் ஒற்றைச்சாளர மாணவர் சேர்க்கை மூலம் சேர வேண்டும். இப்படி அந்தப் படிப்புகளில் சேரும் மாணவர்களின் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லையென்றால், அந்த மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பதை ஊக்குவிப்பதற்காகச் சாதிப் பாகுபாடின்றியும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமலும் அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணச் செலவை அரசே ஏற்றுக்கொள்கிறது. அதாவது, இதுவரை பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்விக் கட்டணச் செலவை மட்டும் அரசு ஏற்கும்.

கல்விக் கட்டணம் என்பது அரசு, அரசு உதவிபெறும் தொழில் கல்லூரிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும் சுயநிதி தொழில் கல்லூரிகளுக்குத் தனியார் சுயநிதி தொழில் கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்துக்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணத்தையும் குறிக்கும். பல்கலைக்கழகங்கள் நடத்தும் பாடப் பிரிவுகளுக்கு அந்தப் பல்கலைக்கழகங்கள் நிர்ணயிக்கும் கட்டணத்தையும் குறிக்கும்.



தமிழ்நாட்டைச் சேர்ந்த, முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கே இந்தத் திட்டம் பொருந்தும். இந்தச் சலுகையைப் பெறத் தங்களுடைய குடும்பத்தில் பட்டதாரிகளே இல்லை என்பதை உறுதிசெய்யும் வகையில் மாணவர் வசிக்கும் பகுதியின் வருவாய்த் துறையின் தலைமையிடத் துணை வட்டாட்சியர் தகுதிக்குக் குறையாத அலுவலரிடம் சான்றிதழ் பெற்று அளிக்க வேண்டும்.

மாணவர்கள் தொழிற்கல்வி சேர்க்கைக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போதே, விண்ணப்பத்துடன் குடும்பத்தில் முதன்முதலாகப் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர் என்ற சான்றிதழையும் உறுதிமொழிப் பத்திரத்தையும் அளிக்க வேண்டும். ஒற்றைச்சாளரக் கலந்தாய்வு மூலம் அரசு, அரசு உதவிபெறும், சுயநிதித் தனியார் பொறியியல் கல்லூரிகளில் பி.இ., பி.டெக். படிப்புகளில் நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேரும் முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கும் கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படும் என்று தமிழ்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளிலும் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் சுய ஆதரவுப் படிப்புகளில் (Self Supporting Course) படிக்கச் சேரும் மாணவர்களுக்கும் அகில இந்தியத் தொழில்நுட்பக்

கல்வி கவுன்சிலின் முதல் தலைமுறைப் பட்டதாரிக்கான கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கல்லூரியிலும் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் படிக்கச் சேரும் 5 சதவீத மாணவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படும். இந்தச் சலுகையைப் பெற விரும்பும் மாணவர்களின் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ரூ.4.5 லட்சத்துக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

## மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் பட்ட, முதுநிலைப் பட்டப் படிப்புகளில் படிக்கும் 2,000 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு ஒன்றிய அரசு கல்வி உதவித்தொகை வழங்குகிறது. இதில் 30 சதவீதம் மாற்றுத்திறனாளி மாணவிகளுக்கு வழங்கப்படும்.

தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் இளநிலைப் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.2,500 வீதம் பராமரிப்புக் கட்டணமாக ஒரு கல்வி ஆண்டுக்கு (பத்து மாதங்களுக்கு) வழங்கப்படும். தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.3,000 வீதம் பராமரிப்புச் செலவுக் கட்டணமாக, ஒரு கல்வி ஆண்டுக்கு (பத்து மாதங்களுக்கு) வழங்கப்படும். அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் திரும்பப் பெற முடியாத கட்டணங்களை மாணவர்களிடமிருந்து வசூலிக்கின்றன. அத்தகைய கட்டணங்களையும் இந்த உதவித்தொகையாக மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம். மேலும் புத்தகம், எழுதுபொருள்கள் வாங்குவதற்காகப் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.6 ஆயிரமும், முதுநிலைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும். இவை மட்டுமின்றி மாற்றுத்திறனாளி மாணவருக்கு உதவிக் கருவிகள், உபகரணங்கள் வாங்குவதற்குக் கூடுதலாக நிதியுதவி வழங்கப்படும்.

இந்த உதவித்தொகை திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புபவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

கண் பார்வையற்ற/ காது கேளாத பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி மாணவர்களுக்கு எடிட்டிங் சாஃப்ட்வேருடன் கூடிய மடிக்கணினி, பிரெய்லி முறையிலான தட்டச்சுக் கருவி, கைபேசி, காது கேட்கும் கருவி வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்படும். இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

விவரங்களுக்கு: **www.nhfdc.nic.in**

## தேசிய நிதி உதவித்தொகை

நேஷனல் ஃபண்ட் முறையில் 500 பேருக்குத் தொழில்முறை, தொழில்நுட்ப உயர்கல்விப் படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படும். இணையவழியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

பட்டப் படிப்பு, அதற்கும் மேற்பட்ட படிப்புகளை விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு, பராமரிப்புத் தொகையாக மாதம் 1000 ரூபாயும் மற்றவர்களுக்கு மாதம் 700 ரூபாயும் வழங்கப்படும். டிப்ளமோ படிப்பு, சான்றிதழ் படிப்புகளைப் படிப்பவர்கள் விடுதி மாணவர்களாக இருந்தால் மாதம் 700 ரூபாயும் மற்றவர்களுக்கு மாதம் 400 ரூபாயும் வழங்கப்படும். அத்துடன், ஓராண்டுக்கான படிப்புக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக ரூ.10,000 வழங்கப்படும்.

பார்வைத் திறனற்ற, கேட்கும் திறனற்ற மாணவர்களுக்கான எடிட்டிங் சாஃப்ட்வேருடன் கூடிய கணினி வாங்க நிதியுதவி செய்யப்படும். பெருமூளைவாதக் குறைபாடு (Cerebral Palsy) உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குத் தேவையான மென்பொருளைப் பெற உதவித்தொகை வழங்கப்படும்.

இந்தக் கல்வி உதவித்தொகையைப் பெற விண்ணப்பிக்கும் மாணவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 1.80 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விவரங்களுக்கு: **www.nhfdc.nic.in**

## மனிதவள மேம்பாட்டு உதவித்தொகை

வருவாய் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த, படிப்பில் சிறந்த மாணவர்கள், கல்லூரியில் படிக்க ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் கல்வி உதவித்தொகை வழங்குகிறது.

பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல், வணிகவியல் உள்படப் பல்வேறு இளநிலைப் பட்டப் படிப்புகளில் படிக்கும் மாணவர்கள் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம். தொலைநிலைக் கல்வி மூலம் இளநிலைப் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்கள், இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்க முடியாது.

நாடு முழுவதும் 82 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகையைப் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் 50 சதவீதத்தினர், அதாவது 41 ஆயிரம் மாணவிகளுக்கு இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

இந்த உதவித்தொகையைப் பெறத் தேர்வுசெய்யப்படும் இளநிலைப் பட்ட மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10,000 வீதம் முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அதாவது, மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆண்டில் பத்து மாதங்களுக்கு வழங்கப்படும். அதே பாடப்பிரிவில் முதுநிலைப் படிப்பில் தொடர்ந்து படித்தால், அந்த மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.20,000 வீதம் வழங்கப்படும். தொழில் படிப்புகளில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு நான்காம், ஐந்தாம் ஆண்டுகளில் மாதம் ரூ.20,000 வீதம் வழங்கப்படும். அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை இந்த உதவித்தொகை வழங்கப்படும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விவரங்களுக்கு: **www.scholarships.gov.in**

## அறிவியல் மாணவர்களுக்கு உதவித்தொகை

> "ஒருவர் பள்ளியில் படித்ததை மறந்த பிறகு எது எஞ்சியிருக்கிறதோ அதுவே கல்வி."
>
> *– ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்*

அடிப்படை அறிவியல் ஆராய்ச்சியில் ஆர்வமிக்க திறமையான மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை, கிஷோர் வைகியானிக் புரோஸ்தன் யோஜனா (KVPY) என்ற கல்வி உதவித் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறது. பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் (IISc) மூலம் இந்த உதவித்தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வேதியியல், இயற்பியல், கணிதம், புள்ளியியல், பயோ கெமிஸ்ட்ரி, மைக்ரோ பயாலஜி, செல் பயாலஜி, சூழலியல், மாலிக்கியுலர் பயாலஜி, தாவரவியல், விலங்கியல், பிசியாலஜி, பயோ டெக்னாலஜி, நியூரோ சயின்சஸ், பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ், மரைன் பயாலஜி, ஜியலாஜி, ஹியூமன் பயலாஜி, ஜெனிடிக்ஸ், பயோ மெடிக்கல் சயின்சஸ், அப்ளைடு பிசிக்ஸ், மெட்டீரியல் சயின்ஸ், என்விரான்மெண்டல் சயின்ஸ், ஜியோ பிசிக்ஸ் ஆகிய பாடப்பிரிவுகளில் ஏதாவது ஒரு பாடப்பிரிவில் இளநிலைப் பட்டப் படிப்பிலோ ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்பிலோ சேரும் மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை கிடைக்கும்.

இந்த உதவித்தொகையைப் பெற பிளஸ் ஒன், பிளஸ் டூ படிக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். பட்டப் படிப்பில் முதலாமாண்டில் சேர்ந்துள்ள மாணவர்களும் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

இந்த உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குத் திறனறித் தேர்வு நடத்தப்படும். பிளஸ் டூ பாடநிலையில் கேள்விகள் அமையும். பாடங்கள் குறித்த புரிதல், பகுப்பாய்வுத் திறன் ஆகியவற்றைச் சோதனை செய்யும் வகையில் கேள்விகள் கேட்கப்படும். எழுத்துத் தேர்வில்

தகுதிபெறும் மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். அதன் அடிப்படையில், இந்தக் கல்வி உதவித்தொகையைப் பெற மாணவர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள்.



இந்த உதவித்தொகையைப் பெறும் மாணவர்களுக்குக் கோடை விடுமுறையில் கொல்கத்தா, புனே, மொஹாலி, போபால், திருவனந்தபுரம் ஆகிய நகரங்களில் உள்ள இந்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்வி நிறுவனங்களில் ஒரு வாரப் பயிற்சி அளிக்கப்படும். மாணவர்களிடம் அறிவியல் ஆராய்ச்சித் திறமையை வளர்க்க இந்தப் பயிற்சி பயன்படும். இந்த உதவித்தொகையைப் பெறத் தேர்வுசெய்யப்படும் மாணவர்களுக்கு, அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள்வரை உதவித்தொகை வழங்கப்படும்.

பி.எஸ்சி., பி.எஸ்., ஒருங்கிணைந்த எம்.எஸ்சி. படிப்பில் முதல் மூன்று ஆண்டுகள்வரை மாணவர்களுக்கு மாதம் ரூ.5,000 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். அத்துடன் இதர படிப்புச் செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.20,000 உதவித்தொகை வழங்கப்படும். எம்.எஸ்சி. முதல், இரண்டாம் ஆண்டு, ஒருங்கிணைந்த எம்.எஸ்சி., எம்.எஸ். படிப்புகளில் நான்காம், ஐந்தாம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.7,000 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். அத்துடன், இதரப் படிப்புச் செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ. 28,000 உதவித்தொகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **www.kvpy.iisc.ernet.in**

## பட்டியலின மாணவர்களுக்கு உதவித்தொகை

பட்டியலின, சீர்மரபினர், பழங்குடியினர் (Scheduled, Denotified and Tribal communities), நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், பாரம்பரியக் கலைஞர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் முதுநிலைப் படிப்போ அல்லது பிஎச்.டி. ஆய்வுப் படிப்போ படிக்க விரும்பினால், ஒன்றிய அரசின் சமூகநீதி அமைச்சகம் கல்வி உதவித்தொகை வழங்குகிறது.

பிஎச்.டி. படிக்க விரும்பும் மாணவர்கள் முதுநிலைப் பட்டப் படிப்பில் குறைந்தது 55 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதுநிலைப் பட்டப் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்களும் இளநிலைப் பட்டப் படிப்பில் குறைந்தது 55 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்த உதவித்தொகையை வழங்குவதில், அனுபவமிக்க மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் மாணவர்கள் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.6 லட்சத்துக்கு மேல் இருக்கக் கூடாது.

அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்தில் படிக்க தேர்வு பெற்றவர்கள், இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம். இதேபோல அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்தில் சேர்க்கை பெறுவதற்காக முயன்றுவரும் மாணவர்களும் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பிஎச்.டி. படிக்கச் சேரும் மாணவர்களுக்கு அதிகபட்சம் 4 ஆண்டுகள்வரை, முதுநிலைப் பட்டப் படிப்பில் சேரும் மாணவர்களுக்கு அதிகபட்சம் 3 ஆண்டுகள்வரை உதவித்தொகை வழங்கப்படும்.

பல்கலைக்கழகப் படிப்புக்கான படிப்புக் கட்டணத்தை ஒன்றிய அரசின் சமூகநீதி அமைச்சகம் வழங்கும். பயணச் செலவு, புத்தகங்கள், படிப்பு தொடர்பான சாதனங்கள், கல்விச் சுற்றுலா உள்ளிட்டவற்றுக்காகத் தனியே உதவித்தொகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **www.socialjustice.nic.in**

## பட்டியலின, பழங்குடி மாணவர்களின் முதுநிலைப் படிப்புக்கு உதவித்தொகை

பொறியியல், தொழில்நுட்பம், மருந்தாளுநர் மேலாண்மை (Pharamacy) உள்ளிட்ட தொழில் பாடப்பிரிவுகளில் முதுநிலைப் படிப்புகளில் படிக்கும் பட்டியலின, பழங்குடியின மாணவர்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு உதவித்தொகை வழங்குகிறது. ஆயிரம் மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை கிடைக்கும்.

எம்.இ., எம்.டெக். படிப்புகளைப் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.7,800 வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். மற்ற படிப்புகளில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு ரூ.4,700 வீதம் வழங்கப்படும். இது தவிர எம்.இ., எம்.டெக். படிக்கும் மாணவர்களின் இதர செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.15,000 வீதமும் மற்ற மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10,000 வீதமும் உதவித் தொகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **www.ugc.ac.in/pgsprof/**

## மாணவிகளுக்கு உதவித்தொகை

குடும்பத்தில் ஒரே பெண் குழந்தையாக இருப்பவர், பொறியியல் தொழில்நுட்ப டிப்ளமோ, பொறியியல் படிப்புகளைப் படிப்பவர்களுக்கு ஒன்றிய மனித வள மேம்பாட்டுத் துறையும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலும் இணைந்து பிரகதி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகையை வழங்குகின்றன. அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் அங்கீகரித்துள்ள கல்வி நிலையங்களில் பட்டப் படிப்போ டிப்ளமோ படிப்போ படிக்கும் முதலாமாண்டு மாணவிகள் இந்தத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறலாம். பட்டப் படிப்பு படிக்கும் 2 ஆயிரம் மாணவிகளுக்கும் டிப்ளமோ படிக்கும் 2 ஆயிரம் மாணவிகளுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவிகளுடைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கு மேல் இருக்கக் கூடாது. படிப்புக் கட்டணமாக அதிகபட்சம் ரூ.30,000 வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும். அத்துடன், இதர செலவுகளுக்காக மாதம் ரூ.2,000 வீதம் 10 மாதங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். மாணவிகளுக்குப் படிப்புக் கட்டணச் சலுகை இருக்கும்பட்சத்தில், இந்த ரூ.30,000 உதவித்தொகையைப் புத்தகங்கள் வாங்கவோ, கணினி வாங்கவோ பயன்படுத்திக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு: **www.aicte-pragati-saksham-gov.in**

## இந்திரா காந்தி கல்வி உதவித்தொகை

குடும்பத்தில் ஒற்றைப் பெண் குழந்தையாகப் பிறந்தவர்கள் முதுநிலைப் படிப்புகளைப் படிக்க இந்திரா காந்தி கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இந்த உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவிகள், குடும்பத்தில் ஒற்றைப் பெண் குழந்தையாக இருக்க வேண்டும். முதுநிலைப் பட்டப் படிப்பில் சேர அனுமதி பெற்றவராக இருக்க வேண்டும். 30 வயதுக்குள் இருக்க வேண்டும். தொலைநிலைக் கல்வி மூலம் முதுநிலைப் படிப்பு படிக்கிறவர்கள் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்க முடியாது.

## சுவாமி விவேகானந்தா உதவித்தொகை

சமூக அறிவியல் பாடங்களில் பிஎச்.டி. ஆய்வு மேற்கொள்ளும் ஒற்றைப் பெண் குழந்தைகளுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு உதவித்தொகை அளிக்கிறது. சுவாமி விவேகானந்தா கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இந்த உதவித்தொகை ஆண்டுக்கு 300 மாணவிகளுக்கு வழங்கப்படும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ரூ.25,000 வீதம் உதவித்தொகையும் இதர செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.10,000 வீதமும் அளிக்கப்படும். இதர ஆண்டுகளில் மாதந்தோறும் ரூ.28,000 வீதம் உதவித்தொகையும் ஆண்டுக்கு ரூ.20,500 வீதமும் வழங்கப்படும்.

பெற்றோருக்கு ஒரே பெண் குழந்தையாக இருக்க வேண்டும். ஒரு ஆண், ஒரு பெண் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உதவித்தொகை கோரி விண்ணப்பிக்க முடியாது. இரட்டைப் பெண் குழந்தைகளாகப் பிறந்தவர்களாக இருந்தால், இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

சமூக அறிவியல் குறித்த முழுநேர ஆய்வுப் படிப்பில் முழு நேரமாகச் சேர்ந்திருக்க வேண்டும். பட்டியலினத்தவர், பழங்குடியினர், ஓ.பி.சி. பிரிவினர், மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பில் 5 ஆண்டு தளர்வு உண்டு. இந்த உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவிகள் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

விவரங்களுக்கு: **www.ugc.ac.in/svsgc/**

## கணிதப் பட்டதாரிகளுக்கு உதவித்தொகை

கணிதப் பாடத்தில் முதுநிலைப் படிப்புகளைப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அணுசக்தித் துறையின் கீழ் இயங்கும் 'National Board of Mathematics' கல்வி உதவித்தொகை வழங்குகிறது.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் கணிதத்தில் எம்.ஏ., எம்.எஸ்சி. படிக்கும் மாணவர்கள் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம். பி.ஏ., பி.எஸ்சி. பட்டப் படிப்புகளில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது பி.ஏ., பி.எஸ்சி. இறுதியாண்டுத் தேர்வு எழுதி ஜூலையில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெறுவதை எதிர்பார்த்து இருக்கும் மாணவர்களும் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம். பி.எஸ்சி. ஆனர்ஸ் படிப்பை முடித்தவர்கள் குறைந்தது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பி.எஸ்சி. ஆனர்ஸ் இறுதியாண்டுத் தேர்வு எழுதித் தேர்வு முடிவுக்காகக் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். ஒருங்கிணைந்த எம்.எஸ்சி. படிப்பில் முதல் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளை முடித்த மாணவர்களும், தேர்வுகளில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.



இந்த உதவித்தொகையைப் பெறத் தேர்வுபெறும் மாணவர்களுக்கு மாதம் ரூ.6,000 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் கணிதத்தில் எம்.ஏ., எம்.எஸ்சி. படிப்பில் சேர்ந்து படித்துவரும் மாணவர்களுக்கு மட்டும், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்கள் மூலமாக இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

இந்த உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வு நடத்தப்படும். பொதுவாக அல்ஜீப்ரா, அனாலிசிஸ் உள்ளிட்ட கணிதப் பாடப் பிரிவுகளிலிருந்து கேள்விகள் கேட்கப்படும். இது தவிர, இளநிலைப் பட்ட நிலையில் கணிதப் பாடத்தின் மற்ற பகுதிகளிலிருந்தும் கேள்விகள் கேட்கப்படும். இரண்டரை மணி நேரம் நடைபெறும் இந்தத் தேர்வில் குறுகிய விடைகள் அளிக்கும் வகையில் கேள்விகள் இருக்கும். எழுத்துத் தேர்வில் தகுதிபெற்ற மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, தகுதியுடையவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **www.imsc.res.in / www.nbhm.dae.gov.in**

## சிறந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை

உயிர் அறிவியல், இயல் அறிவியல், வேதி அறிவியல், புவி அறிவியல், கணித அறிவியல், சமூக அறிவியல், வணிகவியல், மொழிப் பாடங்களை எடுத்துப் படித்துப் பல்கலைக்கழக அளவில் இளநிலைப் பட்டப் படிப்புகளில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்கள் முதுநிலைப் பட்டப் படிப்பைப் படிப்பதற்கு, பல்கலைக்கழக மானியக் குழு உதவித்தொகை (Post Graduate Merit Scholarship) வழங்குகிறது. இளநிலைப் பட்டப் படிப்புகளில் குறைந்தது 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். இந்த உதவித்தொகையைப் பெறும் மாணவர்கள் 30 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். தொலைநிலைக் கல்வி மூலம் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள், இந்த உதவித்தொகை கோரி விண்ணப்பிக்க முடியாது. தேர்வுசெய்யப்படும் 3 ஆயிரம் மாணவர்களுக்கு மாதம் ரூ.3,100 வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **www.ugc.ac.in**

## மாற்றுத்திறனாளிகள் தொழில்நுட்பப் படிப்பு உதவித்தொகை

ஒன்றிய மனித வள மேம்பாட்டுத் துறையும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கவுன்சிலும் இணைந்து Saksham Scholarship திட்டத்தை வழங்குகின்றன. அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் அங்கீகரித்துள்ள கல்வி நிலையங்களில் பட்டப் படிப்போ டிப்ளமோ படிப்போ படிக்கும் முதலாமாண்டு மாற்றுத்திறனாளிகள் இந்தத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறலாம். பட்டப் படிப்பு படிக்கும் 500 பேருக்கும் டிப்ளமோ படிக்கும் 500 பேருக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

உதவித்தொகை பெற விரும்பும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கு மேல் இருக்கக் கூடாது. படிப்புக் கட்டணமாக அதிகபட்சம் ரூ.30,000 வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும். அத்துடன், இதர செலவுகளுக்காக மாதம் ரூ.2,000 வீதம் 10 மாதங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். மாணவ, மாணவிகளுக்குப் படிப்புக் கட்டணச் சலுகை இருக்கும்பட்சத்தில், இந்த ரூ.30,000 உதவித்தொகையைப் புத்தகங்கள் வாங்கவோ, கணினி வாங்கவோ பயன்படுத்திக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு: **www.scholarships.gov.in**

## சிறுபான்மை மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை

மேல்நிலைப் பள்ளி, பாலிடெக்னிக்குகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி மையங்கள் போன்றவற்றில் உயர்கல்வி படிக்க விரும்பும் சிறுபான்மையின மாணவர்களுக்காக

ஒன்றிய அரசு Post Matric Scholarship வழங்குகிறது. இதில் 30 சதவீத இடங்கள் மாணவிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவர்கள், தங்களது முந்தைய தேர்வுகளில் குறைந்தது 50 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குடும்பத்தினருக்கு ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்குள் இருக்க வேண்டும்.

தொழில்நுட்ப, தொழிற்பயிற்சிப் படிப்புகளில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10,000 வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இளநிலை முதுநிலைப் பட்டப் படிப்புகள் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.3,000 வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குப் பராமரிப்புச் செலவுக்காகத் தனியே உதவித்தொகை வழங்கப்படும்.

> படித்ததைப்
> பிரதிபலிக்காமல் வெறுமனே
> படித்துக்கொண்டே இருப்பது
> என்பது ஜீரணிக்காமல்
> சாப்பிட்டுக்கொண்டே
> இருப்பதைப் போன்றது.
>
> *– எட்மண்ட் பர்க்*

படிப்பில் சிறந்து விளங்கும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை (Merit cum means based scholarship) வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவர்கள், தங்களது முந்தைய தேர்வுகளில் குறைந்தது 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குடும்பத்தினருக்கு ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்குள் இருக்க வேண்டும். ஆண்டுக்கு 60 ஆயிரம் மாணவர்களுக்கு இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதில் 30 சதவீத இடங்கள் மாணவிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

படிப்புச் செலவுக்காக ஆண்டுக்கு ரூ.20,000 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். பாரமரிப்புச் செலவுக்காக விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வீதமும், வீட்டில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.500 வீதமும் ஆண்டில் பத்து மாதங்களுக்கு வழங்கப்படும். IIT, NIT, IIIT போன்ற முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு அந்தப் படிப்புக்கான கட்டணம் முழுவதும் வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **www.scholarships.gov.in**

## பட்டியலின மாணவர்களுக்கு உதவித்தொகை

பட்டியலின மாணவர்களுக்கு உயர்தர கல்வித் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு உதவித்தொகை வழங்குகிறது. முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களில் சேரும் பட்டியலின மாணவர்களுக்கு ஒன்றிய சமூகநீதி அதிகாரமளித்தல் அமைச்சகம் மூலம் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. படிப்புக் கட்டணம், இதரக் கட்டணங்கள் வழங்கப்படும். தனியார் கல்வி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.2 லட்சம்வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும். தனியார் Flying Club களில் விமானிப் பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.3.74 லட்சம்வரை வழங்கப்படும். இது தவிர வாழ்க்கைச் செலவுகளுக்காக மாதம் ரூ.2,200 வீதம் வழங்கப்படும். புத்தகங்கள், எழுதுபொருள் வாங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.3,000 வழங்கப்படும். கணினி உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.45,000 ஒரு முறை வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவர்களின் குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.4.5 லட்சத்துக்குள் இருக்க வேண்டும்.

விவரங்களுக்கு: **www.scholarships.gov.in**

## பழங்குடி மாணவர்களுக்கு உதவித்தொகை

எம்.பில்., பிஎச்.டி. படிக்கும் 750 மாணவர்களுக்கு ஒன்றியப் பழங்குடியினர் அமைச்சகம் ஆராய்ச்சி உதவித்தொகை வழங்குகிறது. இளநிலை, முதுநிலைப் பட்ட மாணவர்கள் ஆயிரம் பேருக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதில் 30 சதவீதம் பேர் மாணவிகள்.

எம்.பில். படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.25,000 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். அத்துடன் கலைப்புலம், சமூக அறிவியல் பாட மாணவர்களுக்கு இதர செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.10,000 வழங்கப்படும். அறிவியல், பொறியியல், தொழில்நுட்ப மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.12,000 வழங்கப்படும். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் பார்வைத் திறனற்ற மாணவர்களுக்கும் இத்துடன் கூடுதலாக மாதம் ரூ.2,000 (படித்துக்காட்டவும் உடன் வரவும் உதவியாளர் வைத்துக்கொள்வதற்காக) வீதம் வழங்கப்படும்.

பிஎச்.டி. படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.28,000 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். அத்துடன் கலைப்புலம், சமூக அறிவியல் பாட மாணவர்களுக்கு இதர செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.20,500 வழங்கப்படும். அறிவியல், பொறியியல், தொழில்நுட்ப மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.25,000 வழங்கப்படும். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் பார்வைத் திறனற்ற மாணவர்களுக்கும் இத்துடன் கூடுதலாக மாதம் ரூ.2,000 (படித்துக்காட்டவும் உடன் வரவும் உதவியாளர் வைத்துக்கொள்வதற்காக) வீதம் வழங்கப்படும்.

இளநிலை, முதுநிலைப் பட்டப் படிப்பு படிக்கும் பழங்குடியின மாணவர்களுக்குப் படிப்புக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்கள் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். அத்துடன் வாழ்க்கைச் செலவுக்காகவும் கணினி வாங்குவதற்கும் உதவித்தொகை அளிக்கப்படும்.

விவரங்களுக்கு: **www.scholarships.gov.in**

## தொழிலாளர் குழந்தைகளுக்கு உதவித்தொகை

மாத வருமானம் ரூ.10,000 குறைவாக உள்ள பீடித் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஒன்றியத் தொழிலாளர் நலத்துறை கல்வி உதவித்தொகை வழங்குகிறது. மாதம் ரூ.8,000 குறைவான வருமானம் உள்ள திரைப்படத் தொழிலாளர்களுக்கும் இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்தக் கல்வி உதவித்தொகையைப் பெற விரும்பும் மாணவர்கள் தேர்வில் முதன்முறையிலேயே தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தொலைநிலைக் கல்வி மூலம் படிக்கும் மாணவர்கள் இந்த உதவித்தொகையைப் பெற விண்ணப்பிக்க முடியாது. பள்ளிப் படிப்பிலிருந்து பட்டப் படிப்புவரை இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

விவரங்களுக்கு: **www.scholarship.gov.in**

நன்றி: பொன்.தனசேகரன், 'இந்து தமிழ்' இயர்புக் 2020



# 6 உலக நாடுகள் தரும் ஊக்கத்தொகைகள்

உலகில் உள்ள பல்வேறு நாடுகளும் தங்களது அடுத்த 25–50 ஆண்டுகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள், நாட்டின் வளர்ச்சி, தொழிற்சாலைகளின் உருவாக்கம் தொடர்பாகத் திட்டமிட்டு உயர்கல்வியை வடிவமைத்து வருகின்றன. ஆகவே, உயர்கல்வி நிறுவனங்களில் அதற்கேற்றவாறு பாடத்திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் அதற்கேற்ற வகையிலான நிதி ஒதுக்கல் எனக் கொள்கைகளை வடிவமைத்து வருகின்றன.

உலகளவிலான உயர்கல்வி வாய்ப்புகளோடு பெருமளவிலான ஊக்கத்தொகை வாய்ப்புகளும் மாணவ, மாணவிகளுக்கெனப் பன்னாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஒதுக்கியுள்ளன. இத்தகையதோர் உலகச் சூழலில், ஒரு காலத்தில் மென்பொருள் நிறுவனங்களின் அதிவேகமான வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டு மாணவ, மாணவிகள் பெரிதும் கைகொடுத்ததுபோல, உலக நாடுகளின் உயர்கல்விக்கான நமது எல்லையும் சுருங்கி நம்மருகில் வந்துசேரும் காலம் இது.

## உலக நாடுகளில் இந்திய மாணவ, மாணவியர்

மிகச் சமீபத்திய செய்தி அறிக்கைகள், ஏற்கெனவே இந்திய மாணவ, மாணவிகள் உலகெங்கும் பறக்கத் தொடங்கிவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றன.

உதாரணமாக, 2015–2016இல் அமெரிக்காவிற்குச் சென்ற இந்திய மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாக 1,75,000. அதே காலகட்டத்தில், ஐரோப்பியாவின் 32 நாடுகளுக்கும் தோராயமாக 55,000 பேர் சென்றுள்ளனர்.

2016–2021 ஆண்டுகளின் புள்ளிவிவரத்தின்படி, அந்த 5 ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக 22 லட்சம் இந்திய மாணவர்கள் தோராயமாக 83 நாடுகளுக்குக் கல்வி கற்பதற்காகப் பறந்துசென்றுள்ளனர். (Times of India, May 2021), இதில் ஆந்திரா, பஞ்சாப், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களிலிருந்து 56 சதவீத மாணவர்கள் அயல்நாடுகளுக்குக் கல்வி கற்கச் சென்றுள்ளனர்.

கல்விக்காக மட்டுமன்றி, அறிவியல்/தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி வாய்ப்புகள், பேராசிரியர், விஞ்ஞானி போன்றவற்றுக்காகவும் இந்தியர்கள் பயணிக்கத் தொடங்கிவிட்டனர். நார்வே நாட்டிற்கு முனைவர் பட்ட ஆய்விற்காக நான் பயணித்த காலமான 2008இல் நார்வேயில் உயர்கல்வி, ஆராய்ச்சிப் பணிகளில், பொறியியல் நிறுவனங்களில் இருந்த இந்தியர்களின் எண்ணிக்கை 2022இல் பன்மடங்கு பல்கிப்பெருகியிருப்பதைக் காண முடிகிறது.

முதுநிலை அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பட்டப் படிப்பிற்கும் சீனா, ஜப்பான், தென்கொரிய நாடுகள் அயல்நாட்டினருக்கான வாய்ப்புகளையும் ஊக்கத்தொகையையும் அதிகரித்துள்ளன. அதனால், இந்த நாடுகளில், ஏனைய நாடுகளைக் காட்டிலும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை பல்கிப்பெருகிவருகிறது. கொரோனா பேரிடர் காலத்தில்கூட, அதாவது 2021இல், சீன நாட்டில் மட்டும் தோராயமாக 29,000 இந்திய மாணவ, மாணவிகள் கல்வி கற்று வருவதைச் சில புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன (Times of India, May 2021).

அதேபோன்று, ஜூலை 2021 புள்ளிவிவரத்தின்படி, ஐரோப்பிய நாடுகளுக்கு உயர்கல்விக்காகச் சென்ற இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 1,60,000 என உயர்ந்திருக்கிறது (Deccan Herald, May 2021). அதிலும், பொதுவாக அதிக எண்ணிக்கையைப் பெற்றுவந்த இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து நாடுகளைக் கடந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா, ஜார்ஜியா, நெதர்லாந்து, இத்தாலி என

இந்திய மாணவ மாணவிகள் தேர்ந்தெடுக்கும் நாடுகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது.

மிகச் சமீபத்தில், ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கு அடிப்படையாக மூன்று காரணங்களைச் சொல்ல முடியும்.

1. அதிக அளவிலான ஆங்கிலவழிப் பட்டயப் படிப்புகளை ஐரோப்பிய நாடுகளின் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் அறிமுகப்படுத்தத் தொடங்கியுள்ளன. வளர்ந்துவரும் தொழில்துறைகள், நிறுவனங்கள், சேவைத்துறைகளைக் கணக்கில் கொண்டு, அதிகப்படியான, அயல்நாட்டு இளம் பொறியியலாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் இந்நாடுகளுக்குத் தேவைப்படுகின்றனர். Organization for Economic Co-operation and Development வெளியிட்ட Future of Education and Skills: Education 2030 மற்றும் Globalization and Education என்ற ஆய்வு அறிக்கைகள் உயர்கல்வி மற்றும் வேலையிடங்களில் பல்கலாச்சார, பல்மொழி பேசும், பன்னாட்டு மனிதர்களின் கலவைச் சங்கமம் இனி தவிர்க்க முடியாதது என்பதை எடுத்துக்காட்டுகிறது.
2. ஐரோப்பிய நாடுகள் மீதான நாட்டத்திற்கான இன்னொரு முக்கியக் காரணம், உலகின் அமைதியான, பாதுகாப்பான நாடுகளின் பட்டியல் ஐரோப்பியக் கண்டத்தில் அதிகம். உலகின் மிக முக்கியமான தொழில்நுட்ப நிறுவனங்களும், அதனால் எளிதாகும் வேலைவாய்ப்புகளும் இங்கு அதிகம். 33 நாடுகளின் கல்வித்தரத்தையும் ஒருங்கிணைத்து உறுதிப்படுத்தும் போலாங்னோ கோட்பாடு (Bologno Process) நடைமுறையில் உள்ளதால், எந்தவொரு ஐரோப்பிய நாட்டில் பெறப்படும் பட்டமும் அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் ஒரே தரத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் என்பது கூடுதல் பலம்.
3. மூன்றாவது முக்கியக் காரணம், அதிக அளவிலான ஊக்கத்தொகை வாய்ப்புகளை அனைத்து ஐரோப்பிய நாடுகள், அவற்றின் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டு வடிவத்தின் வழியாக இந்திய மாணவ மாணவிகளுக்கெனச் சிறப்பாகக் கிடைக்கும் ஊக்கத்தொகைகளும் இங்கு உண்டு.

> **ஒரு காலத்தில் மென்பொருள் நிறுவனங்களின் அதிவேகமான வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டு மாணவர்கள் பெரிதும் கைகொடுத்ததுபோல, உலக நாடுகளின் உயர்கல்விக்கான நமது எல்லையும் சுருங்கி நம்மருகில் வந்துசேரும் காலம் இது!**

இப்படியான, ஐரோப்பிய நாடுகளில் உயர்கல்வி படிக்கும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வந்தாலும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்தான பல தகவல்கள் நம்முடைய மாணவர்களுக்கு இன்னும் முழுமையாகச் சென்று சேரவில்லை.

இதில் கலை, அறிவியல், தொழில்நுட்பக் கல்வி பயில விரும்புவர்களுக்கு ஏற்ற தகவல்களே உள்ளன. சமீப வருடங்களில் இந்திய ஒன்றியத்திலிருந்து மருத்துவக் கல்விக்காக அயல்நாடு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை பெரும் வீச்சில் அதிகரித்துள்ளது. அதிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்கூட ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்களே மருத்துவம் பயின்று வருகின்றனர். மருத்துவக் கல்விக்கான நுழைவு நடைமுறையும் கல்விச்செலவு குறித்த தகவல்களும் மாறுபட்டவை என்பதால் கலை, அறிவியல், தொழில்நுட்பக் கல்வி சார்ந்த தகவல்கள் மட்டுமே இங்கே வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் வாழும்போது கல்விக் கட்டணம் தவிர்த்து வாழ்க்கைச் செலவுதான் பெரும்பாலும் செலவாக இருக்கும். அதுவும் வாரத்திற்கு 20 மணி நேரம் சட்டரீதியாகப் பகுதி நேர வேலைக்கான வாய்ப்புள்ளதால் பெரும்பான்மைச் செலவினங்களைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்புண்டு.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள், பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் அவரவர் நாட்டு மொழியில் இளநிலைக் கல்வி பயில்பவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குகிறது அல்லது இளநிலை மற்றும்

முதுநிலைக் கல்வியைத் தங்கள் நாட்டில் வதிவிட உரிமையோடு (Resident Permit) – (குறுகிய கால/ மாணவ நுழைவிசைவு அல்ல – not on travel or student Visa) வாழ்பவர்களுக்கு முழு இலவசக் கல்வியை வழங்குகிறது.

ஜெர்மனியிலும் நார்வேயிலும் உலகெங்குமிருந்து முதுநிலைப் பட்டப்படிப்பில் (ஆங்கில வழிப் பாடத்திட்டத்திற்கும்கூட) சேர்பவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றி, உலகெங்கும் பல்வேறு நாடுகளும் பல்வேறு பல்கலைக்கழகங்களும் ஐரோப்பிய ஒன்றிய அமைப்புகளும் (Erasmus Scholarships/ Erasmus Mundus Scholarships) கல்வி, பயணம், வாழ்க்கைச் செலவிற்கென மொத்தமாக ஊக்கத்தொகை வழங்குகிறது.

## உலக நாடுகளில் ஊக்கத்தொகைகள்


இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வட அயர்லாந்து ஒருங்கிணைந்த பகுதிகளின் பல்கலைக்கழகங்களில் இந்திய மாணவ மாணவிகளுக்கெனவும், இந்தியா உள்ளிட்ட பொதுநலவாய நாடுகளின் (Commonwealth countries) மாணவ மாணவிகளுக்கெனவும் (GREAT Scholarships/ Chevening Scholarships), அறிவியல்/ தொழில்நுட்பம் உயர்கல்வி பயில விரும்பும் பெண்களுக்கெனவும் தனிப்பட்ட முழு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது (British Council Scholarships for Women in STEM). இதில், இளநிலை, முதுநிலை வகுப்புகளும் உள்ளடக்கம். சில ஊக்கத்தொகைக்கு IELTS/ TOEFL/ Cambridge Test போன்ற ஆங்கிலத் தேர்வுகளில் தகுதிபெறுவது கட்டாயமாகிறது.

இவற்றில் பெரும்பாலும் விமானக் கட்டணம், கல்விக் கட்டணம், தங்குமிடச் செலவுகள் என அனைத்தும் கிடைக்கப்பெறுகின்றன. இவை பெரும்பாலும் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கானவை.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் முதல் ஜனவரி 15 வரையிலான காலப்பகுதிகளில் ஹங்கேரி நாட்டிற்கான ஊக்கத்தொகை விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியருக்குக் கல்விக் கட்டணம், தங்குமிடம் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதில், இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் ஆராய்ச்சி வரையிலான ஊக்கத்தொகைகளை இந்திய மாணவ, மாணவியரில் வருடந்தோறும் 160 பேர் பெற்று வருகின்றனர்.

அதேபோல ஜப்பான், தென்கொரியா, தைவான் பல்கலைக்கழகங்களின் இளநிலை, முதுநிலைக் கல்விக்காக ஊக்கத்தொகை விண்ணப்பங்கள் வருடந்தோறும் பிப்ரவரி முதல் மே வரை பெறப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியருக்கு விமானக் கட்டணம், கல்விக் கட்டணம், தங்குமிடம் வரை அனைத்தையும் வழங்கி வருகின்றனர். தோராயமாக, 200 இந்திய மாணவ, மாணவியர் இதில் இடம்பெறுகின்றனர்.

ஆஸ்திரேலியா, கனடா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் முதுநிலைக் கல்விக்கான கல்விக் கட்டணம், தங்குமிடச் செலவுகள் என அனைத்தும் கிடைக்கக்கூடிய ஊக்கத்தொகைகள் ஏராளமாகக் குவிந்துள்ளன.



## கோடைகாலச் சிறப்புப் பயிற்சிகள்

ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, அமெரிக்கா, கனடா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் அறிவியல், பொறியியல், தொழில்நுட்பப் பிரிவுகளில் இளநிலைக் கல்வி கற்கும் இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாணவ, மாணவிகளுக்கென ஊக்கத்தொகையுடனான கோடைகாலச் சிறப்புப் பயிற்சி வகுப்புகளையும் (summer internship) நடத்தி வருகின்றன.

ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் செப்டம்பர் முதல் ஜனவரி வரையிலான காலங்களில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, மே – ஜூன் மாதங்களில் அந்தந்த நாடுகளில் 1–2 மாதங்கள் தங்கி, பன்னாட்டு மாணவ, மாணவிகளோடு இணைந்து பாடங்கள், பயிற்சிகள், ஆய்வகச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும். தங்குமிடம் முதல் விமானக் கட்டணங்கள் வரையில் முழுச் செலவும் அந்தந்த நாடுகளே ஏற்கின்றன.

## எவ்வாறு தயார் செய்ய வேண்டும்?

இவ்வாறு உலக நாடுகளின் ஊக்கத்தொகைகளைப் பெறுவதற்கு மாணவ, மாணவிகள் நன்கு திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

1. உயர்கல்வியில் எத்துறையைத் தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள், அடுத்த 10 ஆண்டுகளுக்கு அவரவர் துறைகளில் எதில் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறீர்கள் எனத் திட்டமிடல் இருக்க வேண்டும்.
2. கல்வி கற்கும் முதலாம் ஆண்டு முதலே அறிவியல், பொறியியல், வணிகவியல் என எந்தத் துறையினராக இருந்தாலும் உயர்கல்வி, ஆராய்ச்சித் துறைகளுக்கு ஏற்ப சிறு, பெரு நிறுவனங்களிலோ ஆராய்ச்சி மையங்களிலோ பல்கலைக்கழகங்களிலோ ஆய்வுத்திட்டங்களிலோ பணிகளிலோ ஈடுபடல் வேண்டும்
3. கல்லூரி ஆய்வகங்கள் சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
4. கல்லூரி, பல்கலைக்கழக விழாக்கள், கருத்தரங்கங்கள், மாநாடுகளில் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுக்கள், வடிவமைப்புக் குழுக்களில் பங்கேற்க வேண்டும்.
5. தமிழிலோ ஆங்கிலத்திலோ அவரவர் துறைசார் கட்டுரைகளை எழுதி நாளிதழ், வார, மாத இதழ்களிலோ இணையப் பக்கங்களிலோ வெளியிட்டு வர வேண்டும்.
6. துறைசார் பயிற்சிப் பட்டறைகள் வெளியூர், வெளிமாநிலங்களில் நடக்கும்போது பங்கெடுக்க வேண்டும்.
7. உள்ளூர் வானொலி, தொலைக்காட்சிகளில் அவரவர் துறைசார் வளர்ச்சிகள் குறித்தான உள்ளூர் மொழிகளில் விளக்கம் கொடுத்து உள்ளூர் மக்களுக்குப் புரிய வைக்கலாம்.
8. கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் தவிர்த்து சமூக அக்கறை கொண்ட, மக்களுக்கான சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடலாம்.
9. பல்வேறு கல்வி, கல்விசாரா குழுக்களில் ஈடுபட்டு அறிவியல், தொழில்நுட்ப விழிப்புணர்வுப் பிரச்சாரங்களில் ஈடுபடலாம்.
10. உள்ளூர்/ அருகமைக் குழந்தைகளுக்கான கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்கங்களை நடத்தலாம்.

நன்றி: முனைவர் விஜய் அசோகன், இயக்குநர், முல்லை சர்வதேச அகாடமி

# 7 வளர்ச்சிக்கான படிப்புகளைப் படியுங்கள்


கல்லூரி முடித்த பிறகு பெரும்பாலானோரின் தேடல் வேலை சார்ந்ததாகத்தான் இருக்கும். பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழில்முறைப் படிப்புகள் தவிர்த்து கலை, அறிவியல் படிப்புகளில் முதுகலைப் படிப்பு முடித்த பிறகு அடுத்தகட்ட தேடல் வேலை என்பதைத் தாண்டி வேறிருக்க முடியாது. வெகு சிலரே தங்களுக்குப் பிடித்தமான துறையில் முனைவர் பட்டம் உள்ளிட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு சில படிப்புகள் அதிக வேலைவாய்ப்பு அளிப்பவையாக உள்ளன. இருப்பினும், இனி வரும் காலங்களில் சில குறிப்பிட்ட துறைகளில் வேலைவாய்ப்புகள் ஏராளமாகப் பொதிந்துள்ளன. வளர்ச்சி வாய்ப்புள்ள துறைகளில் பொதிந்துள்ள வேலைவாய்ப்புகளைத் தெரிந்து அதற்குத் தயார்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவது புத்திசாலித்தனமான முடிவாக இருக்கும் அல்லவா?

## டிஜிட்டல் மார்க்கெட்டிங் (Digital Marketing)



இன்றைய உலகில் எந்த ஒரு தொழிலுக்கும் சந்தை மிகவும் அவசியம். அதுவும் டிஜிட்டல்மய உலகில் இணையவழி வர்த்தகத்தில் சந்தை வாய்ப்பு ஏராளம். கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு சர்வதேச அளவில் டிஜிட்டல் பரிவர்த்தனை, இணையவழி வர்த்தகம் ஆகியவை அதிகரித்துள்ளன. சிறிய தொழில் நிறுவனங்கள்கூடத் தற்போது இணையவழி வர்த்தகத்தை மேற்கொண்டு வருகின்றன. மேலும், தற்போது 50 சதவீத மக்கள் இணையவழி தொடர்பு வசதி கொண்டவர்களாக உள்ளனர். இதனால் இணையவழி வர்த்தக வாய்ப்பு நாளுக்கு நாள் அதிகரிக்குமே தவிர குறையாது. இத்துறை சார்ந்த சந்தை வாய்ப்புகளும் தொடர்ந்து அதிகரிக்கும். டிஜிட்டல் சந்தையாளர் என்பவர் இணையவழிப் பகுப்பாய்வு, சமூக ஊடகத் தளங்கள், தேடுபொறி உபயோகம், விளம்பரம், இணையவழிச் சந்தை உள்ளிட்டவற்றில் சிறந்த புலமை பெற்றிருப்பின் வேலைவாய்ப்பு பிரகாசமாக இருக்கும். இந்தத் துறை மூலம் அடுத்த மூன்றாண்டுகளில் 20 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## ரோபோட்டிக் என்ஜினீயரிங் (Robotic Engineering)



எதிர்காலத்தில் மனிதர்களுக்குப் பதிலாக இயந்திர மனிதன் பணியில் ஈடுபடுத்தப்படும் என்ற நிலை உருவாகி வருகிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரோபோட் எனும் இயந்திர மனிதன் பல்வேறு துறைகளில் 30 சதவீத அளவுக்கு மனிதர்களின் இடங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சூழலில் ரோபோட் குறித்த பொறியியல் பட்டதாரிகளுக்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவிலும் ரோபோட்டிக் என்ஜினீயர்களுக்கான தேவை அதிகமாகவே உள்ளது. புத்தொழில் நிறுவனங்களாக உருவெடுக்கும் ஸ்டார்ட்அப்கள் (startup) பெரும்பாலும் ரோபோட் சார்ந்த தானியங்கித் தொழில்நுட்பத் துறைகளைத்தான் தேர்வுசெய்கின்றன. இவற்றிலும் அதிக ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் இத்துறை வல்லுநர்களுக்குக் காத்திருக்கின்றன.

## காப்பீட்டு பிரீமியம் கணக்கீட்டுப் பணி (Actuarial Science)

காப்பீட்டு பிரீமியங்களைக் கணக்கிடுவதற்கான துறை பெருமளவு வளர்ந்துவருகிறது. இத்தகைய பணிகளை மேற்கொள்வோருக்கான வேலைவாய்ப்புகளும் அபரிமிதமாக உள்ளன. அறிவியல், கணிதம் உள்ளிட்ட படிப்புகளில் நாட்டம் உடையவர்கள் தேர்வுசெய்யும் படிப்பு இது. இதற்கேற்ற பணி வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

## சைபர் பாதுகாப்பு (Cyber Security)



மின்னணுத் தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் அதே வேளையில் இணையம் சார்ந்த பயன்பாடும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இணையவழிப் பயன்பாடு அதிகரிக்கும்போது குற்றங்களும் பெருகி வருகின்றன. தகவல் தொகுப்பு, பரிமாறப்படும் தகவல்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க பல்வேறு பாதுகாப்பு உத்திகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய பாதுகாப்புக்கான பணிகளை சைபர் பாதுகாப்பு நிபுணர்கள் மட்டுமே அளிக்க முடியும். மென்பொருள் நிறுவனங்களின் தேசிய கூட்டமைப்பான நாஸ்காம் (NASSCOM), சைபர் பாதுகாப்புக்கென 10 லட்சம் வேலைவாய்ப்புகள் தேவைப்படும் எனக் கணித்துள்ளது. மற்ற எந்தத் துறையைவிடவும் இத்துறை மட்டுமே 12 மடங்கு வேலை அளிக்கும் துறையாக வளர்ந்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## பின்புல மேம்பாட்டாளர் (Backend Developer)

ஒவ்வோர் இணையதள உருவாக்கத்திலும், மொபைல் செயலியிலும் அதற்குரிய மென்பொருள் மற்றும் அதை இயக்குவதில் பின்புல மேம்பாட்டாளரின் பணி அபரிமிதமாக உள்ளது. இணையதள மென்பொருள் உருவாக்கம், அதைச் செயல்படுத்துவதில் இத்தகையோரின் பணி அளப்பரியது. இவர்களுக்கான வேலைவாய்ப்பும் அதிகம். சி++, சி# மற்றும் ஜாவா உள்ளிட்ட கம்ப்யூட்டர் மென்பொருள் சார்ந்த படிப்புகளைப் படித்தவர்கள் இத்தகைய பின்புல மேம்பாட்டாளர் பணிக்குத் தேர்வு செய்யப்படுவர். தற்போதைய சூழலில் இத்தகையோருக்கான தேவை அதிகமாகவே உள்ளது.

## தரவு அறிவியல் (Data Science)



இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவிலும் அதிக வேலைவாய்ப்பு வழங்கும் துறையாக இது விளங்குகிறது. நிறுவன வளர்ச்சிக்குத் தகவல்கள் எந்த அளவுக்கு உபயோகமாக இருக்கும் என்பதை உணர்த்தும் படிப்பை முடித்த தரவுத் தொகுப்புப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் பிரகாசமாகவே உள்ளன. ஒவ்வொரு நிறுவனமும் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவையை அளிக்க தரவுத் தொகுப்பு மிகவும் அவசியம். அதைச் சரியான முறையில் தொகுத்து உரிய வகையிலான ஆலோசனைகளை வழங்கும் தரவு அறிவியல் பணிகளுக்கு இனி வரும் காலங்களில் அதிக தேவை இருக்கும் என்பது நிச்சயம். அமேசான், பிராக்டர் அண்ட் கேம்பிள், வால்மார்ட் லேப்ஸ், கிரேஆடோம் உள்ளிட்ட நிறுவனங்களில் வாய்ப்புகள் உள்ளன.

## இயந்திரக் கற்றல் நிபுணர் (Machine Learning Expert)

மெஷின் லேர்னிங் எனப்படும் இயந்திரக் கற்றல் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) துறையின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது. இந்தியாவில் அதிக அளவில் ஊதியம் தரும் வேலை வாய்ப்பாக உள்ளது. செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக் உள்ளிட்ட துறைகளின் அபரிமித வளர்ச்சியின்போது இத்துறை நிபுணர்களுக்கான வாய்ப்புகள் ஏராளம். அசெஞ்சர், ஐபிஎம், ஐடிசி இன்ஃபோடெக், ஜைகஸ், குவான்டிபி உள்ளிட்ட நிறுவனங்களில் இத்துறை நிபுணர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

## பிளாக்செயின் மேம்பாட்டாளர் (Blockchain Developer)




நிதி பரிவர்த்தனையில் முக்கியப் பங்களிப்பைத் தருவது பிளாக்செயின் தொழில்நுட்பமாகும். இணைய இணைப்பு, தகவல் பாதுகாப்பு, தகவலைக் கையாளுதல் உள்ளிட்டவை ஒருங்கே சேர்ந்ததுதான் பிளாக்செயின் நுட்பமாகும். இத்துறை வல்லுநர்களுக்கு எப்போதும் தேவை இருந்து வருகிறது. பிளாக்செயின் தொழில்நுட்பம் இடைத் தரகர்களை ஒழிக்கிறது; நிர்வாகச் செலவைக் குறைக்கிறது. இதனாலேயே பெரும்பாலான நிதி நிறுவனங்கள் இத்தகைய தொழில்நுட்பத்தைக் கையாள்கின்றன. இது பாதுகாப்பானதும்கூட. கணினி அறிவியல், கணிதம், புள்ளியியல் ஆகிய பாடங்களில் நிபுணத்துவம் பெற்றவர்கள் பிளாக்செயின் நுட்பத்தில் சிறந்து விளங்கலாம். இத்துறை வல்லுநர்களுக்கு அதிக ஊதியமும் அளிக்கப்படுகிறது. ஆக்சஸிஸ், சைன்ஸி, பிரிம்செயின், சொலுலேப், சோபேக்ளே, ஓபன்எக்ஸெல், எலிமென்டியல், மைன்டெப்ட் உள்ளிட்ட நிறுவனங்களில் வேலைவாய்ப்பு காத்திருக்கிறது.

## நிர்வாகவியல் ஆலோசகர் (Management Consultant)

நிர்வாகவியல் ரீதியில் ஆலோசனை வழங்குவோர்களை நிறுவனங்கள் இருகரம் நீட்டி வேலை வாய்ப்பை வழங்கக் காத்திருக்கின்றன. நிறுவனங்களுக்கான உத்திகள் வகுப்பது, நிர்வாகச் செயல்பாடுகளைக் கட்டமைப்பது, செயல்பாடு மற்றும் நிர்வாக ரீதியிலான மாற்றங்களுக்கு ஆலோசனை கூறுவது உள்ளிட்ட பணிகளில் நிபுணத்துவம் பெற்றிருப்போருக்கு வாய்ப்புகள் உள்ளன. வணிக நிர்வாகம், பொருளாதாரம், நிதி, கணக்கியல், நிர்வாகவியல் உள்ளிட்ட படிப்புகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு வாய்ப்பு பிரகாசம். கேபிஎம்ஜி, பிடபிள்யூசி, மெக்கின்ஸி, டிலாய்ட், எர்னஸ்ட் அண்ட் யங், அசெஞ்சர் உள்ளிட்ட நிறுவனங்களில் நிர்வாகவியல் மாணவர்களுக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

## ஆளில்லா விமான இயக்குநர் (Drone Pilot)



இனிவரும் காலங்களில் வீடுகளுக்கான பொருட்கள் விநியோகத்தில் ஆளில்லா விமானங்களைச் செயல்படுத்துவோருக்கான வேலைவாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது. உயரமான இடங்களைப் படமெடுப்பது போன்ற பணிகளில் ட்ரோன்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படும்பட்சத்தில் இதை இயக்குபவருக்கான தேவை, வேலைவாய்ப்பு ஆகியவை அதிகமாகவே உள்ளன. நடப்பாண்டில் 40 கோடி டாலர் அளவுக்கு இத்துறையில் வளர்ச்சி வாய்ப்பு உள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இத்துறையில் வேலைவாய்ப்புகளும் அபரிமிதமாக இருக்கும் என்பது நிச்சயம்.

## உணவியல் நிபுணர் (Dietician)

மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதும் அதிகரித்து வருகிறது. மருத்துவச் செலவுக்கு அஞ்சியே பலரும் வருமுன் காக்கும் முயற்சியாக உடல் நலனில் அக்கறை காட்டி வருகின்றனர். அத்தகையோருக்கு ஆலோசனை கூறும் உணவியல் நிபுணருக்கான தேவை அதிகரித்துவருகிறது. அன்றாட உணவு, சத்தான உணவு மற்றும் தவிர்க்க வேண்டிய உணவுகள் குறித்து ஆலோசனை அளிப்பவர்களுக்கான தேவை பெருகி வருகிறது. மணிக்கணக்கில் உடற்பயிற்சி மேற்கொண்டாலும், நீங்கள் சாப்பிடும் உணவில் உரிய வரையறை இல்லாவிடில் பயனிருக்காது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் உணவியல் நிபுணருக்கான தேவையைப் பலரும் உணர்ந்து ஆலோசனை பெறுவது அதிகரித்துள்ளது. உணவு சார்ந்த உற்பத்தி நிறுவனங்களிலும் மருத்துவமனைகளிலும் உணவியல் நிபுணருக்கான வாய்ப்புகள் பிரகாசமாகவே உள்ளன.

## நிதி ஆலோசகர் (Financial Advisor)

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் பயனாக இன்றைய இளைஞர்களின் ஊதியமும் அதிகமாகவே உள்ளது. பெருந்தொற்றுக் காலத்தில் பலர் வேலையிழந்து பெரும் சிரமத்திற்கு உள்ளாயினர். பணம் சம்பாதிக்கும்போது அதைத் திட்டமிடாமல் செலவழித்ததன் பயனை உணர்ந்தனர். இத்தகைய சூழலில் தனிநபர்களுக்கான நிதியைத் திட்டமிட்டுத் தருவதில்தான் ஆலோசகரின் பங்கு அபரிமிதமாக உள்ளது. பெரும் பணக்காரர்கள் மட்டுமல்ல மாதாந்திரச் சம்பளதாரரும் ஈட்டும் வருமானத்தைத் திட்டமிட வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆகவே, நிதி ஆலோசகருக்கான தேவை அதிகரித்து வருகிறது.

## ஊக்கம் தரும் ஊடகத் துறை (Media)



கல்லூரியில் ஊடகவியலைப் பாடமாகப் படித்தவர்களும் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்தவர்களும் ஊடகத் துறையில் நுழையவும் வேலைவாய்ப்பைப் பெறவும் முடியும். ஊடகத் துறையில் செய்திப் பிரிவில் பணியாற்ற விரும்பினால் மொழித் திறன் முக்கியம். தமிழ் ஊடகத்தில் பணியாற்ற விரும்பினாலும் சரி ஆங்கில ஊடகத்தில் பணியாற்ற விரும்பினாலும் சரி நீங்கள் மொழித் திறனில் தனிக் கவனம் செலுத்தி மேம்படுத்திக்கொள்வது அவசியம். சமூக அக்கறை, சமூகம் பற்றிய பார்வையுடன் மொழித் திறன், ஆர்வம் ஆகியவை இணைந்தால் போதும் ஊடகத் துறையில் நீங்கள் வெற்றியாளராக வலம்வர இயலும். ஊடகத் துறையைப் பொறுத்தவரையில் காலிப் பணியிடங்கள் குறித்த தகவல்கள் பெரிய அளவில் வெளியே தெரிய வராது. ஊடகத் துறையில் உள்ளவர்கள் மத்தியிலேயே காலியிடங்கள் குறித்த செய்திகள் புழங்கும். எனவே, ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களுடன் பரிச்சயத்தை ஏற்படுத்திக்கொள்வது அவசியம். அதே நேரத்தில் ஊடகத் துறை வாய்ப்பைப் பெற, சமூக வலைத்தளங்களும் ஒரு வாய்ப்பை உருவாக்கித்தரும் களமாகப் பயன்படுகின்றன. உதாரணமாக, நீங்கள் ஃபேஸ்புக்கிலோ டுவிட்டரிலோ தொடர்ந்து கவனிக்கத்தக்க வகையில் எழுதினால் ஊடகத் துறையின் கவனத்தை ஈர்க்கலாம். வேலைவாய்ப்புக்கும் வழிவகுக்கும். மிக மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், பிழையின்றி நன்றாக எழுத / திருத்தத் தெரிந்தாலே உத்தரவாதமான பணி வாய்ப்புகள் ஊடகத் துறையில் கொட்டிக்கிடக்கின்றன என்பதுதான் உண்மை!

**நன்றி: ரமேஷ், ஊடகவியலாளர்**

# கவனம் ஈர்க்கும் தொற்றுநோயியல்

மனிதர்கள், மற்ற உயிரினங்கள் இடையே பரவும் நோய்களை ஆராயும் அறிவியலாளர்களே தொற்றுநோயியலாளர்கள். அவர்கள் நோய்ப் பரவலைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பார்கள். கொள்ளைநோய் (Epidemic), உலகளாவிய தொற்றுநோய் (Pandemic) சூழலில் தொற்றுநோயியலாளர்களின் பணி இன்றியமையாதது. வருங்காலத்தில் நோய்ப் பரவலை எப்படித் தடுப்பது என்பதைக் கண்டறிவதில் தொற்றுநோயியலாளர்களின் பணி அவசியமாகும்.

## தேவைப்படும் திறன்கள்

- உடல்நலம் மற்றும் நோய்கள் குறித்த அறிவு
- சிக்கலான தொற்றுநோயியல் தரவுகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் பகுப்பாய்வதற்கான திறன்.
- சிறந்த உரையாடல், எழுத்துவழித் தொடர்பாடல் திறன்.

## பணி வாய்ப்புகள்

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் உடல்நலம் மற்றும் நோய்களின் படிவம் குறித்து ஆராயும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தொற்றுநோயியலாளர்கள் தேவைப்படுவார்கள். இது தவிர பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு நிறுவனங்களிலும் தொற்றுநோயியலாளர்கள் பயன்படுவார்கள். தனியார் துறையில் பெரும்பாலும் மருந்தக நிறுவனங்களில் தொற்றுநோயியலாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

## கல்வித் தகுதிகள்

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்கள் சிறப்புப் பாடங்களுடன் கூடிய தொற்றுநோயியல் முதுநிலைப் பட்டத்தை (M.Sc) வழங்குகின்றன. இந்தியாவில் சில கல்வி நிலையங்களில் முதுநிலைப் பொது உடல்நலன் பட்டத்தின் (Master of Public Health) கீழ் தொற்றுநோயியல் வழங்கப்படுகிறது.

மருத்துவம், ஆயுஷ் (ஆயுர்வேதம், யுனானி, சித்தா, ஹோமியோபதி), மருந்தகம், பிசியோதெரபி, அன்றாடப் பணிசார்ந்த சிகிச்சை (Occupational therapy) ஆகிய துறைகளைச் சேர்ந்த பட்டதாரிகள் மட்டுமே தொற்றுநோயியல் கல்வியைப் பெற முடியும். மேலும், தொற்றுநோயியல் கல்விபெற விரும்புபவர்கள் பள்ளி மேல்நிலை வகுப்புகளில் கணிதத்தை ஒரு முக்கியப் பாடமாகப் படித்திருக்க வேண்டும்.

## எங்கு படிக்கலாம்?

**இந்தியா**

- கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (சி.எம்.சி), வேலூர்: முதுநிலை, தொற்றுநோயியலில் முதுநிலை (M.Sc in Epdemiology)
- மருத்துவம் மற்றும் பொது உடல்நலன் பள்ளி (School of Medicine and Public Health), கேரளப் பல்கலைக்கழகம்: பொது உடல்நலனில் முதுநிலை (Master of Public Health)
- தேசிய தொற்றுநோயியல் மையம், சென்னை: பொது உடல்நலனில் முதுநிலை (தொற்றுநோயியல் மற்றும் உடல்நலன் அமைப்பு)
- சமூக அறிவியல் பள்ளி, சமூக மருத்துவம் மற்றும் சமூக உடல்நலன் மையம், ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புது டெல்லி: பொது உடல்நலனில் முதுநிலை
- SRM பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர் வளாகம், தமிழ்நாடு: முதுநிலை உயிரி புள்ளியியல் மற்றும் தொற்றுநோயியல் (M.sc Biostatistics and and Epidemiology)

**வெளிநாடுகள்**

- இம்பீரியல் கல்லூரி, லண்டன், பிரிட்டன்: தொற்றுநோயியலில் முதுநிலை
- London School of Hygiene and Tropical Medicine, the UK: தொற்றுநோயியலில் முதுநிலை
- ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம், பிரிட்டன்: உலகளாவிய உடல்நலன் அறிவியல் மற்றும் தொற்றுநோயியல் முதுநிலை (M.sc in Global Health Science and Epidemiology)
- Standford Medicince, கலிபோர்னியா, அமெரிக்கா: தொற்றுநோயியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியில் முதுநிலை (M.sc in Epidemiology and Clinical Research)
- Harvard T.H.Chan School of Public Health, பாஸ்டன், அமெரிக்கா: மருத்துவ தொற்றுநோயியல் முதுநிலை (M.sc Clinical Epidemiology)

நன்றி: கோபால், 'இந்து தமிழ்' இயர்புக் 2021

# 8 உயர்கல்விக்கு உதவும் வங்கிக் கடன்!

நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல; வீட்டின் பொருளாதாரம் மேம்படவும் கல்வி மிகவும் அவசியம். பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து உயர்கல்வியைத் தொடர குறிப்பாகப் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட படிப்புகளில் சேர்வதற்குக் கல்விக் கட்டணம் பெரும் பிரச்சினையாக உள்ளது. நிதிச் சூழலைக் காரணம் காட்டி உயர்கல்வி தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக வங்கிகள் கடன் வழங்குகின்றன. ஒன்றிய அரசின் நிதி அமைச்சக சேவைப் பிரிவு, உயர்கல்வி அமைச்சகம், இந்திய வங்கிகள் சங்கம் (IBA) ஆகியன ஒன்றிணைந்து வித்யா லக்ஷ்மி எனும் இணையதளத்தை உருவாக்கிச் செயல்படுத்துகின்றன. இந்த இணையதளத்தில் மாணவர்கள் எங்கிருந்தும் விண்ணப்பிக்க முடியும். உரிய வழிமுறைகளோடு செயல்படுத்துவதற்கான விதிகள் உருவாக்கப்பட்டு அனைத்து வங்கிகளுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. இதனால் கிராமப்பகுதியில் உள்ள மாணவர்களும் வங்கிகளில் கடன் பெறுவது எளிதாகியுள்ளது. இணையதள முகவரி: https://www.vidyalakshmi.co.in

இந்த இணையதளத்தில் மாணவர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள மூன்று வங்கிகளைத் தேர்வு செய்யலாம்.

பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெறுவோரில் 100-க்கு 15 பேர் மட்டுமே உயர்கல்வியைத் தொடர்வதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற நோக்கில்தான் உயர்கல்விக்குக் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் உள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்கள், ஐஐடி மற்றும் ஐஐஎம்களில் உயர்கல்வி பயில வங்கிகளில் கடன் பெற முடியும். வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பயில நினைக்கும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் வங்கிகள் முன்வந்துள்ளன.

## கடன் விவரங்கள்

கலை, வணிகம், அறிவியல், பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், கணினி அறிவியல், நிர்வாகவியல், பட்டயக் கணக்காளர், விமானி, கப்பல் பொறியாளர், செவிலியர் பணி உள்ளிட்ட வேலைவாய்ப்பு உறுதிப் படிப்புகளுக்கு வங்கிகள் கடன் வழங்குகின்றன. இத்துடன் ஐஐடி, ஐஐஎம் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி பயில்வதற்கான கடனுதவியை வங்கிகளிலிருந்து பெற முடியும்.



இந்தியாவிலோ வெளிநாட்டிலோ உயர்கல்வி பயில எந்தவித உச்சவரம்புமின்றி தேவைக்கேற்ப வங்கிகளில் கடன் பெறலாம்.

ரூ. 4 லட்சம் வரையான கடனுக்கு மார்ஜின் தொகை செலுத்த வேண்டியதில்லை. அதற்கு மேலான தொகைக்கு 15% முதல் 20% வரை மார்ஜின் தொகை செலுத்த வேண்டும்.

வெளிநாட்டில் பயிலச் செல்லும் மாணவர்கள் பெறும் கடன் தொகையில் 15 சதவீதத்தை மார்ஜின் தொகையாக செலுத்த வேண்டும்.

கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம், புத்தகம் வாங்குவதற்கும், விடுதிக் கட்டணம், போக்குவரத்து செலவு, படிப்புக்குத் தேவையான கருவிகள் வாங்குவது உள்ளிட்ட அனைத்திற்கும் வங்கியிலிருந்து கடன் பெற முடியும். அவசியமான படிப்புகளுக்குக் கணினி வாங்குவதற்கும் கடன் பெற முடியும்.

சிறப்புத் தகுதி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை கிடைக்கும்பட்சத்தில் மொத்தக் கல்வி கட்டணத் தொகையில் உதவித்தொகை போக மீதமுள்ள தொகையை வங்கியில் கடனாகப் பெற முடியும்.

தனியார் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை கிடைத்திருப்பின், அரசுக் கல்லூரிகளில் அந்தப் படிப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதத்தை வங்கிகள் கடனாக வழங்கும்.

ரூ. 4 லட்சத்துக்கு மேல் ரூ. 7.5 லட்சம் வரையான கடன் தொகை பெற வேண்டுமெனில் அதற்கு ஒருவரின் உத்தரவாதம் (Security) அளிக்க வேண்டும்.

ரூ. 7.5 லட்சத்துக்கு மேலான தொகை கடனாகத் தேவைப்படின் அதற்குரிய சொத்துகளைப் பிணையாக வங்கிகளில் தாக்கல் செய்ய வேண்டும். வீடு, நிலம் மற்றும் பொதுத்துறை நிறுவனப் பத்திரங்கள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள், பரஸ்பர முதலீட்டுத் திட்டங்கள், நிறுவனக் கடன் பத்திரங்கள், வங்கி வைப்புத்தொகை போன்றவை பிணையாக ஏற்கப்படும்.

படிப்புக் காலம் முடிந்த பிறகு ஓராண்டு வரை கடனைத் திரும்பச் செலுத்த அவகாசம் அளிக்கப்படுகிறது. ரூ. 7.50 லட்சம் வரை கடன் பெற்றவர்கள் அதைத் திரும்பச் செலுத்த 10 ஆண்டு கால அவகாசம் அளிக்கப்படுகிறது. ரூ. 7.5 லட்சத்திற்கு மேல் பெற்றவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

## விதிமுறைகள்

பெறப்படும் கடன் தொகைக்கு ஈடான மதிப்பில் காப்பீட்டு பாலிசி மாணவர் பெயரில் எடுக்கப்பட வேண்டும். படிப்புக் காலம், கடனைத் திரும்பச் செலுத்த எடுத்துக்கொள்ளும் காலம் வரை இந்தக் காப்பீடு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

கல்விக் கடனுக்குப் பரிசீலனைக் கட்டணம் கிடையாது. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களும் கல்விக் கடன் பெறலாம்.

பெற்றோர்களுக்கு வீட்டுக் கடன், வாகனக் கடன், தனிநபர் கடன் போன்றவை இருந்தாலும், கல்விக் கடன் வழங்கலாம் என்ற விதிமுறையும் உள்ளது.

சமீபகாலமாக ஐடிஐ, பாலிடெக்னிக் பயிலும் மாணவர்களுக்கும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. குறுகிய காலத் தொழில்பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 20,000 முதல் ரூ. 1.5 லட்சம் வரை கல்விக் கடன் படிப்பின் கால அளவிற்கேற்ப அளிக்கப்படுகிறது. இந்தக் கடன் தொகைக்குப் பிணைத் தொகை செலுத்த வேண்டியதில்லை. இந்தக் கடனுக்குச் செலுத்தும் வட்டித் தொகைக்கு வருமான வரி விலக்கும் அளிக்கப்படுகிறது.

> “
> கல்வியின் வேர்கள் கசப்பானவையாகத் தோன்றக்கூடும். ஆனால், அதன் பழங்கள் இனிப்பானவை.
>
> – அரிஸ்டாட்டில்
> ”

> கல்விக் கடனுக்குப் பரிசீலனைக் கட்டணம் கிடையாது. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களும் கல்விக் கடன் பெறலாம்.

## தேவையான ஆவணங்கள்

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்.
- இணைய வழியில் விண்ணப்பித்திருந்தால் படிவத்தை நகல் எடுத்து இணைக்கலாம்.
- மேற்படிப்புக்கான பல்கலைக்கழகம், கல்லூரி அளித்துள்ள சேர்க்கைக் கடிதம்.
- கடனுக்கு விண்ணப்பிக்கும் மாணவர், இணை விண்ணப்பதாரரான பெற்றோர் ஆகியோரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் தலா இரண்டு இணைக்கப்பட வேண்டும்.
- இருவரது புகைப்படத்துக்கான அடையாளச் சான்று அளிக்கப்பட வேண்டும். இதற்கு நிரந்தரக் கணக்கு எண் (PAN card), பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் நகலைப் புகைப்பட ஆதாரமாக அளிக்கலாம்.
- இருப்பிடச் சான்று அளிக்கப்பட வேண்டும்.
- கல்வி சார்ந்த ஆவணங்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.
- வெளிநாட்டில் பயில்வதாயிருப்பின் GRE, GMAT, ToEFL, IELTS ஆகிய தேர்வுகளில் பெற்ற மதிப்பெண் சான்றின் நகலையும் இணைக்க வேண்டும்.
- வங்கிக் கணக்கு தொடர்பான 3 மாத அறிக்கையும் அத்துடன் இணைக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கணக்கு இருப்பின் அனைத்து வங்கிகளின் விவரங்களையும் அளிக்க வேண்டும்.




- பெற்றோரின் சம்பளக் கணக்கு, தொழில்முறை கணக்கு, வருமான வரி தாக்கல் செய்பவராயிருப்பின் மூன்று ஆண்டு விவரங்கள் உள்ளிட்டவற்றையும் வருமான வரிச் சான்றையும் அளிக்க வேண்டும்.
- கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்துவதற்கான நிதி வசதியை உறுதி செய்ய வேண்டும்.

மாணவர்கள் கடன் பெற விரும்பும் வங்கியில் சேமிப்புக் கணக்கு இருந்தாக வேண்டும் என்ற அவசியமில்லை. பிறகுகூடக் கணக்கைத் தொடங்கிக்கொள்ளலாம்.

நன்றி: T. அலெக்ஸாண்டர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், திருப்பூர்

# 9 வேலை தேடுகிறீர்களா, இதைப் படியுங்கள்...

முதன்முதலாக வேலை தேடுவதற்கும், வேலை மாறுவதற்கும் மிக அவசியமானது பயோடேட்டா. வேலை கேட்கும் புதிய நிறுவனத்தில் நாம் போய் நிற்பதற்கு முன்பே, நமது பயோடேட்டா போய் நிற்கும். அது நம்மைப் பற்றிய பிம்பத்தை நிறுவனத்திடம் கொண்டுபோய்விடும். அப்படிப்பட்ட முக்கியமான ஆவணத்தை அதற்குரிய மரியாதையுடன் நாம் தயாரிக்க வேண்டும்.

பலர் பயோடேட்டா தயாரிக்கும்போது, வெறுமனே படித்த படிப்பு, வேலைசெய்த நிறுவனங்கள், அவற்றில் அவர்கள் வகித்த பதவிகள் இத்துடன் நிறுத்திவிடுகிறார்கள். சிலர் அவ்வளவுகூடக் கஷ்டப்படாமல் ஏதாவது ஒரு மாதிரி பயோடேட்டாவில் தங்கள் தகவல்களை நுழைத்துவிடுகிறார்கள். தங்கள் பயோடேட்டா, ஒரு நிறுவனத்தின் மனிதவளத் துறைக்குப் போகும் என்பதையோ அது எப்பேர்ப்பட்ட பிம்பத்தை உருவாக்கும் என்பதையோ அவர்கள் உணராமல் இருக்கிறார்கள்.

ஒன்றைப் புரிந்துகொள்வோம்: பயோடேட்டா என்பது நமது பிரதிநிதி. ஆவண வடிவில் நாம் நம்மையே அங்கே அனுப்புகிறோம். நாமே நேரடியாக அங்கே போகும்போது எப்படியெல்லாம் நம்மைத் தயார்படுத்திக்கொள்வோம்? நாம் நேரடியாகச் செல்வதில் கொடுக்கும் முக்கியத்துவத்தில் பாதியையாவது நாம் நமது பயோடேட்டாவுக்கும் கொடுக்க வேண்டாமா?

அப்படி முக்கியத்துவத்துடன் நமது பயோடேட்டாவைத் தயார்செய்யும் வழிகள்தான் என்ன?

## 1. பயோடேட்டா உங்களின் ஆவண வடிவம்

பயோடேட்டா தனித்துவமானதாக இருக்க வேண்டும். உங்களைப் போல வேறு யாரும் இந்த உலகில் இல்லை; உங்கள் பயோடேட்டாவும் வேறு எதனைப் போலவும் இருத்தல் கூடாது. எனவே நண்பர், உறவினர் கொடுத்த எதையும் காப்பி அடிக்க முயல வேண்டாம். பல்வேறு பயோடேட்டா வடிவங்களை கூகுள் செய்து பாருங்கள். அவற்றைப் பார்த்து ஒரு பொதுவான புரிதலுக்கு வாருங்கள். அப்புறம் அவற்றையெல்லாம் மூடிவிட்டு நீங்கள் சுயமாக உங்களுக்கென ஒன்றை உருவாக்கிக்கொள்ளுங்கள். அதை ஒரு பார்வை பார்க்கும்போது உங்களுக்கு 'இதுதான் நான்!' என்ற நம்பிக்கை வர வேண்டும்.

## 2. விண்ணப்பப் படிவம் அல்ல பயோடேட்டா

பயோடேட்டாவானது விண்ணப்பப் படிவம் என்ற எண்ணம்தான் நம்மில் பலருக்கு இருக்கிறது. ஏதோ ரேஷன் கார்டுக்கு விண்ணப்பம் கொடுப்பதுபோல பயோடேட்டா கொடுத்து வேலை கேட்கிறோம் என்று நினைக்கிறோம். அது தவறான சிந்தனை. உங்கள் திறமையையும் நிறுவனத்தின் தேவையையும் பொருத்திப் பார்க்கும் முயற்சிதான் நேர்முகத் தேர்வு. உங்களுக்குப் பொருத்தமான திறன் இருந்தால், அதற்கான மனநிலை இருந்தால் அது போதும். எனவே, பயோடேட்டா தன்னம்பிக்கையுடனும் தெளிவுடனும் இருக்க வேண்டும். கோரிக்கையாக இருக்கக் கூடாது.

## 3. வேலைக்குத்தான் ஆள் தேவை

பல நேரம் 'உங்களுக்கு ஒரு நல்ல வேலை தேவை' என்பதைவிட ஒரு நிறுவனத்துக்குத் திறன் வாய்ந்த ஊழியர் தேவை என்பதே உண்மை. அது நம்மில் பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. பலமுறை நான் பார்த்திருக்கிறேன். நேர்முகத் தேர்விற்கு வருபவரைவிட நிறுவன மேலாளர் பதற்றமாக இருப்பார்.

காரணம், அவர்கள் நிறுவனம் ஒரு பெரிய திட்டப் பணியைத் தொடங்குவதற்காகக் காத்திருக்கிறது. ஆனால், ஒழுங்கான அணி அமையவில்லை. அதன் விளைவாக, நிறுவனத்தின் மனிதவளத் துறை மேல் அதீத அழுத்தம் விழுந்துகொண்டிருக்கிறது. 'இன்னைக்கு இன்டர்வியூல நல்ல ஆளா கிடைக்கணும்' என்று மேலாளர் எண்ணிக்கொண்டிருப்பார்.

அதாவது, அவர்களுக்குத் தேவை இருக்கிறது. உங்களிடம் அதற்கேற்ற திறன் இருந்தால் வேலை நிச்சயம். உங்கள் பயோடேட்டா பொருத்தமாக இருக்கிறதா என்பதைத்தான் பார்ப்பார்கள்.

## 4. வேலைக்கேற்ற பயோடேட்டா

பெரும்பாலும், நம்மில் பலர் ஒரே ஒரு பயோடேட்டா வடிவத்தை வைத்திருப்போம். எந்த வேலை என்றாலும் அந்த பயோடேட்டாவை அனுப்பிப் பதிலுக்குக் காத்திருப்போம். அப்படிச் செய்யவே செய்யாதீர்கள். முதலில் ஒரு வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனில் அந்த வேலை விவரணை என்னென்ன என்று பாருங்கள். ஆங்கிலத்தில் 'ஜாப் டிஸ்க்ரிப்ஷன்' என்று சொல்வார்கள். வேலை விளம்பரத்தில் அதைக் குறிப்பிட்டு இருப்பார்கள். வேலை விவரணையை முழுவதும் படித்துப் பாருங்கள். அது உங்கள் திறமைக்கும் ஆர்வத்துக்கும் பொருந்திவருகிறதா? ஆம் எனில், அந்த விவரணைகளை வைத்து உங்கள் பயோடேட்டாவை முழுவதும் மாற்றி எழுதுங்கள். அந்த பயோடேட்டா முழுக்க முழுக்க நீங்கள் விண்ணப்பிக்கும் வேலைக்கு ஏற்றதாகவே இருக்க வேண்டும். அந்த வேலைக்குப் பொருந்தும் உங்கள் திறமைகள், அனுபவங்கள் என்னென்ன, என்று விளக்குங்கள். அப்படிப் பிரத்யேகமாக எழுதப்பட்ட அந்த பயோடேட்டாவைப் படிக்கும்போது சம்பந்தப்பட்ட நிறுவன மேலாளரால் தெளிவாக உங்களை அந்த வேலையில் வைத்துப் பார்க்க முடியும். அதுவே பாதி வேலையை உறுதிசெய்துவிடும்.

இதுபோல நீங்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வேலைக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை விவரணையைப் படித்து அதன்படி பயோடேட்டாவைத் திருத்தி, மாற்றி எழுதி அனுப்ப வேண்டும்.

## 5. அளவிடும் திறன்கள்

பயோடேட்டாவில் நிறையப் பேர், 'நான் அந்த வேலை செய்தேன்', 'நான் இந்தப் பணிகளை இழுத்துப்போட்டு செய்தேன்' என்றெல்லாம் எழுதுவார்கள். பல நேரங்களில் நிறுவனங்களுக்கு அது உங்களைத் தனித்துக் காட்டாது. காரணம், வேலைக்கு விண்ணப்பிக்கும் எல்லோருமே ஏறக்குறைய அதைத்தான் செய்திருப்பார்கள். 'நான் ஒரு ஏற்றுமதி நிறுவனத்தில் விற்பனைப் பிரிவில் வேலைசெய்தேன்' என்று பயோடேட்டாவில் இருந்தால் அதை வைத்து உங்களை எப்படி எடை போட முடியும்? இப்படி எழுதுவதற்குப் பதில், 'அந்த ஏற்றுமதி நிறுவனத்தின் மொத்த விற்பனையில் விற்பனையாளனாக என் பங்களிப்பு 40%-க்கும் அதிகமாக இருந்தது. அந்த நிறுவனத்தின் விற்பனை



அணுகுமுறையில் சில புதிய உத்திகளை நான் அறிமுகப்படுத்தினேன். அவை விற்பனையை 15% கூட்டின. அந்த உத்திகளை நிறுவனம் இன்றுவரை பின்பற்றிவருகிறது' என்று எழுதினால் அது கவனத்தை ஈர்க்கும்.

அதாவது, நீங்கள் என்னென்ன மாற்றங்களைக் கொண்டுவந்தீர்கள் என்று எழுதுங்கள். அதனை முடிந்த அளவு அளவிடும் வகையில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, உங்கள் வேலையை துல்லியமாகக் கொடுக்க முயலுங்கள்.

உதாரணமாக 'நான் உருவாக்கிய புதிய இணையதளம் நிறுவனத்துக்கு அதிக அளவில் பார்வையாளர்களைக் கொண்டுவந்தது.' vs. 'நான் உருவாக்கிய புதிய இணையதளம் முந்தைய தளத்தைவிட 64% அதிக பார்வையாளர்களைக் கொண்டுவந்தது.'

'நான் ப்ராஜக்ட்களைக் குறைவான செலவில் முடித்துக் கொடுத்தேன்.' vs. 'நான் மேலாண்மை பார்த்தப்ராஜக்ட்கள்நிறுவனத்தின்பிறப்ராஜக்ட்களைவிட24%குறைவானசெலவில்முடிக்கப்பட்டன.'

இப்படி அளவீடுகளுடன் உங்கள் வேலையை விவரிப்பது படிப்பவர்களுக்கு உங்கள் திறன் மீதுள்ள நம்பிக்கையைக் கூட்டும். நீங்கள் கொடுக்கும் தரவுகள் உண்மையானவையாக இருக்க வேண்டும். நேர்முகத் தேர்வில் இது பற்றிக் கேள்விகள் கேட்டால் நீங்கள் விளக்கமாகப் பதில் சொல்லும் அளவுக்கு அந்தத் தரவுகள் உண்மைத்தன்மை கொண்டிருக்க வேண்டும்.

## 6. பொய்மை தோற்கும்

உங்கள் பயோடேட்டாவில் பொய் சொல்லவே சொல்லாதீர்கள். நேர்முகத் தேர்வில் அது பற்றி ஏதாவது கேள்வி கேட்டால் நீங்கள் மாட்டிக்கொள்ளக்கூடும். உங்கள் பயோடேட்டா நூறு சதவிகிதம் உண்மைத்தன்மையுடன் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

## 7. வேலை தாண்டிய திறன்கள்

வேலைத் திறன்கள் தாண்டியும் உங்களுக்குத் திறமைகள், ஆர்வங்கள் இருக்கும். அவற்றையும் பயோடேட்டாவில் குறிப்பிடுங்கள். நீங்கள் ஓவியம் வரைவீர்களா? வலைப்பூவில் தொடர்ந்து எழுதுகிறீர்களா? அவற்றையும் குறிப்பிடுங்கள். இதிலும் மேலே குறிப்பிட்ட அணுகுமுறையைப் பின்பற்றுங்கள். எண்ணிக்கைகள், தரவுகள் அவசியம்.



'கடந்த ஐந்தாண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவருகிறேன். 350–க்கும் அதிகமான வலைப்பூ கட்டுரைகள் எழுதி இருக்கிறேன். சுமார் 1.5 லட்சம் வார்த்தைகள் எழுதி இருப்பேன்.'

'ஐந்தாம் வகுப்பில் ஓவியப் பயிற்சியைத் தொடங்கினேன். இன்று வரை 500–க்கும் அதிகமான ஓவியங்களைத் தீட்டி இருக்கிறேன்.

கடைசியாக, உங்கள் பயோடேட்டாவில் உங்களது தனித்த குரல் ஒலிக்க வேண்டும். அந்தக் குரல் உங்களை அடையாளப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட தனித்துவ பயோடேட்டா உங்களுக்கு அந்த வேலை கிடைக்கும் சாத்தியத்தை அதிகரிக்கும்.

## வேலைக்கான விண்ணப்பக் கடிதம்

சில வருடங்களுக்கு முன்பு என் மேலாளரிடம் நண்பர் ஒருவருக்காக வேலைக்குக் கேட்டிருந்தேன். "அவரை பயோடேட்டா அனுப்பச் சொல்லு" என்று கேட்டிருந்தார். நானும் நண்பரிடம் மின்னஞ்சல் முகவரி கொடுத்து அனுப்பச் சொன்னேன். அவர் அனுப்பியும் வைத்திருந்தார். ஆனால், என் மேலாளர் அவரை இன்டர்வியூவுக்குக்கூட அழைக்கவில்லை. பின்னர் நான் கேட்டதற்கு, "உன் நண்பர் இப்படித்தான் அவர் பயோடேட்டாவை அனுப்பி இருக்கிறார், பார்!" என்று காட்டினார்.

அந்த மின்னஞ்சல் கீழ்வருமாறு இருந்தது:

அன்புள்ள மார்க்,

இத்துடன் என் பயோடேட்டாவை அனுப்பி இருக்கிறேன்.

நன்றியுடன்
ராஜீவ்

"இதுதானா தன்னைப் பற்றி அவருக்குச் சொல்ல இருப்பது?" என்று என் மேலாளர் கேட்டதற்கு எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

தனித்துவமான பயோடேட்டா தயாரிப்பது எப்படி ஒரு முக்கியமான வேலையோ, அதைப் போலவே தனித்துவமான முகப்புக் கடிதம் எழுதுவதும் முக்கியமான ஒன்று. ஒரு வேலைக்கு விண்ணப்பிக்க உங்கள் பயோடேட்டாவை அனுப்பும்போது அந்த மின்னஞ்சலில் உங்களைப் பற்றிச் சுருக்கமானதொரு விவரணையை எழுத வேண்டும்.

உங்களைப் பற்றி எழுதுங்கள் என்றால் சிலர், 'நான் 1978இல் கோவை பொது மருத்துவமனையில் பிறந்தேன்' என்று தொடங்கிவிடுவார்கள். அது ஒன்றரைப் பக்கம் போகும். அவ்வாறு இன்றி, மூன்று அல்லது நான்கு பத்திகளில் உங்களைப் பற்றிய விவரணை இருக்க வேண்டும். அந்த விளக்கம் சுருக்கமாக மட்டுமின்றி சுவாரசியமாகவும் இருத்தல் அவசியம்.

நீங்கள் எந்தப் பள்ளியில் படித்தீர்கள், எந்தப் பகுதியில் வளர்ந்தீர்கள் போன்றவை அநாவசியம். நீங்கள் எப்பேர்ப்பட்ட திறமையாளர் என்பதுதான் முக்கியம். வேலைக்கு விண்ணப்பித்து பயோடேட்டாவை அனுப்பும்போது மின்னஞ்சலில் அந்த முகப்பு வரிகளை எழுதுங்கள். அந்த வரிகள் பின்வரும் எளிய விதிகளைப் பின்பற்றி இருக்குமாறு அமைத்துக்கொள்ளுங்கள்.

## திறமை, திறமை, திறமை

நீங்கள் விண்ணப்பிக்கும் வேலைக்கு ஏற்றதாக உங்கள் திறன் உள்ளதா என்பது மட்டும்தான் நீங்கள் குறிப்பிட வேண்டியது. அதனைத் தெளிவாக ஓரிரு வரிகளில் எழுதுங்கள். நீங்கள் விண்ணப்பிக்கும் வேலை எதுவென்று உங்களுக்குத் தெரியும், அதற்கு நீங்கள் எப்படிப் பொருத்தமானவர் என்பதும் தெரியும்படி அந்த வரிகள் அமைய வேண்டும்.



### காப்பி அடிக்க வேண்டாம்

பயோடேட்டாவுக்குச் சொன்னதுதான் இதற்கும். எல்லா வேலைக்கும் ஒரே முகப்புக் கடிதம் வேண்டாம். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வேலைக்கும் பிரத்யேகமாக எழுதுங்கள். அது அந்த வேலைக்கு மட்டும்தான் இருக்க வேண்டும். பழைய கடிதத்தை காப்பி பேஸ்ட் செய்து அதனை வேலைக்கு ஏற்றபடி திருத்தி எழுதும் வேலை வேண்டாம். புதிதாக யோசித்து எழுதுங்கள்.

### வேலையில் சேர்ந்த கற்பனை

எழுதும் முன்பு கண்களை ஒரு நிமிடம் மூடி நீங்கள் அந்த வேலையில் சேர்ந்துவிட்டதுபோல நினைத்துக்கொள்ளுங்கள். புதிய நிறுவனத்தில் புதிய இடத்தில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். அப்போது உங்கள் வேலையை எப்படி அணுகுவீர்கள்? உங்கள் சிந்தனை, செயல் எல்லாம் எப்படி அமையும்? இப்போது கண்ணைத் திறந்து எதிரே கணினித் திரையைப் பாருங்கள். எழுதத் தொடங்குங்கள்.

### தன்னம்பிக்கை

உங்கள் முகப்புக் கடிதம் என்பது வேலைக்கு உங்கள் பொருத்தத்தை விளக்குவது. எனவே, அது தன்னம்பிக்கையில் மிளிர வேண்டும்

### திமிர் கூடாது

கடிதத்தில் தன்னம்பிக்கை மிளிர வேண்டுமே தவிர முகப்புக் கடிதம் திமிர்த்தனமாக இருக்கக் கூடாது. 'இந்த ஆளுக்கு ஓவர் கொழுப்பு' என்று படிப்பவர் நினைத்துவிடக் கூடாது. சரி, நீங்கள் எழுதுவது திமிராகத் தொனிக்கிறதா, அல்லது தன்னம்பிக்கையில் தொனிக்கிறதா என்று எப்படிப் புரிந்துகொள்வது? உங்களைப் பற்றி எழுதும்போது திறமையைத் தைரியமாகத் தடைகள் இன்றி விளக்குங்கள். அதே நேரம், நீங்கள் விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றி எழுதும்போது மரியாதை தொனிக்க எழுதுங்கள். எழுதியதைப் படிப்பவர் அந்த வித்தியாசத்தை உணரக்கூடும். 'இந்த நபர் தைரியமான ஆசாமிதான், அதே நேரம் மரியாதை தெரிந்தவர்' என்ற முடிவுக்குக் கடிதம் அவரைக் கொண்டுவந்துவிடும்.

### வேலை பற்றிய விவரம்

உங்கள் முகப்புக் கடிதத்தில் நீங்கள் விண்ணப்பிக்கும் வேலை பற்றிய விவரம் ஓரிரு வரிகள் வர வேண்டும். அதாவது, நீங்கள் வேலை விவரணை ஆவணத்தை முழுவதும் படித்துவிட்டிருக்கிறீர்கள். அதில் கேட்கப்பட்ட திறன்கள் பற்றி முழுமையாக அறிந்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் விண்ணப்பத்தைப் படிப்பவருக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அப்போது உங்களைப் பற்றிய மரியாதை அவருக்கு அதிகரிக்கும்.

### வேலை பற்றிய ஆர்வம்

நீங்கள் விண்ணப்பிக்கும் வேலையில் சேர்வது குறித்த உங்கள் ஆர்வம் கடிதத்தில் வெளிப்பட வேண்டும். 'இந்தப் பணியில் விரைவில் இணைந்து நிறுவனத்தின் முன்னேற்றத்துக்குப் பங்களிக்க ஆவலாக இருக்கிறேன்' போன்ற வரிகள் இடம்பெற வேண்டும். இதனை சும்மா மேம்போக்காக எழுதினால் படிப்பவருக்கு நம்பிக்கை வராது. எனவே, உண்மையிலேயே ஆத்மார்த்தமாக அந்த வரிகள் அமைய வேண்டும். அதாவது, உங்களுக்கு உண்மையிலேயே ஆர்வம் இருந்தால் அந்த வரிகளும் உண்மையாக வெளிப்படும். இல்லையேல் பாசாங்காக மட்டுமே படிப்பவருக்குத் தோன்றும்.

கடைசியாக, இந்த ஒரு வரியை மட்டும் மனதில் ஏற்றிக்கொள்ளுங்கள்: உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் மனிதவளத் துறை மேலாளருக்கு உங்கள் பயோடேட்டாவைத் திறந்து படிக்கலாமா வேண்டாமா என்ற முடிவை உங்கள் முகப்புக் கடிதம்தான் தீர்மானிக்கப் போகிறது. எனவே, அந்தக் கடிதத்தை முடிந்த அளவு கவனத்துடனும் நீங்கள் விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் மீதான மரியாதையுடனும் உருவாக்குங்கள்.



> முகப்புக் கடிதம் எழுதும் முன்பு கண்களை ஒரு நிமிடம் மூடி நீங்கள் அந்த வேலையில் சேர்ந்துவிட்டதுபோல நினைத்துக்கொள்ளுங்கள். புதிய நிறுவனத்தில் புதிய இடத்தில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். அப்போது உங்கள் வேலையை எப்படி அணுகுவீர்கள்? உங்கள் சிந்தனை, செயல் எல்லாம் எப்படி அமையும்? இப்போது கண்ணைத் திறந்து எதிரே கணினித் திரையைப் பாருங்கள். எழுதத் தொடங்குங்கள்!

### நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல்

உங்கள் பயோடேட்டாவைத் திறம்பட, தனித்துவமாக உருவாக்கிவிடுகிறீர்கள். முகப்புக் கடிதமும் தெளிவாக எழுதி அனுப்பிவிடுகிறீர்கள். உங்கள் பயோடேட்டா மற்றும் கடிதத்தைப் படித்து வியந்து உங்களை நேர்முகத் தேர்வுக்கும் அழைத்துவிடுகிறார்கள். அப்புறம் என்ன செய்வீர்கள்? நேர்முகத் தேர்வுக்குச் சென்ற இடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

நேர்முகத் தேர்வுக்கு, குறித்த நேரத்துக்கு சற்று முன்னதாக அலுவலகத்துக்கு சென்றுவிடுங்கள். அலுவலகம் எங்கே இருக்கிறது என்று தெரியாவிடில், கூகுள் மேப்பில் முன்னரே பார்த்துக்கொள்ளுங்கள். காலை 10 மணிக்கு நேர்முகத் தேர்வு எனில் 9.30 மணிக்கே அங்கே இருக்கும்படி திட்டமிட்டுக்கொள்ளுங்கள். ஆண்கள் எனில், ஒழுங்காக முகத்தை மழித்துவிட்டு அல்லது தாடி மீசையைத் திருத்தம்செய்துகொண்டு, நல்ல உடையை அணிந்துசெல்லுங்கள். ஆடையில், தாடியில் என்ன இருக்கிறது என்று கேட்கலாம். நீங்கள் விண்ணப்பிக்கும் வேலை பெறுவதற்கான ஆர்வம் உங்களுக்கு நிஜமாகவே இருக்கிறது என்பதை நீங்கள் வாயைத் திறப்பதற்கு முன்னரே உங்கள் தோற்றம் சொல்லிவிடும் என்பது வேலையை அளிக்கும் மனிதவளத் துறையினரின் நம்பிக்கை.

வேலையில் சேர்வதற்கான ஆர்வம் உங்களிடம் இருக்கிறது என்பதை இன்னொரு முக்கிய விஷயம் காட்டும். நேர்முகத் தேர்வுகளில் நான் கேட்கும் இரண்டாம் கேள்வி, 'எங்கள் நிறுவனத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?' பாதிப் பேர் இதிலேயே கழன்றுவிடுவார்கள். அவர்களுக்கு நிறுவனத்தின் பெயரைத் தாண்டி வேறு எதுவுமே தெரிந்திருக்காது. இன்னும் பலர் நிறுவனத்தின் பெயர், அவர்கள் தயாரிக்கும் பொருள் அல்லது வழங்கும் சேவை ஆகியவற்றைத் தாண்டி எதையும் தெரிந்துவைத்திருக்க மாட்டார்கள். நீங்கள் அப்படியிருக்காதீர்கள். நேர்முகத் தேர்வுக்குப் போகும் நிறுவனம் குறித்து ஒரு சிறிய ஆராய்ச்சி செய்யுங்கள்.

எப்படியும் நேர்முகத் தேர்வுக்கு ஓரிரு நாள்கள் அவகாசம் கிடைக்கும். அப்படி இல்லையேல் அவகாசம் கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள். ஒரு நிறுவனத்தின் மனிதவளத் துறையிலிருந்து 'இன்னும் பத்து நிமிடத்தில் கிளம்பி இன்டர்வியூவுக்கு வர்றியா?' என்று யாரும் கேட்க மாட்டார்கள். அப்படி எந்த நிறுவனமாவது கேட்டால் அந்த ஒரு காரணமே போதும், அந்த நிறுவனத்தில் நீங்கள் சேராமல் நிராகரிப்பதற்கு! பணிவுடன் மறுத்துவிடுங்கள். 'எனக்கு இன்டர்வியூ, தயாரிப்புக்குக் கால அவகாசம் தேவை' என்று வெளிப்படையாகவே கேட்டு நேரம் வாங்குங்கள். அந்தப் பதிலேகூட உங்களின் மதிப்பைக் கூட்டும்.

பின்னர், அப்படிப் பெற்ற நேரத்தை நேர்முகத் தேர்வுக்கான முன்தயாரிப்புக்குச் செலவிடுங்கள். நிறுவனம் குறித்து அனைத்து விவரங்களையும் படித்துக் குறித்துக்கொள்ளுங்கள். அந்தக் குறிப்புகளை இன்டர்வியூவுக்கு எடுத்துக்கொண்டேகூட போகலாம். கம்பெனி குறித்த கேள்விகளில் சில தரவுகள் நினைவில் வரவில்லை எனில், அவர்கள் எதிரிலேயே அந்தக் குறிப்புகளைத் திறந்து பார்த்து, 'சென்ற ஆண்டு உங்கள் நிறுவனத்தின் வருவாய் ஏழு கோடியே எழுபத்து ஐந்து லட்சம் வந்திருக்கிறது!' என்று சொல்லலாம். தவறே இல்லை. சொல்லப்போனால், 'எவ்வளவு பொறுப்பாகத் தயார் செய்து கொண்டு வந்திருக்கிறார்' என்று உங்கள் மீது மரியாதை கூடவே செய்யும்.

அடுத்து, இதர கேள்விகளுக்குத் தயார்செய்ய வேண்டும். உங்கள் சிறப்புத் திறன் எதுவோ அது சார்ந்த கேள்விகள்தான் பெரும்பாலும் கேட்பார்கள். அதிலும் இரண்டு வகைக் கேள்விகள் இடம்பெறும்.

- **அறிவுசார் கேள்விகள்**
- **திறன்சார் கேள்விகள்**

அறிவு என்பது ஒரு துறை அல்லது தொழில்நுட்பம் குறித்து நம் மூளையில் இருக்கும் தகவல்கள். திறன் என்பது அந்தத் தகவல்களை நாம் நமது வேலையில் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது குறித்தது. ஒரு நிறுவனத்துக்கு உங்கள் அறிவைவிடத் திறன்தான் முக்கியமாக இருக்கும். காரணம், இன்று அறிவு என்பது இணையத்தில் கொட்டிக்கிடக்கிறது. ஒரே ஒரு கூகுள் தேடலில் ஜாவாவின் மொத்த அறிவும் உங்கள் திரையில் மினுமினுக்கும். ஆனால், அதை எப்படித் திறன்படப் பயன்படுத்தி உங்கள் நிறுவனத்தின் தேவைகளை எப்படி எதிர்கொள்வது என்பதை கூகுள் சொல்லாது. அதற்குத்தான் நீங்கள் வேண்டும். எனவே, உங்கள் பதில்கள் அறிவுசார் பதிலாக இல்லாமல், திறன்சார் பதிலாக இருக்க வேண்டும்.

> “
> இந்த உலகை மாற்றுவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி.
>
> *– நெல்சன் மண்டேலா*
> ”

நேர்முகத் தேர்வில் பங்கெடுக்கும் முன்னர், நீங்களே ஒரு நேர்முகத் தேர்வாளராக மாறி கேள்விகளை உருவாக்குங்கள். அந்தக் கேள்விகளை உங்கள் கணினியில் அல்லது நோட்டுப் புத்தகத்தில் எழுதி அதற்குப் பதில்களை யோசித்து உருவாக்குங்கள். அந்தப் பதில்கள் திருப்திகரமாக உள்ளனவா என்று நீங்களே சுய விமர்சனத்துக்கு உள்ளாக்குங்கள். உங்கள் நண்பர் அல்லது உடன்பிறப்பு யாராவது முன்வந்தால் அவர்களிடம் கேள்விகளைக் கொடுத்து நேர்முகத் தேர்வை நிஜமாகவே நடத்தச் சொல்லலாம். மொபைலில் அந்த 'ரிகர்சல் இன்டர்வியூ'வைப் பதிவுசெய்து பின்னர் கேட்டு, அதில் எங்கெங்கே தடங்கல்கள் வந்தன என்று கண்டுபிடித்து அதற்கான பதில்களைத் திருத்தி எழுதலாம்.

நேர்முகத் தேர்வு நடக்கும்போது கேள்வி கேட்பவருக்கு முன்னுரிமை கொடுங்கள். அதாவது, நீங்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அவர் இடைமறித்தால் உடனே நிறுத்திவிடுங்கள். அவர் அடுத்த கேள்விக்குப் போய்விட்டால் நீங்களும் அவருடன் அடுத்த பதிலுக்குப் போய்விடுங்கள். 'நான்தான் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறேனே; என்னப்பா அவசரம்!' என்று முதல் பதிலை முழுமையாக முடிக்க எண்ணாதீர்கள். கேட்பவருக்கு உண்மையில் உங்கள் பதில் தேவையே இல்லை. உங்களுக்குப் பதில் தெரிந்திருக்கிறதா இல்லையா என்று புரிந்துகொள்வது மட்டும்தான் தேவை. இவனுக்குப் பதில் தெரிந்திருக்கிறது என்ற புரிதல் கிடைத்துவிட்டால் அவர் மேலும் நேர விரயம் செய்ய வேண்டாம் என்று அடுத்த கேள்விக்குப் போகலாம். அவர் இடைமறித்தவுடன் நீங்கள் பேசுவதை நிறுத்தினால் அது அவருக்குக் கொடுக்கும் மரியாதையாக இருக்கும். இரு தரப்பிலும் நேரமும் மிஞ்சும்.

நேர்முகத் தேர்வுகள் பல நேரங்களில் மன அழுத்தங்கள் உருவாக்கும் அனுபவமாகப் பலருக்கு இருக்கும். இங்கே குறிப்பிட்டுள்ள தயாரித்தல்களைப் பின்பற்றினால் அந்த மன அழுத்தம் பெருமளவு விலகி மிகுந்த தன்னம்பிக்கையுடன் நம்மால் நேர்முகத் தேர்வுகளை அணுக இயலும். அப்படி அணுகும்போது வெற்றி கிடைப்பதன் சாத்தியக்கூறு அதிகரிக்கிறது. உறுதியுடன் உழைப்பையும் மேற்கொள்ளுங்கள். தன்னம்பிக்கை அதிகரித்து வெற்றியை உரித்தாக்குங்கள்!

நன்றி: ஸ்ரீதர் சுப்ரமணியம், 'அருஞ்சொல்'

# 10 ஆட்சியராகலாம் வாங்க!

'நீ என்ன பெரிய கலெக்டரா?' என்ற கேள்வியை நாம் பல இடங்களில் எதிர்கொண்டிருக்கக்கூடும். அதென்ன பெரிய கலெக்டர்? கலெக்டராவதற்கு அப்படி என்னதான் படிக்க வேண்டும்?

இந்தியக் குடிமைப் பணிகளில் இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்தியக் காவல் பணி (IPS) உள்ளிட்ட அனைத்து மத்திய அரசின் 17 வகை 'A' தொகுதிப் பணிகளும் 6 வகை 'B' தொகுதிப் பணிகளும் அடங்கும். இவற்றில் ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎஃப்எஸ் ஆகிய மூன்றும் 'அனைத்து இந்தியப் பணிகள் சட்டம் 1951'இன் கீழ் அமைபவை.

பிரிட்டிஷ் காலத்தில் ICS (Indian Civil Service) என்று குறிப்பிடப்பட்ட இந்தப் பணி, சுதந்திர இந்தியாவில் இந்திய ஆட்சிப் பணி (Indian Administrative Service) என்று பெயர் மாறியது. இந்திய வனப் பணி (IFS) 1966 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இந்தத் தேர்வுகளை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) ஆண்டுதோறும் நடத்துகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இத்தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. சுதந்திர இந்தியாவில் முதல் போட்டித்தேர்வு 1947ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 2,000 பேர் எழுத்துத் தேர்வை எழுதினர். அதிலிருந்து இந்திய ஆட்சிப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 29 பேர் உட்பட மொத்தம் 150 பேர் 1948இல் பணியேற்றனர். ஐஏஎஸ்ஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 29 பேரில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 6 பேர்.

## கல்வி

இந்தியக் குடிமைப் பணித் தேர்வு எழுதுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதாவது ஓர் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தொலைதூரக் கல்வி மூலம் பட்டம் பெற்றவர்களும் இந்தத் தேர்வை எழுதலாம். முதற்கட்டத் தேர்வில் பொது அறிவு வினாக்கள் பட்டப்படிப்பு அளவிலும், முதன்மைத் தேர்வில் விருப்பப் பாடங்களின் வினாக்கள் முதுநிலைப் பட்டப்படிப்பு அளவிலும் அமைந்திருக்கும்.

## தேர்வு

முதல் கட்டத் தேர்வு (Preliminary Exam) இரண்டு தாள்களைக் ( GS1 & GS 2) கொண்ட கொள்குறிவகை வினாத் தேர்வாகும். இதில், தகுதித்தாளான இரண்டாம் தாளில் (CSAT) 33% மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே முதல் தாள் மதிப்பீடு செய்யப்படும்.

முதன்மைத் தேர்வு (Main Exam) 9 தாள்கள் கொண்ட எழுத்துத் தேர்வு, ஆளுமைத் தேர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்திய வனப் பணிக்கான முதன்மைத் தேர்வு, ஆறு தாள்கள் கொண்டது. அது தனியாக நடத்தப்படுகிறது. இந்தியக் குடிமைப் பணிக்கான முதல்கட்டத் தேர்வில் தேறியவர்கள் மட்டுமே இந்திய வனப்பணிக்கான முதன்மைத் தேர்வை எழுத இயலும்.

## மொழி

முதல்கட்டத் தேர்வு வினாத்தாள், ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே இருக்கும். முதன்மைத் தேர்வு வினாத்தாளும் அப்படியே. ஆனால், முதன்மைத் தேர்வை, தேர்வர்கள் விரும்பினால் இந்திய அரசமைப்பின் 8ஆவது அட்டவணையில் உள்ள எந்த மொழியிலும் (தமிழ் உட்பட) எழுதலாம். ஆளுமைத் தேர்வையும் ஆங்கிலம் அல்லது ஏதேனும் ஓர் இந்திய மொழியில் எதிர்கொள்ளலாம்.

முதன்மைத் தேர்வில், ஆங்கிலம் மற்றும் அட்டவணைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய மொழிகளுள் ஏதேனும் ஒன்று குறித்த இரு தாள்கள் தகுதித்தாள்களாக இடம்பெற்றுள்ளன.

முதன்மைத் தேர்விற்கான விருப்பப் பாடப் பட்டியலில் வரலாறு, புவியியல், பொது நிர்வாகம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட 26 பாடங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றிலிருந்து ஏதேனும் ஒரு பாடத்தையோ, 23 மொழிகளின் இலக்கியப் பாடங்களில் ஏதேனும் ஒன்றையோ விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்ளலாம். விருப்பப் பாடத்தில் இரண்டு தாள்கள் இடம்பெறும்.

## வயது

குடிமைப்பணித் தேர்வை 21 வயது முதல் 32 வயது வரை எழுதலாம். பட்டியலின, பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் 37 வயது வரை எழுதலாம். இதர பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிகபட்ச வயதுவரம்பு 35 ஆகும். மாற்றுத்திறனாளிகளுக்கு வயதுவரம்பில் பத்து வருடம் சலுகை உண்டு. முன்னாள் ராணுவத்தினருக்கு அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களோ அந்த வகுப்புக்கான வயது உச்சவரம்பிலிருந்து ஐந்து ஆண்டுகள் கூடுதலாக வழங்கப்படும்.

## தேர்ந்தெடுக்கப்படும் முறை

பொதுப்பிரிவினர் ஆறு முறையும், இதர பிற்படுத்தப்பட்டோர் ஒன்பது முறையும் தேர்வெழுதலாம். பழங்குடியினர் மற்றும் பட்டியலினத்தவர் 21 வயதிலிருந்து 37 வயது வரை எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம். தேர்வுக்கு விண்ணப்பித்தவர் முதல்கட்டத் தேர்வை எழுதினால்தான் தேர்வுக்கான முயற்சி எனக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். விண்ணப்பித்துவிட்டு முதல்கட்டத் தேர்வை எழுதாவிட்டால் அது வாய்ப்புமுறைக் கணக்கில் வராது.

தவறான விடைகளுக்கு எதிர் மதிப்பெண், தகுதித்தாள்கள் ஒவ்வொரு தாளிலும் குறைந்தபட்ச மதிப்பெண், இயங்கியல்தன்மை மிக்க வினாக்கள் (Questions of Dynamic Nature) தேர்வின் ஒருகட்டத்தில் தவறிவிட்டாலும், அடுத்த ஆண்டில் தேர்வை முதல்கட்டத்திலிருந்தே எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் என்று பல சவால்களை இந்தத் தேர்வு, தேர்வர்களுக்கு முன்வைக்கிறது. பள்ளிப் பாடங்களில் பெறுவதுபோல 95, 98 சதவிகித மதிப்பெண்ணை இத்தேர்வில் பெற முடியாது. சுமார் 40 முதல் 50 சதவிகித மதிப்பெண்ணே கட்–ஆஃப் மதிப்பெண்ணாக அமையும்.

முதல்கட்டத் தேர்வு எழுதுபவர்களில் சுமார் 3 சதவிகிதத்தினர் மட்டுமே முதன்மைத் தேர்வுக்குத் தகுதி பெறுகிறார்கள். 97 சதவிகிதத்தினர் முதல் கட்டத் தேர்வைத் தாண்டுவதில்லை.

முதல் கட்டத் தேர்வு எழுதுபவர்களில் 0.2 சதவிகிதத்தினர் மட்டுமே இறுதி வெற்றியாளர்களாக இருப்பதைக் கொண்டு இந்தத் தேர்வின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளலாம். 1970–க்குப் பிறகு இந்தத் தேர்வில் தமிழக மாணவர்களின் வெற்றி விகிதம் குறையத் தொடங்கியது. திறமையான மாணவர்களை இளம் வயதிலேயே அடையாளம் கண்டு ஊக்குவிப்பது, ஆங்கிலப் புலமையை அதிகரிப்பது போன்றவற்றால் மீண்டும் தமிழக மாணவர்களை எழுச்சிபெறச் செய்யலாம்.

காலத்திற்கேற்பப் புதுப்புது மாற்றங்களுக்கு உள்ளாகிவரும் இந்தத் தேர்வில் வெற்றிபெறக் கடின உழைப்பு, அறிவாற்றல், தொடர் வாசிப்பு, தகவல் பரிமாறும் திறன், அறச்சிந்தனை, பொறுமை, நேர்மை போன்றவை மிக மிக அவசியம்.

## UPSC – குடிமைப்பணித் தேர்வுக்கு உதவும் அரசு இணையதளங்கள்

- www.publicationdivision.nic.in
- www.finmin.nic.in
- www.pib.gov.in
- www.mea.gov.in
- www.mod.gov.in
- www.idsa.in

## UPSC – குடிமைப்பணித் தேர்வு – குறிப்புதவி நூல் பட்டியல் (ஆங்கில வழி)

### 1. Polity

- NCERT IX – XII textbooks
- Indian Polity M. Laxmikanth

### 2. History

- NCERT : VI, VII, VIII, XI, XII (History Books)
- TamilNadu Textbook Corporation: XI, XII History Books

**Modern India:**

- India's Stuggle for Independence – *Bipan Chandra*
- India After Independence–Bipan Chandra
- A Brief History of Modern India – *Spectrum*

**Medieval India:**

- History of Medieval India – *Sathish Chandra*

**Ancient India:**

- India's Ancient past by *R.S.Sharma*

### 3. Art & Culture

- NCERT : XI – Introduction to Indian Art
- Indian Art & Culture by *Nitin Singhania*

### 4. Geography

- NCERT : VI to XII – (Geography books)
- Certificate of Physical Geography by *GC Leong*
- World Atlas

### 5. Environment

- Environment Ecology: XII – NCERT / TN Textbook Corporation Book on Biology

### 6. Indian Economy

- NCERT : XI, XII – (Economics Books)
- Indian Economy by *Ramesh Singh*

### 7. India Year Book

### 8. Previous Year solved question papers for GS & CSAT

### 9. Regular Reading of Newspapers

### 10. Magazines like Competition Success Review



### இர. ஏஞ்சலின் ரெனிட்டா

நான் தஞ்சாவூர் மாவட்டம் மைக்கேல்பட்டி என்னும் கிராமத்தைச் சார்ந்தவள். என் பெயர் இர. ஏஞ்சலின் ரெனிட்டா (23). நான் 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய குடிமைப்பணித் தேர்வில் (All India Civil Service Examination) 338 ஆம் இடம் பிடித்தேன். பள்ளிப் படிப்பு முழுவதையும் தமிழ் வழியிலேயே பயின்றேன். என்னுடைய முதல் முயற்சியில் தோல்வி அடைந்தாலும், பெற்றோரின் உறுதுணையோடு எனது இரண்டாவது முயற்சியில் வெற்றி பெற்றேன். என் தந்தை ரவி (53) ஓட்டுநராக வாழ்வைத் தொடங்கியவர். சாதாரணக் குடும்பப் பின்னணியைக் கொண்ட நான் எனது விடாமுயற்சியாலும், உழைப்பாலும் ஐஏஎஸ் கனவை நனவாக்கி உள்ளேன்.



## ரம்யா சி. எஸ்.

எனது ஊர் கோயம்புத்தூர் மாவட்டம், காட்டூர். நான், 2021 இல் நடந்த இந்திய குடிமைப்பணிகள் தேர்வில் அகில இந்திய அளவில் 46 ஆம் இடத்தையும் தமிழக அளவில் 2 ஆம் இடத்தையும் பிடித்தேன். என் தாய் முத்துலெட்சுமி உள்ளிட்ட குடும்பத்தினர் அளித்த ஊக்கத்தினால் டிப்ளமோ, பிஇ, எம்பிஏ படிப்புகளை முடித்து குடும்பத்தின் முதல் பட்டதாரி ஆனேன். நான் படிப்புகளை மேற்கொள்ளப் பல கல்வி உதவித்தொகைகள் உறுதுணையாக இருந்தன. பெங்களூருவில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் நான்கு ஆண்டுகள் வேலை பார்த்து சேமித்ததை வைத்து கோவையில் இருந்தபடி குடிமைப்பணிகள் தேர்வுக்குத் தயாரானேன். ஐந்துமுறை தொடர் தோல்விகள் கண்டாலும், என் தவறுகளைத் திருத்திக்கொண்டு படித்ததால் – ஆறாவது முயற்சியில் வெற்றிபெற்றேன். "ஏழ்மையிலும் நேர்மை, துன்பத்திலும் தைரியம், தோல்வியிலும் விடாமுயற்சி" – வாழ்வின் பல சோதனைகளையும் தாண்டி என் தாயின் அரவணைப்பில் வளர்ந்த எனக்கு இதுவே வழிகாட்டி.

## UPSC குடிமைப்பணித் தேர்வு – குறிப்புதவி நூல் பட்டியல் (தமிழ் வழி)

### 1. இந்திய அரசமைப்பு

- இந்திய அரசமைப்பு – பேராசிரியர் ஆ. சந்திரசேகரன்
- இந்தியாவில் சட்ட முறைமை – *பாலிநரிமன்* (தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்) (தமிழில் *கண்ணையன் தட்சிணாமூர்த்தி*)

### 2. வரலாறு

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் – XI, XII (வரலாறு)
- இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு – *மாணிக்கவேலு*
- இந்திய விடுதலைப் பேராட்டம் – *க.வெங்கடேசன்*
- சுதந்திரத்திற்குப் பின் இந்தியா – *க.வெங்கடேசன்*
- நவீன கால இந்தியா – *பிபன் சந்திரா*
- இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியும் விடுதலைப் போராட்டமும் – *டாக்டர் சங்கர சரவணன்*
- உலக வரலாறு – புகுமுக வகுப்பிற்குரியது – தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (மறுபதிப்பு)

### 3. கலை மற்றும் பண்பாடு

- இந்தியக் கலை வரலாறு (2 புத்தகங்கள்) – *கோ. தங்கவேலு*

### 4. புவியியல்

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் – VI– XII (சமூக அறிவியல் மற்றும் புவியியல்)

### 5. பொருளாதாரம்

- இந்தியப் பொருளாதாரம் – *குருசரண் தாஸ்* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் – XI, XII (பொருளாதாரம்)
- இந்தியப் பொருளாதாரம் முக்கியக் கருத்துகள் – *சங்கர் கணேஷ் கருப்பையா*
- போட்டித் தேர்வில் பொருளாதாரம் – *டாக்டர். சங்கர சரவணன்*

### 6. சுற்றுச்சூழல் அறிவியல்

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள்: XI, XII (அறிவியல்)

### 7. CSAT

- அளவுத்திறன் (*R.S.அகர்வால்*)
- புறநிலை எண்கணிதம் – தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் – *எஸ்.சந்த் கூட்டு* வெளியீடு (அச்சில்)

**நன்றி: டாக்டர் சங்கர சரவணன், இணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

# 11 வங்கி வேலை வேண்டுமா?

அரசு வேலை என்பது இந்தியாவில் பல லட்சம் மாணவர்களின் கனவாக இருந்துவருகிறது. அதிலும் வங்கிகளில் வேலை பலரது பெருங்கனவு. இந்திய வங்கித் துறையில் நுழைய விரும்பும் மாணவர்கள், வங்கித் துறை தேர்வுகளைப் பேரார்வத்துடன் எதிர்பார்க்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும், இந்தியா முழுவதும், ரிசர்வ் வங்கி (RBI), பல்வேறு அரசுப் பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் (IBPS) ஆகியவை மூலம் பல வங்கித் தேர்வுகள் வருடம் முழுவதும் நடத்தப்படுகின்றன.

ஆண்டுதோறும் இந்திய வங்கித் துறையில் பல ஆயிரம் காலிப் பணியிடங்கள் மூலம் கிரேடு பி ஆபிசர் (Grade B Officer), புரொபேஷனரி ஆபிசர் (PO), கிளர்க் (Clerk), வங்கி உதவியாளர் (Assistant) போன்ற பதவிகளுக்கு எண்ணற்ற பணியிடங்கள் தேர்வுகள் மூலம் நிரப்பப்பட்டுவருகின்றன. ஆகவே, மாணவர்கள் நிரந்தர வங்கித் துறை வேலையைப் பெறுவதற்கு வங்கிப் போட்டித் தேர்வுகளை வென்றாக வேண்டும்.

வங்கித் துறை போட்டித் தேர்வுகள் மற்ற தேர்வுகளைக் காட்டிலும் சவாலானவைதான். திறனறிதல், நுண்ணறிவுத் திறன் சார்ந்த கேள்விகளுடன், ஆங்கில அறிவு, பொருளாதாரம், நிதி விழிப்புணர்வு, வங்கித் துறை சார்ந்த பொது அறிவுக் கேள்விகள் ஆகியவற்றைக் கொண்டவை வங்கித் தேர்வுகள். தினசரி பாடப் பயிற்சி, விடாமுயற்சி மற்றும் முறையான தேர்வுப் பயிற்சிகளை மேற்கொண்டு கடினமாக உழைத்தால் இந்திய வங்கிப் பணிகளில் சேர்வது மாணவர்களுக்குச் சாத்தியமாகும்.

## வங்கித் துறை – போட்டித் தேர்வுகள்

ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு தேர்வுகள் மூலம் இந்திய வங்கித் துறையில் அரசுப் பொதுத்துறை வங்கிகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இத்தேர்வுகளில் ஸ்டேட் பேங்க் ஆ∴ப் இந்தியா (State Bank of India) நடத்தும் SBI PO, SBI Clerk மற்றும் SBI SO தேர்வுகள், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) நடத்தும் IBPS PO, IBPS Clerk, IBPS SO, IBPS RRB PO மற்றும் IBPS RRB Clerk தேர்வுகள் மற்றும் இந்திய ரிசர்வு வங்கி (RBI) நடத்தும் RBI Grade B மற்றும் RBI Assistant ஆகிய தேர்வுகள் முதன்மையானவை.

> “கற்றுக்கொண்டே இருக்கும் வரை உங்களால் இளமையாக இருக்க முடியும்.
>
> *– எமிலி டிக்கின்சன்*”

பொதுத்துறை வங்கிகளில் Probationary Officers (PO) பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகள் முறையே முதல்நிலைத் தேர்வு (Prelims), முதன்மைத் தேர்வு (Main), நேர்முகத் தேர்வு (Interview) என மூன்று தேர்வு செயல்முறைகளைக் கொண்டிருக்கும்.

கிளர்க் பணிகளுக்கான தேர்வு செயல்முறையில் முதல்நிலைத் தேர்வு (Prelims) மற்றும் முதன்மைத் தேர்வு (Mains) மட்டுமே இருக்கும். நேர்முகத் தேர்வு கிடையாது. ஆனால், தேர்வின் சிரம நிலை ஒவ்வொரு வங்கித் தேர்வுக்கும் வேறுபட்டதாக இருக்கும். முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகள் இணையவழித் தேர்வுகளாக நடத்தப்பட்டுவருகின்றன.

ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளில் மட்டுமே பொதுத்துறை வங்கிகளுக்கான PO மற்றும் கிளர்க் போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. மண்டல ஊரக வங்கிகளுக்கான (Regional Rural Banks) அலுவலக உதவியாளர் (RRB Clerk) மற்றும் அலுவலர் நிலை 1 ஆகிய பணிகளுக்கான தேர்வுகள் ஆங்கிலம், இந்தி மற்றும் 13 பிராந்திய மொழிகளில் (அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி, கன்னடம், கொங்கனி, மலையாளம், மணிப்பூரி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு மற்றும் உருது) நடத்தப்படுகின்றன.

## கல்வித் தகுதி

புரொபேஷனரி ஆபீசர் (PO), கிளர்க் (Clerk) முதலிய வங்கித் தேர்வுகளை எழுத அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். Specialist Officer போன்ற பணியிடங்களுக்கு, அந்தந்தப் பிரிவுகளில் பட்டப்படிப்பு அல்லது முதுநிலைப் படிப்புகளைப் படித்திருக்க வேண்டும்.

இதுதவிர, வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) நடத்தும் மண்டல ஊரக வங்கிகளுக்கான (IBPS RRB) தேர்வுகளில், மாணவர்களுக்குத் தாங்கள் தேர்வு எழுதும் மாநிலத்தின் அல்லது யூனியன் பிரதேசத்தின் உள்ளூர் மொழி பற்றிய நல்ல அறிவு இருக்க வேண்டும். அதாவது அந்த மொழியில் பேசவும், எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

## வயது வரம்பு

வங்கித் தேர்வுகளுக்குப் பொதுவாகப் பதவிகளுக்கு ஏற்றாற்போல வயது வரம்பு அதிகாரபூர்வ அறிவிப்பாணையில் வெளியிடப்பட்டிருக்கும். புரொபேஷனரி ஆபீசர் பதவிக்கு 20 முதல் 30 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அதுபோல கிளர்க் பதவிக்கு வயது 20 முதல் 28 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பில், ஓபிசி பிரிவினருக்கு மூன்று ஆண்டுகளும், எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு ஐந்து ஆண்டுகளும், மாற்றுத்திறனாளிகளுக்குப் பத்து ஆண்டுகளும் தளர்வு அளிக்கப்படும். இதுதவிர, முன்னாள் இந்திய ராணுவத்தினர் மற்றும் கைம்பெண்கள் போன்றோருக்கு வயது வரம்பில் விலக்கு இருக்கும். தேர்வுகளுக்கான அதிகாரபூர்வ அறிவிப்பாணையைப் பார்த்து வயது வரம்பு குறித்து அறிந்துகொள்ளலாம்.

## வங்கித் தேர்வு முறை

### முதல்நிலைத் தேர்வு

முதல்நிலைத் தேர்வில் பகுத்தறியும் திறனறிதல் (Reasoning Ability – 35 கேள்விகள்), அளவுத்திறன் (Quantitative Aptitude 35 கேள்விகள்), ஆங்கில மொழித்திறன் (English – 30 கேள்விகள்) ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் 100 கேள்விகள் இடம்பெறும். இந்தத் தேர்வுக்கான கால அளவு 60 நிமிடங்கள் மட்டுமே.

மண்டல ஊரக வங்கிப் (Regional Rural Banks) பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வுகளில் திறனறிதல் (Reasoning Ability), அளவுத்திறன் (Quantitative Aptitude) ஆகிய இரண்டு பிரிவுகளிலிருந்து தலா 40 கேள்விகள் என மொத்தம் 80 கேள்விகள் இடம்பெறும். இந்தத் தேர்வுக்கான கால அளவு 45 நிமிடங்கள் மட்டுமே. முதல்நிலைத் தேர்வு தகுதித் தேர்வு மட்டுமே. இத்தேர்வில் தகுதி பெறுவோர், முதன்மைத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.



### முதன்மைத் தேர்வு

முதன்மைத் தேர்வு, பொதுவாக 200 மதிப்பெண்களுக்கு நடைபெறும். இதில் ஆங்கிலம் (English), திறனறிதல் (Reasoning Ability), கணிதம் (Quantitative Aptitude) மற்றும் பொது அறிவு அல்லது வங்கி விழிப்புணர்வு (General/ Financial Awareness) தொடர்பான கேள்விகள் என மொத்தம் 200 கேள்விகள் இடம்பெறும். இந்த முதன்மைத் தேர்வுக்கான கால அளவு 2 மணி நேரம். இந்தத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையிலே வேலை கிடைக்கும்.

### நேர்முகத் தேர்வு

Probationary Officer, Specialist Officer போன்ற பணிகளுக்கு நேர்முகத் தேர்வு முறை இருக்கும். முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். இதன் பின்னர் இறுதித் தேர்ச்சிப் பட்டியல் வெளியிடப்பட்டு, சான்றிதழ் சரிபார்ப்புக்குப் பின்னர், காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

## வெற்றிக்கான உத்திகள்

- வங்கித் தேர்வுக்கு மாணவர்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரமாவது தினசரி பயிற்சி செய்ய வேண்டும்.
- தேர்வு அறிவிப்பு வரும் வரைக்கும் மாணவர்கள் காத்திருக்காமல், தொடர் பயிற்சியில் ஈடுபட்டால் எளிதில் வங்கித் தேர்வுகளில் வெற்றி பெறலாம்.
- இணையவழித் தேர்வுகளாக நடப்பதால், தேர்வுகளை எழுதுவதற்கு முன்பு குறைந்தது இருபதுக்கும் மேற்பட்ட மாதிரித் தேர்வுகளை எழுதிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- மாதிரித் தேர்வு எழுதிப் பார்த்த பின்பு, எப்படி எல்லாம் மதிப்பெண்களை மேம்படுத்தலாம் என்பது குறித்து ஆராய வேண்டும்.
- தேர்வுகள் மற்றும் கேள்விகள் சார்ந்த சந்தேகங்களை உடனுக்குடன் நண்பர்கள் அல்லது ஆசிரியர்களுடன் நிவர்த்திசெய்துகொள்ள வேண்டும்.
- கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பத்தியிலிருந்து சரியான விடைகளைத் தேர்வுசெய்தல், வாக்கியங்களில் உள்ள தவறைக் கண்டுபிடித்தல், ஆங்கில வாக்கியங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற வினாக்கள் ஆங்கில மொழிப் பகுதியில் இடம்பெறும்.
- அடிப்படை ஆங்கில இலக்கணம், புரிந்துகொள்ளும் திறன், ஆங்கில மொழி வாக்கிய அமைப்பு ஆகியவற்றை வளர்ப்பது மதிப்பெண் பெற உதவும்.
- ஆங்கிலச் செய்தித்தாள்கள் மற்றும் தரமான மாத இதழ்கள், பத்திரிகைகளைத் தொடர்ந்து வாசித்து, நிதி விழிப்புணர்வு மற்றும் பொது அறிவு பகுதிக்குப் பயிற்சி பெற வேண்டும்.
- வங்கித் துறை சார்ந்த அடிப்படை இந்தியப் பொருளாதாரம், நாட்டுநடப்பு நிகழ்வுகள் பற்றிய கேள்விகள் நேர்காணலில் இடம்பெறும். உங்களைப் பற்றிய விவரங்கள், உங்கள் பெற்றோர், உங்கள் பட்டப்படிப்பு மற்றும் உங்களின் ஊர் பற்றிய செய்திகள், வங்கி வேலை பற்றிய அறிவுசார்ந்த கேள்விகள் போன்றவையும் கேட்கப்படும்.
- வங்கி வேலைக்கு நீங்கள் தகுதியானவர் என்பதை நிரூபிக்க ஒரு வாய்ப்பாகவே நேர்காணல் இருக்கும். அதெற்கெனப் பிரத்யேகமாக நன்கு பயிற்சி எடுத்துக்கொள்ளுங்கள்.

நன்றி: சந்தோஷ், வங்கித் தேர்வுப் பயிற்றுநர்

# 12 ஒன்றிய அரசு வேலைக்குப் போகலாமா?

எஸ்எஸ்சி (SSC–Staff Selection Commission) என்பது ஒன்றிய அரசுப் பணிகளுக்காகத் தேர்வுகளை நடத்தும் தேர்வாணையம். இந்த ஆணையம் ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களுக்கான பல்வேறு B, C, D நிலை ஊழியர்களைத் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கிறது. சான்றாக, வருமான வரித்துறை, சரக்கு மற்றும் சேவை வரித் துறை, மத்தியப் புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை, லஞ்ச ஒழிப்புத்துறை, உளவுத்துறை போன்ற பல்வேறு துறைகளின் அமைப்புகள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் செயல்படுகின்றன. இவை போன்ற பல்வேறு துறைகளில் பணிபுரியும் ஊழியர்களை எஸ்எஸ்சி என்னும் தேர்வாணையம் போட்டித் தேர்வின் மூலம் தேர்வுசெய்து பணியில் அமர்த்துகிறது. 2016 முதல் 2022 வரை எஸ்எஸ்சி தேர்வுகள் நடத்தப்படவில்லை. 2023ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான காலிப் பணியிடங்களைத் தேர்வு மூலம் நிரப்ப உள்ளதாக எஸ்எஸ்சி அறிவித்துள்ளது.

## எஸ்எஸ்சி நடத்தும் தேர்வுகள்

| வரிசை எண் | தேர்வு/ பணி | கல்வித்தகுதி | வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | கடைநிலை ஊழியர்களுக்காக நடத்தப்படும் MTS* (Multi Tasking Staff) எனும் தேர்வு | 10ஆம் வகுப்பு தேர்ச்சி, | 18–27 |
| 2 | எழுத்தர் (Lower / Upper Divisional Clerk), வரி உதவியாளர் (Tax Assistant), தணிக்கையாளர் (Auditor), இடைநிலை ஊழியர்களுக்காக நடத்தப்படும் தேர்வு CHSL (Combined Higher Secondary Level Exam) | +2 தேர்ச்சி | 18–27 |
| 3 | வருமான வரி அலுவலர் (Income Tax Inspector), மத்தியப் புலனாய்வுத்துறை அலுவலர் (CBI Officer), மத்திய உளவுத்துறை ஆய்வாளர் (IB Inspector), வெளியுறவுத்துறை அலுவலர்கள் (Officers in External Affairs) போன்ற பல்வேறு அலுவலர்களுக்கான பணியிடங்களை SSC ஆனது CGL (Combined Graduate Level Exam) எனப்படும் ஒருங்கிணைந்த பட்டதாரி நிலைத் தேர்வு வாயிலாகத் தேர்வுசெய்கிறது. | ஏதேனும் ஒரு இளநிலை பட்டப்படிப்பு | 20–30 |

* MTS பணியிடங்களுக்கான தேர்வு தற்போது தமிழில் எழுத அனுமதிக்கப்பட்டுள்ளது.

## தொடர்ந்து தேர்வெழுத வேண்டும்

பணியாளர் தேர்வாணையம் நடத்தும் 10th Level, +2 Level, Degree Level தேர்வுகளுக்கு ஒரேவிதமான பாடத்திட்டம் இருப்பதால் மாணவர்கள் தங்களுடைய கல்லூரியில் முதலாமாண்டு படிக்கும்போதே 10th Level, +2 Level தேர்வுகளை எழுத இயலும். மேலும், ஆர்ஆர்பி போன்ற ரயில்வே தேர்வாணையமும் 10th Level, +2 Level தேர்வுகள் நடத்துவதால், முதலாமாண்டு படிக்கும் மாணவர்களால் குறைந்தபட்சம் ஆண்டு ஒன்றுக்கு ஒரே பாடத்திட்டத்தைப் பயின்று, தேர்வாணையம் நடத்தும் 5–8 வெவ்வேறு தேர்வுகளை எழுத இயலும். அப்படி ஒரு மாணவர் அனைத்துத் தேர்வுகளையும் எழுதுவார் எனில், கல்லூரிப் படிப்பு முடிவதற்குள் 15–20 தேர்வுகளை எழுதி மிகப் பெரிய அனுபவத்தைப் பெற அவரால் இயலும். அவரால் கல்லூரிப் படிப்பிற்குப் பின்பு நடக்கும் Degree Level தேர்வுகளை எளிதாக வெல்ல இயலும்.

பொதுவாக, போட்டித் தேர்வுகள் அனைத்தும் சற்றே கடினமாகவும் மன உளைச்சலைத் தரக்கூடியவையாகவும் இருக்கும். அதையும் மீறி வெற்றிபெற வேண்டுமெனில் அதிகத் தேர்வுகளை எழுதி எழுதியே மிகப் பெரிய அனுபவத்தைப் பெற இயலும். மாணவர்கள் கல்லூரிக் காலத்திலே இந்த மாதிரி போட்டித் தேர்வுகளில் பங்குபெற்றுத் தங்களுடைய பலவீனங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வந்தால் 5–6 தேர்வுகளுக்குப் பிறகு மிகவும் பலம் பெற்றவராகி வெற்றி பெற்றுத் தகுதி உடையவராக மாறிவிடுகிறார்.

## எஸ்எஸ்சி தேர்வுகள், பாடத்திட்டங்கள்

1. **அளவுத்திறன் (Quantitative Aptitude)**
2. **திறனறிதல் (Reasoning)**
3. **ஆங்கிலம் (English)**
4. **பொது அறிவு (General Studies.)**

மேற்கூறிய பாடத்திட்டங்கள் எஸ்எஸ்சியில் மட்டும் அல்லாது ரயில்வே தேர்வு, வங்கித் தேர்வு, பாதுகாப்புப் படைத் தேர்வு போன்ற பல தேர்வுகளுக்கானவை ஆகும். Quantitative Aptitude, Reasoning ஆகிய இரண்டும் கணிதம் சார்ந்த கேள்விகள். அனைத்தும் பத்தாம் வகுப்பு வரை படித்த கணிதப் பாடத்திட்டங்களையே அடிப்படையாகக் கொண்டவை. மேற்குறிப்பிட்ட கணிதப் பாடத்திட்டங்கள் அனைத்தும் பத்தாம் வகுப்பு வரை படித்தவற்றை அடிப்படையாகக் கொண்டவை. அதை முறையாகப் பயின்றால் எளிதாக எதிர்கொள்ளலாம்.

ஆங்கிலப் பகுதியில் பத்தாம் வகுப்புவரையான பாடப் பகுதிகளிலிருந்து அடிப்படை ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் வினாக்கள் இருக்கும். பொது அறிவுப் பகுதியில் வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற பகுதிகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

பாடத்திட்டங்கள் அனைத்தையும் முறையாகப் பயின்றால் ஒருகட்டத்தில் பாடங்களை எளிதாகக் கற்றுவிடலாம். அதன் பிறகு மாணவர்கள் சந்திக்கப்போகும் பிரச்சினை என்னவெனில், நேர மேலாண்மை.

> **“ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளுக்கான தேர்ச்சி விகிதங்களில் தமிழகத்தின் பங்கு 1%க்கும் கீழ் உள்ளது. இதைத் தற்போதே களையாவிட்டால் மத்திய அரசு அலுவலகங்களில் தமிழர்களே இல்லை என்ற நிலை தோன்றி ஒருவித சமமற்ற சமூகம் உருவெடுக்கும் நிலை எழலாம்!”**



## நேர மேலாண்மை

Quantitative Aptitude, Reasoning, English, General Studies ஆகிய பிரிவுகளில் தலா 25 கேள்விகள் வீதம் மொத்தம் 100 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். 100 வினாக்களுக்கு அளிக்கப்படும் நேரம் 60 நிமிடம் மட்டுமே. எனவே, பல்வேறு மாதிரித் தேர்வுகளை எழுதி குறிப்பிட்ட நேரத்துக்குள் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கும் முறையான பயிற்சி இருந்தால் மட்டுமே இத்தேர்வுகளை வெல்ல இயலும். எஸ்எஸ்சி தேர்வில் வென்றால் சொந்த மாநிலத்திலேயே வேலைக்குச் செல்ல முடியும் என்பதை உணர்ந்துகொண்டால் ஓர் உத்வேகம் கிடைக்கும்.

## தமிழ்நாடு அரசின் முன்னெடுப்புகள்

'நான் முதல்வன்' என்ற திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசுத் தொலைக்காட்சியான, கல்வி டிவியில் எஸ்எஸ்சி தேர்வுகள், ரயில்வே தேர்வுகள் போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பிரத்யேக வகுப்புகள் நடந்துவருகின்றன. மேலும், அந்த வகுப்புகளை 'Tn – Carrier Service Employment' என்ற யூடியூப் தளம் வழியாகவும் காணலாம். இவை கல்வி டிவியில் காலை 7 முதல் 9 வரை ஒளிபரப்பாகின்றன. பின்னர், மாலையில் 7 முதல் 9 வரை மறுஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெறுவதற்குரிய வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் சிறப்புப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

எஸ்எஸ்சி, ரயில்வே தேர்வுகளுக்குப் பெரிதும் பயன்படும், ஆர்.எஸ்.அகர்வால் எழுதி எஸ்.சந்த் நிறுவனம் வெளியிட்டுள்ளன Reasoning, General Arithmatics நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கூட்டு வெளியீடாக விரைவில் வெளியாக உள்ளன.

ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளுக்கான தேர்ச்சி விகிதங்களில் தமிழகத்தின் பங்கு 1%க்கும் கீழ் உள்ளது. இதைத் தற்போதே களையாவிட்டால் பின்பு ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழர்களே இல்லை என்ற நிலை தோன்றி ஒருவித சமமற்ற சமூகம் உருவெடுக்கும் நிலை எழலாம். ஆகையால், இப்போதே விழித்துக்கொள்வோம். முறையான வழிகாட்டுதலோடும் பயிற்சியோடும் ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளிலும் தனிக் கவனம் செலுத்துவோம்; கூட்டாக வெற்றி பெறுவோம்.

நன்றி: கலைச்செல்வன், எஸ்எஸ்சி தேர்வுப் பயிற்றுநர்

# 13 அறியப்படாத பொதுத்துறை நிறுவனப் பணிகள்



இந்திய விடுதலைக்குப் பின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டைத் தொழில்மயமாக்க இந்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இன்று ஏறத்தாழ 300–க்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் இயங்குகின்றன.

பொதுத்துறை நிறுவனங்களில் பணியாளர்களை நியமிப்பதற்கு என ஒருங்கிணைந்த முறை எதுவும் இல்லை. தங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் தேவைப்படும் காலிப் பணியிடங்களைத் தாங்களாகவே நிரப்பிக்கொள்கின்றன. ஆகவே, பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களை மாணவர்கள் கவனித்து விண்ணப்பிக்க வேண்டும்.

பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் கேட் (GATE – Graduate Aptitude Test in Engineering) தேர்வு மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.

அதிக எண்ணிக்கையில் பொறியியல் கல்லூரிகளைக் கொண்ட தமிழ்நாட்டில், பொதுத்துறை நிறுவனப் பணிகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிக அளவில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால், நம் மாணவர்கள் தனியார் நிறுவனங்களில் வேலை தேடுவதில் காட்டும் ஆர்வத்தைப் பொதுத்துறை நிறுவனப் பணிகளில் காட்டுவது இல்லை.

பொதுத்துறை நிறுவனப் பணிகள் அரசுப் பணிகளுக்கு இணையான பணிப் பாதுகாப்பும் ஊதியமும் இதர சலுகைகளும் கொண்டவை.

பத்தாம் வகுப்பு முதல் அனைத்து வகையான பட்டப் படிப்புகளுக்கும் தொழில் படிப்புகளுக்கும் ஏற்ப லட்சக்கணக்கான பணிகள் பொதுத்துறை நிறுவனங்களில் கொட்டிக்கிடக்கின்றன.

நம் மாணவர்கள் செய்ய வேண்டிய ஒரே விஷயம், அந்தந்தப் பொதுத்துறை நிறுவன இணையதளத்தைக் கவனித்துத் தங்கள் படிப்பிற்கும் தகுதிக்கும் ஏற்ற திறமையான பணியைக் கண்டறிந்து விண்ணப்பித்து, வெற்றிபெறுவது மட்டுமே.

பொதுத்துறை நிறுவனப் பணிகளுக்கான ஆள்சேர்ப்பு பொதுவாக நான்கு வகையாக நடைபெறுகிறது.

1. GATE தேர்வு மதிப்பெண் அடிப்படையில்
2. NET (UCG & CSIR) தேர்வு மதிப்பெண் அடிப்படையில்
3. வளாகத் தேர்வு முறை
4. தனித் தேர்வு முறை

## 1. GATE தேர்வு

GATE தேர்வு மொத்தம் 29 பாடங்களுக்கு நடைபெறுகிறது. GATE தேர்வில் பெறும் மதிப்பெண்கள் மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும். GATE தேர்வின் அடிப்படையில் பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் விண்ணப்பதாரர்களை மதிப்பிட்டு, குழு விவாதம் மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் வேலைவாய்ப்பை வழங்குகின்றன.

**உதாரணமாக**

- ❖ பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (BPCL)
- ❖ பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC)
- ❖ கெயில் இந்தியா நிறுவனம் (GAIL)
- ❖ பாரத் எர்த்மூவர்ஸ் லிமிடெட் (BEML)
- ❖ இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL)

## 2. NET தேர்வு

**NET தேர்வு என்பதில்,**

i) UGC NET – பல்கலைக்கழக மானியக் குழு தேர்வு,

ii) CSIR NET அறிவியல் மற்றும் தொழில் துறை ஆய்வுத் தேர்வு (Council of Scientific & Industrial Research) என இரண்டு வகைகள் உள்ளன.

i) **UCG NET தேர்வு:** குறிப்பிட்ட சில பொதுத்துறை நிறுவனங்கள் UCG NET தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மாணவர்களைத் தேர்வுசெய்கின்றன. UCG NET தேர்வு மொத்தம் 84 பாடங்களுக்கு நடைபெறும். இதில் அனைத்து கலை மற்றும் அறிவியல் பாடங்கள் இடம்பெறும். அட்டவணை மொழிகள் அனைத்தும் அடங்கும்.

**உதாரணமாக**

- ❖ பாரத் மிகுமின் நிறுவனம் (BHEL)
- ❖ இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம் (IOCL)
- ❖ தேசிய அனல்மின் நிறுவனம் (NTPC)
- ❖ எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC)

ii) **CSIR NET தேர்வு:** சில பொதுத்துறை நிறுவனங்கள் CSIR NET தேர்வு மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு வேலைவாய்ப்பு வழங்குகின்றன. இந்தத் தேர்வு 6 பாடங்களுக்கு நடைபெறுகிறது.



**உதாரணமாக**

- பாபா அணுமின் ஆராய்ச்சி மையம் (BARC)
- இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO)
- இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் (IGCAR)
- இந்திய வேளாண் ஆய்வு நிறுவனம் (IARI)
- டாடா அடிப்படை ஆய்வு நிறுவனம் (TIFR)
- இந்திய அறிவியல் நிறுவனம் (IISc)

## 3. வளாகத் தேர்வு (Campus Interview)

சில பொதுத் துறை நிறுவனங்கள் ஆள்சேர்ப்புக்கு மற்றொரு வழியாக வளாக வேலைவாய்ப்பு முகாமைப் பயன்படுத்துகின்றன. கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு இந்த வளாகத் தேர்வு மூலம் வேலைவாய்ப்பு வழங்குகிறது.

## 4. தனித் தேர்வு

பொதுத்துறை நிறுவனங்கள் தாங்களாகவே தனித் தேர்வு மூலம் விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. இந்தத் தேர்வு 70% தொழில்நுட்பப் பாடமாகவும், மீதம் 30% Aptitude Test, அதாவது General Awareness, Reasoning & Aptitude, Current affairs, English ஆகியவற்றை உள்ளடக்கியது.

**உதாரணமாக**

- தேசிய கனிமவள மேம்பாட்டுக் கழகம் (NMDC)
- இந்திய அணு ஆற்றல் கழகம் (NPCIL)
- இந்திய அரிய வகை கனிம நிறுவனம் (IREL)
- இந்திய எஃகு இரும்பு நிறுவனம் (SAIL)
- இந்திய கப்பல் போக்குவரத்துக் கழகம் (SCIL)
- மத்திய ஊரக மின்மயமாக்கல் கழகம் (RECL)




தனியார் நிறுவனங்களில், குறிப்பாக ஐ.டி. நிறுவனங்களில் கிடைக்கும் சம்பளம் குறித்த புரிதல் உள்ள மாணவர்களுக்குப் பொதுத்துறை நிறுவனங்களின் சம்பளம், இதர சலுகைகள், பணிப் பாதுகாப்பு குறித்து எந்தப் புரிதலும் இல்லை. வெவ்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் பதவிகளின் அடிப்படையில் பல்வேறு சம்பள அமைப்புகளைக் கொண்டிருக்கும். இருப்பினும், அடிப்படைக் கூறுகள் பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்களில் ஒரே மாதிரியாக இருக்கும்.

பொதுத்துறை நிறுவனங்களின் தன்மையைப் பொறுத்தும், காலி இடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், பட்டதாரிகள், பொறியாளர்கள், மருத்துவம், சட்டம், கணக்கியல், மேலாண்மை போன்ற தொழில்முறை துறை பட்டம் என அனைத்துப் பட்டதாரிகளுக்கும், பத்தாம் வகுப்பு மற்றும்

பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கும் பொதுத்துறை நிறுவனங்களில் மாறுபட்ட விகிதத்தில் தேவைக்கேற்ப பணிகள் கொட்டிக்கிடக்கின்றன.

ஓட்டுநர், மெக்கானிக், இளநிலை பொறியாளர், மருத்துவர், சட்ட அலுவலர், கணக்கர், செயல் அலுவலர், உதவி மேலாளர், மேலாளர் எனப் பல வகையான பணி வாய்ப்புகளைப் பொதுத்துறை நிறுவனங்கள் வழங்குகின்றன. இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் அலுவலர்கள் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்புகள் எண்ணிலடங்காதவை.

## தமிழ்நாட்டுப் பொதுத்துறை நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் 60–க்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களை அடியொற்றித் தமிழ்நாடு அரசும் பொதுத்துறை நிறுவனங்களைக் கட்டமைக்கிறது. காலத்தின் தேவைக்கேற்ப தமிழ்நாடு அரசு அவ்வப்போது பொதுத்துறை நிறுவனங்களை நிறுவிவருகிறது.

2021இல் பொறுப்பேற்ற புதிய அரசு தமிழ்நாட்டுப் பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களைத் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் நிரப்ப உத்தரவு பிறப்பித்துத் தமிழ்நாட்டுப் பொதுத்துறை நிறுவனத் தேர்வுகளை முறைப்படுத்தியுள்ளது.

போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள் தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் சேர்வது எளிமையானது.

“

நீங்கள் நாளையே
இறந்துவிடுவீர்கள்
என்பதுபோல் வாழுங்கள்.
நீங்கள் என்றென்றும்
வாழ்வீர்கள் என்பதுபோல்
கற்றுக்கொள்ளுங்கள்.

*– மகாத்மா காந்தி*

”

**சில முக்கியமான மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள்:**

- ❖ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம்
- ❖ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
- ❖ தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழகம்
- ❖ தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம்
- ❖ தமிழ்நாடு மின்னனு நிறுவனம்
- ❖ தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

பொதுத்துறை நிறுவன வேலைவாய்ப்புகள் பற்றி நகர்ப்புற மாணவர்களுக்குக்கூடப் போதிய விழிப்புணர்வு இல்லை. பொதுத்துறை நிறுவனப் பணிகள் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களுக்கு வேண்டும்.

**நன்றி: கோ. கோமதி, ஐ.ஆர்.எஸ்.,**
**கூடுதல் ஆணையர், சரக்கு மற்றும் சேவை வரி & சுங்கத்துறை**

# 14 முப்படைப் பணியில் சேரலாமே!

பள்ளிப்படிப்பு முடித்த மாணவர்களுக்காக தேசிய பாதுகாப்பு அகாடமி (NDA) தேர்வு நடத்தப்படுவதுபோல் கல்லூரிப் படிப்பு முடித்தவர்களுக்கு இந்தியப் பாதுகாப்புப் படையில் அதிகாரிகளாக வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவது ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவை (CDS) தேர்வு.

இந்திய மிலிட்டரி அகாடமி (IMA), நேவல் அகாடமி (NA), ஏர்போர்ஸ் அகாடமி (AFA), ஆபீசர்ஸ் டிரெய்னிங் அகாடமி (OTA) ஆகியவற்றில் இளைஞர்களைச் சேர்ப்பதற்காக, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் வருடத்துக்கு இரண்டு முறை இந்தத் தேர்வுக்கான அறிவிப்புகளை வெளியிடுகிறது. வழக்கமாக ஜூன், அக்டோபர் மாதங்களில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு பிப்ரவரி, செப்டம்பர் மாதங்களில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

## வயது வரம்பு

இந்திய மிலிட்டரி அகாடமி: 19–24 வயது.

இந்திய நேவல் அகாடமி: 19–22 வயது.

ஏர்போர்ஸ் அகாடமி: 19–23 வயது.

ஆபீசர்ஸ் டிரெய்னிங் அகாடமி: 19–25 வயது.

## கல்வித் தகுதிகள்

இந்திய மிலிட்டரி அகாடமி: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்

ஆபீசர்ஸ் டிரெய்னிங் அகாடமி: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்

இந்திய நேவல் அகாடமி: பொறியியல் பட்டம்

ஏர்போர்ஸ் அகாடமி: பள்ளிப் படிப்பில் இயற்பியல் மற்றும் கணிதம் ஆகியவற்றோடு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது பொறியியல் பட்டம்.

## தேர்வு முறை

CDS எழுத்துத் தேர்வு கொள்குறி வகையிலான கேள்விகளைக் கொண்டிருக்கும். எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் NDA தேர்வில் உள்ளதைப் போலவே SSB நடத்தும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். ஐந்து நாள்கள் நடைபெறும் இந்தத் தேர்வுகளில் நல்ல, திறமையான அதிகாரிகளுக்கான தகுதியுடையவர்கள் தேர்வுசெய்யப்பட்டு அந்தந்த அகாடமியில் அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். CDS தேர்வுக்கான பாடத்திட்டங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து www.upsconline.nic.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம்.

## இந்திய ராணுவத்தில் வேலைவாய்ப்புகள்



ராணுவம் (அல்லது) தரைப் படையில் ஒருவர் இரண்டு வழிகளில் அதிகாரியாகப் பணியில் சேரலாம். முதலாவது, நிரந்தர கமிஷன். தரைப் படையில் சேரும் ஒருவர் பணி மூப்பு அடையும் வரை பணிபுரிவதை இது குறிக்கிறது. இப்படி நிரந்தரப் பணியில் NDA, CDS ஆகிய தேர்வுகளின் மூலமாக மட்டுமே ஒருவர் சேர முடியும். குறிப்பிட்ட கால இடைவெளியில் அடுத்தடுத்த பதவி உயர்வு வழங்கப்படுகிறது. 2 ஆண்டு பணிக் காலம் முடித்தவர்கள் லெஃப்டினன்ட்டாகவும், 4 ஆண்டு பணிக்குப் பின் கேப்டனாகவும், 13 ஆண்டுப் பணிக்குப் பின் மேஜராகவும் பதவி உயர்வு பெறலாம்.

இரண்டாம் வழியான குறுகிய கால கமிஷன் பணி வாய்ப்பும் தரைப் படையில் இருக்கிறது. இதன்படி, ஒருவர் 5 ஆண்டுகள் பணியாற்றிய பின்பு பணியிலிருந்து விலகலாம் (அல்லது) பணியை நீட்டித்துக்கொள்ளலாம் (அல்லது) அதன் பின் எப்போது வேண்டுமானாலும் பணி விலகலாம் (அல்லது) நிரந்தர கமிஷன் பணிக்கும் மாறிக்கொள்ளலாம். ஆபீசர்ஸ் டிரெய்னிங் அகாடமி பயிற்சிக்குப் பின் குறுகியகால கமிஷன் பணியில் ஒருவர் சேரலாம். இப்படி அதிகாரியாக நுழைவது தவிர, பிற பணி நிலைகளிலும் ஒருவர் தரைப் படைப் பணியில் சேர முடியும். பெரும்பாலான தரைப் படை வாய்ப்புகள் ராணுவ வீரர் நிலை வாய்ப்புகளாகவே இருக்கின்றன.

இவற்றுக்கு ஆள் தேர்வு முகாம்களின் மூலம் தகுதியுள்ள இளைஞர்கள் தேர்வுசெய்யப்பட்டு வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ராணுவ வீரர் நிலையில் பொது, தொழில்நுட்பம், செவிலியர், பண்டசாலைக் காப்பாளர், கிளர்க் ஆகிய பணிகளுக்கு நல்ல உடல் தகுதிகளுடன் 10–ஆம் வகுப்பு தகுதி இருந்தால் போதும். மேலும், வேலைவாய்ப்பு குறித்த அறிவிப்பு மற்றும் விவரங்களை www.indianarmy.nic.in என்ற தளத்தில் பார்க்கலாம்.

**"NDA, CDS ஆகிய தேர்வுகளின் மூலமாகப் பணியில் சேர்ந்தவர்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் அடுத்தடுத்த பதவி உயர்வு வழங்கப்படுகிறது. 2 ஆண்டு பணிக் காலம் முடித்தவர்கள் லெஃப்டினன்ட்டாகவும், 4 ஆண்டு பணிக்குப் பின் கேப்டனாகவும், 13 ஆண்டுப் பணிக்குப் பின் மேஜராகவும் பதவி உயர்வு பெறலாம்!"**

## இந்தியக் கப்பல் படைப் பிரிவு

NDA மற்றும் CDS தேர்வுகளில் தேர்ச்சி பெற்று நேவல் அகாடமியில் அதிகாரிகளாகப் பணியாற்றுவதுடன், வேறு சில தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதன் மூலமாகவும் இந்தியக் கப்பல் படைப் பிரிவு பணியில் சேரலாம்.



NCC ஸ்பெஷல் என்ட்ரி நேவல் அகாடமி, கோவா: 19–24 வயதுள்ளவர்கள், இளங்கலை இயற்பியல், கணிதம் படித்த அல்லது இளங்கலை பொறியியல் முடித்த NCC சான்றிதழ் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

டைரக்ட் என்ட்ரி நேவல் ஆர்மமென்ட் இன்ஸ்பெக்ஷன் கேடர் பணிகள்: இளங்கலை பொறியியலில் எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல் முடித்த அல்லது எலக்ட்ரானிக்ஸ், இயற்பியல் இவற்றில் ஒன்றில் பட்ட மேற்படிப்பு முடித்த 25 வயதுக்குள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

டைரக்ட் என்ட்ரி லா கேடர்: 22 முதல் 27 வயதுள்ள சட்டத்தில் 55 சதவீதத்துடன் பட்டப் படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். வேலைவாய்ப்பு குறித்த அறிவிப்பு மற்றும் விவரங்களை www.nausena–bharti.nic.in தளத்தில் காணலாம்.

## இந்திய விமானப் படைப் பிரிவில் வேலைவாய்ப்புகள்

உலக அளவில் மிகச் சிறந்த ஒன்றாக இந்திய விமானப் படை உள்ளது. இதில் அதிநவீன விமானங்கள் உள்ளன. மிகச் சிறந்த பயிற்சிகள், கட்டுக்கோப்பான வாழ்க்கை முறை, மனதளவில் நிறைவைத் தரும் பணிச் சூழல் என்று இந்தப் படையில் பணியாற்றுபவர்கள் பல சிறப்புகளைப் பெறுகிறார்கள்.

இந்திய விமானப் படையில் லோயர் டிவிஷன் கிளர்க், பண்டகக்காப்பாளர், பெயின்டர் மற்றும் ஃபிட்டர், மெக்கானிக் போன்ற பதவிகளும் அவ்வப்போது நிரப்பப்பட்டுவருகின்றன. இந்திய விமானப் படையின் மேற்கண்ட பதவிகளுக்கு 18–27 வயதுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். லோயர் டிவிஷன் கிளர்க் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் 12ஆம் வகுப்புக்கு நிகரான படிப்பை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் மூலமாக முடித்திருக்க வேண்டும். இத்துடன் ஆங்கிலத் தட்டச்சில் நிமிடத்துக்கு 35 சொற்கள் அல்லது இந்தி தட்டச்சில் நிமிடத்துக்கு 30 சொற்களைத் தட்டச்சு செய்யும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும். பண்டகக்காப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலமாகப் பட்டப் படிப்பை முடித்திருக்க வேண்டும். மேலும், வேலைவாய்ப்பு குறித்த அறிவிப்பு மற்றும் விவரங்களுக்கு www.indianairforce.nic.in என்ற தளத்தை அணுகலாம்.

நன்றி: த.இராமர், 'விகடன்' கல்வி மலர்

# 15 தமிழ்நாடு அரசுப் பணியில் ஆர்வமா?

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசுத் துறைகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான காலிப் பணியிடங்களை நிரப்புகிறது. இதற்காகத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பல தேர்வுகளை நடத்துகிறது.

## இடஒதுக்கீடு விவரம்

தமிழ்நாட்டில் அரசு வழங்கும் இடஒதுக்கீடு விவரங்களையும் தெரிந்துகொள்ளுங்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 26.5%, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – முஸ்லிம்களுக்கு 3.5%, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20%, பட்டியலினத்தவருக்கு 15%, பட்டியலின அருந்ததியினருக்கு 3%, பழங்குடியினருக்கு 1%. ஒவ்வொரு பிரிவிலும் பெண்களுக்கு 30%, தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு 20%, மாற்றுத்திறனாளிகளுக்கு 4% உள் ஒதுக்கீடு உண்டு.

**TNPSC நடத்தும் பல்வேறு முக்கியத் தேர்வுகளைப் பார்ப்போம்.**

## தொகுதி–1 தேர்வு (GROUP–1)

**பதவிகள்**

| வரிசை எண் | பதவியின் பெயர் | பணியின் பெயர் |
|---|---|---|
| 1 | துணை ஆட்சியர் | தமிழ்நாடு குடிமைப் பணி |
| 2 | துணைக் காவல் கண்காணிப்பாளர் | தமிழ்நாடு காவல் பணி |
| 3 | உதவி ஆணையர், வணிகவரித் துறை | தமிழ்நாடு வணிகவரிப் பணி |
| 4 | கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் | தமிழ்நாடு கூட்டுறவுப் பணி |
| 5 | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை | தமிழ்நாடு வளர்ச்சிப் பணி |
| 6 | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் | தமிழ்நாடு பொதுப் பணி |
| 7 | மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி) | தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி |
| 8 | மாவட்டப் பதிவாளர் | தமிழ்நாடு பதிவுத்துறைப் பணி |

### வயது வரம்பு

1. பொதுப் பிரிவினர் – 21 முதல் 34 வரை
2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தினர், பழங்குடியினர், பட்டியலினம் – அருந்ததியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – முஸ்லிம் ஆகியோருக்கு 21 முதல் 39 வரை.

### கல்வித் தகுதி

1. ஏதேனும் ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. இறுதி ஆண்டு படிக்கும் மாணவ–மாணவிகள் முதல்நிலைத் தேர்வில் கலந்துகொள்ளலாம்.

### வினாத்தாள் அமைப்பு

1. 175 கொள்குறிவகை வினாக்கள் இடம்பெறும்
2. 25 வினாக்கள் தர்க்கவியல் மற்றும் அடிப்படைக் கணிதத்திலிருந்து இடம்பெறும்

### தேர்வு முறை

1. முதல்நிலைத் தேர்வு (கொள்குறிவகை)
2. முதன்மைத் தேர்வு (எழுத்துத் தேர்வு) மூன்று தாள்கள் அடங்கியது.
3. $3 \times 250 = 750$ மதிப்பெண்கள்.
4. தமிழ் தகுதித்தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் கட்டாயம் எடுக்க வேண்டும்.
5. நேர்முகத் தேர்வு – 100 மதிப்பெண்கள்.

## தொகுதி–2–2A தேர்வு (GROUP–2–2A)

### முக்கியப் பதவிகள்

1. நகராட்சி ஆணையாளர்
2. துணை சார் பதிவாளர்
3. உதவித் தொழிலாளர் நலத்துறை அலுவலர்
4. வருவாய் உதவியாளர்
5. கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்

நேர்முகத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளுக்காகத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

### வயது வரம்பு

பொதுப்பிரிவினர் – 18 முதல் 32 வரை

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர், பழங்குடியினர், பட்டியலினம் – அருந்ததியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு – முஸ்லிம் ஆகிய பிரிவினருக்குப் பொதுவாக வயது வரம்பு இல்லை.

### கல்வித்தகுதி

ஏதேனும் ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும்.

### வினாத்தாள் அமைப்பு

#### முதல்நிலைத் தேர்வு

1. 200 கொள்குறி வகை வினாக்கள்
2. 100 வினாக்கள் பொதுத்தமிழ் / பொது ஆங்கிலம்
3. 25 வினாக்கள் அடிப்படைக் கணிதம்
4. 75 வினாக்கள் பொது அறிவு

#### முதன்மைத் தேர்வு

எழுத்துத் தேர்வு – ஒரு தாள் மட்டும் 300 மதிப்பெண்கள் (3 மணிநேரத் தேர்வு)

தமிழ் தகுதித் தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் கட்டாயம் எடுக்க வேண்டும்

நேர்முகத் தேர்வு – 40 மதிப்பெண்கள்

## தொகுதி IV தேர்வு (GROUP–4)



### பதவிகள்:

1. இளநிலை உதவியாளர் (Junior Assistant)
2. தட்டச்சர் (Typist)
3. சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno–Typist)
4. கிராம நிர்வாக அலுவலர் (Village Administrative Officer)
5. வரித் தண்டலர் (Bill Collector)
6. நில அளவையர் (Field Surveyor)
7. வரைவாளர் (Draftsman)

### வயது வரம்பு

1. பட்டியலினத்தவர், பட்டியலினம் – அருந்ததியினர், பழங்குடியினர் – 18 முதல் 37 வரை
2. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு – முஸ்லிம் ஆகிய பிரிவினருக்கு 18 முதல் 34 வரை
3. பொதுப்பிரிவினர் – 18 முதல் 32 வரை

## கிராம நிர்வாக அலுவலர்

1. பொதுப்பிரிவினர் – 21 முதல் 32 வரை
2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர், பட்டியலினத்தவர், பழங்குடியினர், பட்டியலினம் – அருந்ததியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு – முஸ்லிம் ஆகிய பிரிவினருக்கு – 21 முதல் 42 வரை

### கல்வித் தகுதி

10 / +2 தேர்ச்சி – பதவியைப் பொறுத்து கல்வித் தகுதிகள் மாறுபடும்.

### வினாத்தாள் அமைப்பு மற்றும் தேர்வு முறை

1. தாள் – 1

   100 வினாக்கள் (கொள்குறி வகை) – கட்டாயத் தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு.

   40 சதவீத மதிப்பெண்கள் கட்டாயம் எடுக்க வேண்டும்.

2. தாள் – 2

   100 வினாக்கள் (கொள்குறி வகை) – 75 பொது அறிவு வினாக்கள், 25 தர்க்கவியல் மற்றும் அடிப்படைக் கணித வினாக்கள்.

3. 3 மணிநேரத் தேர்வு

## தொகுதி VII–A, VII–B & VIII தேர்வுகள்

### பதவி

தமிழ்நாடு இந்து சமய அற நிலையக் கோயில்களில் செயல் அலுவலர்.

### வயது வரம்பு, கல்வித் தகுதி, வினாத்தாள் அமைப்பு தொகுதிக்கேற்ப மாறுபடும்.

இவற்றைத் தவிர இன்னும் பல்வேறு துறைசார்ந்த தேர்வுகளும் உள்ளன. விவரங்களுக்கு www.tnpsc.gov.in என்ற வலைத்தளத்தைப் பார்க்கலாம்.

பாடத்திட்டம், முந்தைய வருடங்களில் கேட்கப்பட்ட கேள்விகள் ஆகியவற்றை ஆராய்ந்து, தினந்தோறும் தொடர்ச்சியாகக் கற்றால் போட்டித் தேர்வுகளில் வெற்றிபெறுவது எளிது.



நன்றி: ராஜா பூபதி, போட்டித் தேர்வுப் பயிற்றுநர்

# 16 எளிதாகத் தொழிலதிபர் ஆகலாம்...

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி முடித்த பலருக்கும் பல விதமான ஆசைகள், கனவுகள் நிச்சயம் இருக்கும். சிலர் பொறியியல் துறையைத் தேர்வுசெய்வர். சிலர் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக வாய்ப்புகள் உள்ளதென்று அதைத் தேர்வுசெய்வர். சிலருக்கு அரசு, வங்கி வேலைகளில் நாட்டமிருக்கும். மற்றவர்களிலிருந்து தனித்து சாதிக்க நினைக்க விரும்புவோரும் உண்டு. இவர்கள் தங்களது தனித் திறமையை நிரூபித்துப் பார்க்க ஆசைப்படுவோர். மற்றவரிடம் வேலைசெய்வதைவிடத் தன்னால் 10 பேருக்கு வேலை தர முடியும் என்ற சிந்தனை மேலோங்கி காணப்படும். இத்தகையோர்தான் தொழில் முனைவோராக உருவாகின்றனர். அரசு, வங்கி, தனியார் துறையில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு தர முடியாத சூழலில் இத்தகைய சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களை ஊக்குவிக்க அரசு பல்வேறு சலுகைகளையும், கடன் உதவித் திட்டங்களையும் அளிக்கிறது.

முன்பெல்லாம் தனியாகத் தொழில் தொடங்க வேண்டுமென்றால் அதற்கு முதலீடு அவசியம். அவ்விதம் முதலீட்டைத் திரட்ட முடியாதவர்கள் தங்களது லட்சியங்களை முடக்கி, வேலை தேடும் படலத்தில் இணைந்துவிடுகின்றனர். ஆனால், இப்போதைய சூழலில் ஆர்வமும், திறமையும் உள்ள இளைஞர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை மாநில அரசு மட்டுமின்றி ஒன்றிய அரசும் அளிக்கிறது. இத்தகைய திட்டங்களைப் பற்றி நன்கு புரிந்துகொண்டால் அதில் தங்கள் தொழிலுக்குத் தேவையான கடன் திட்டத்தைத் தேர்வுசெய்து தொழில்முனைவோராகப் பிரகாசிக்கலாம்.

## பிரதமர் வேலைவாய்ப்புத் திட்டம்

பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்க (PMEGP) திட்டத்தின்கீழ் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ. 25 லட்சம் வரை கடன் அளிக்கப்படுகிறது. தொழில்துறையாக இருப்பின் ரூ. 25 லட்சமும், சேவை சார்ந்த தொழிலுக்கு ரூ. 10 லட்சம் வரையிலும் கடன் அளிக்கப்படுகிறது. 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு உற்பத்தித் துறை சார்ந்த தொழிலுக்கு ரூ. 10 லட்சமும், சேவை சார்ந்த தொழிலுக்கு ரூ. 5 லட்சமும் கடனாக வழங்கப்படுகிறது. கடன் பெறுவதற்குக் குறைந்தபட்ச வயது 18, உச்சபட்ச வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை.

இப்பிரிவில் கடன் பெறுபவர்களுக்குக் கடன் தொகையில் நகர்ப்பகுதியில் உள்ளவர்களுக்கு 15 சதவீதமும், கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு 25 சதவீதம் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது. தொழிலுக்கான மொத்த முதலீட்டில் 10 சதவீதம் மார்ஜின் தொகையைத் தொழில்முனைவோர் தங்களது பங்களிப்பாகச் செலுத்த வேண்டும்.

பட்டியலினத்தவர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மகளிர், முன்னாள் படைவீரர்கள், மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் ஆகியோருக்கு 25 சதவீதமும், கிராமப்பகுதியில் உள்ளவர்களுக்கு 35 சதவீதம் வரையிலும் மானியம் அளிக்கப்படுகிறது.

கடன் விண்ணப்பங்களை www.kviconline.gov.in/pmegp என்னும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

## தேவைப்படும் ஆவணங்கள்

- பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
- ஆதார் அட்டை
- தொழில் தொடங்குவதற்கான திட்ட அறிக்கை, ஜிஎஸ்டியுடன் சேர்ந்த மதிப்பீடு
- சாதிச் சான்றிதழ்
- கல்விச் சான்றிதழ்
- கிராமப்பகுதியாக இருப்பின் கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சித் தலைவர் அல்லது செயலரிடமிருந்து பெறப்பட்ட மக்கள்தொகைச் சான்று
- மாற்றுத் திறனாளியாக இருப்பின் அதற்குரிய அடையாள அட்டை
- வங்கிக் கணக்குப் புத்தகம்

தொழில்முனைவோர் வளர்ச்சிக்கான பயிற்சியைக் கடன் பெறுவோர் கட்டாயம் மேற்கொண்டிருக்க வேண்டும். இந்தப் பயிற்சியைக் கடன் பெற்ற ஓராண்டிற்குள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

## புதிய தொழில்முனைவோர் திட்டம்

NEEDS எனும் இத்திட்டம் முதல் தலைமுறை தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது. பெருந்தொழில் நிறுவனங்களுடன் பரிச்சயம் ஏற்படுத்துவது, பயிற்சி அளிப்பது, வணிகத் திட்டங்களை வகுக்க உதவுவது, தொழில் தொடங்க ஆயத்தம் செய்வது ஆகிய அனைத்துப் பணிகளும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 21 வயது நிரம்பியவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். அதிகபட்ச வயது வரம்பு 35. கல்வித் தகுதியாகப் பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும் தொழில் பயிற்சி (ஐடிஐ) உள்ளிட்டவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்சம் ரூ. 10 லட்சம் முதல் ரூ. 5 கோடி வரை இத்திட்டத்தின்கீழ் கடனுதவி பெற முடியும். தொழில் தொடங்குவதற்கான இடம், கட்டடம், இயந்திரங்களுக்கு முதலீடு செய்ய கடனுதவி வழங்கப்படுகிறது. பொதுப் பிரிவினர் திட்ட முதலீட்டில் 10 சதவீதமும், சிறப்புப் பிரிவினர் முதலீட்டில் 5 சதவீதமும் தங்களது பங்களிப்பாக முதலீடு செய்ய வேண்டும். இத்திட்டத்தில் அதிகபட்ச மானியம் ரூ. 50 லட்சமாகும். வட்டி மானியமும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கடனுதவி பெற விரும்புவோர் விண்ணப்பங்களை www.msmeonline.gov.in/needs என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

> **உற்பத்தித் தொழிலுக்கு அதிகபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 15 லட்சமும், சேவைத் தொழிலுக்கு ரூ. 5 லட்சம் வரையிலும் கடன் அளிக்கப்படும். தமிழ்நாடு அரசு ரூ. 2.5 லட்சம் வரை மானியமும் அளிக்கிறது. இந்தக் கடன் பெறுவதற்குச் சொத்து பிணையம் தேவையில்லை!**

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான திட்டம்

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டமாக UYEGP செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க விரும்புவோர் குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொதுப் பிரிவினருக்கு உச்சபட்ச வயது வரம்பு 35 ஆகவும், சிறப்புப் பிரிவினருக்கு 45 ஆகவும் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் தொழிலுக்கு அதிகபட்ச முதலீட்டு தொகை ரூ. 15 லட்சமும், சேவைத் தொழிலுக்கு ரூ. 5 லட்சம் வரையிலும் கடன் அளிக்கப்படும். பயனாளிகளுக்குத் தமிழ்நாடு அரசு 25 சதவீதம் மானியம் அளிக்கிறது. அதிகபட்சம் ரூ. 2,50,000 வரை மானியம் அளிக்கப்படுகிறது. இக்கடன் பெறுவதற்குச் சொத்து பிணையம் தேவையில்லை. இத்திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க விருப்பமுள்ளவர்கள் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

## தேவையான ஆவணங்கள்

- கல்விச் சான்றிதழ்
- ஆதார் அட்டை
- குடும்ப அட்டை
- சாதிச் சான்றிதழ்
- திட்ட அறிக்கை மதிப்பீடு
- திட்ட அறிக்கை தொகை

ஆகியவற்றின் நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

ஆயத்த அடைகள் தயாரித்தல், ஆடை வடிவமைப்பு உள்ளிட்ட 58 வகையான தொழில்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன் அளிக்கப்படுகிறது. தாங்கள் தொடங்கும் தொழில் இந்தத் தொழில் பிரிவில் உள்ளதா என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப தேர்வுசெய்வது உரிய பலனை அளிக்கும்.

## தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்

சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குச் சிரமமின்றிக் கடன் கிடைப்பதற்காகத் தமிழக அரசு உருவாக்கியுள்ள கடன் உறுதித் திட்டமாகும். டிஎன்சிஜிஎஸ் திட்டம் மூலம் ரூ. 40 லட்சம் வரை கடன் பெறலாம். ஏற்கெனவே தொழில் தொடங்கி அதற்குக் கூடுதலாக முதலீடு தேவைப்படும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் பெறலாம். இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்க 2023–24 பட்ஜெட்டில் ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு, குறு தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து தொழிலை நடத்துவதற்குப் போதிய நிதிக் கையிருப்பு மிகவும் அவசியமாகிறது. பொருள்களை உற்பத்தி செய்து அதை விற்பனையாளருக்கு விநியோகித்த பிறகு, அவரிடமிருந்து பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்போது, பணப் புழக்கம் முடங்கித் தொடர்ந்து தொழிலை நடத்த முடியாத சூழல் ஏற்படும். அதுபோன்ற சமயங்களில் தொழிலைத் தொடர்ந்து நடத்த இந்த உத்தரவாதக் கடன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பித்த 24 மணி நேரத்திலேயே கடன் வழங்க வங்கிகள் தயாராக உள்ளன.

நன்றி: எம். ரமேஷ், ஊடகவியலாளர்

# 17 புதுயுகத் தொழில் தொடங்கு!

21ஆம் நூற்றாண்டு உங்களுக்குப் பல தொழில் வாய்ப்புகளை வழங்குகிறது. ஒரு தொழில்முனைவோராக உங்களைச் செதுக்கிக்கொள்வது எப்படி என்பதைப் பற்றியும், உங்கள் நிறுவனத்தைத் தமிழ்நாட்டில் ஏன் உருவாக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பேசலாம். இது சாதிக்க வேண்டும் என்ற 'எண்ணம்' உள்ளவர்களுக்கான கட்டுரை.

பெரியவர் ஒருவரை அண்மையில் சந்தித்தேன். அவருடன் நடந்த சிறு உரையாடலை இங்கே உங்களுடன் பகிர்ந்துகொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ஏறத்தாழ 75 வயதுக்கு மேற்பட்ட அந்தப் பெரியவரிடம், உங்கள் கடந்தகால வாழ்க்கையில் எதை நினைத்து வேதனைப்படுகிறீர்கள் என்று கேட்டேன். "நான் நல்ல சம்பளம் கிடைத்த வேலையில்தான் இருந்தேன். குடும்பத்திலும் பெரிதாகக் கஷ்டங்கள் எதுவும் இல்லை. ஆனால், இப்போது என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால் ஏதோ ஒன்றைப் பெரிதாக இழந்தது போன்ற ஓர் உணர்வு இருக்கிறது. பார்த்த வேலையை ஒரு கடமைக்காகச் செய்தது போன்ற உணர்வு. அதை நான் பிடித்துச் செய்யவில்லை. பிடித்த வேலையைச் செய்வதற்குப் பயம். இருப்பதை இழந்துவிடுவோமோ என்ற பயம். தோற்றுவிட்டால் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் என்ன பேசுவார்களோ என்ற பயம். என்னால் என்ன செய்திருக்க முடியுமோ அதை நான் செய்யவில்லை. ஒரு ரேஸ் காரை வைத்துக்கொண்டு அதை மாட்டு வண்டியாகப் பயன்படுத்தியதைப் போல் உணர்கிறேன்".

நான் இவரைப் போன்ற வயது முதிர்ந்த பலருடனும் உரையாடி இருக்கிறேன். மேற்கண்ட பெரியவரின் வயதுடையவர்களில் சொந்தத் தொழில் செய்தவர்கள் பகிரும் எண்ணங்கள் முற்றிலும் வேறு மாதிரி இருப்பதைப் பார்த்திருக்கிறேன். தான் விரும்பியதைச் செய்தேன் என்பது அவர்களுக்கு ஒரு பெருமிதம் தரும் உணர்வாக இருந்தது. சுயமாகச் சாதித்தல் என்பது அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் ஒரு மனநிலை, நிம்மதி.

## விலைமதிப்பற்ற காலம்

இந்த உரையாடல் அனுபவங்களை நான் ஏன் இங்கே சொல்கிறேன் என்றால், காலம் ஒன்றுதான் உலகில் விலைமதிப்பற்றது. நீங்கள் அதை ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

தொழில்முனைவோர்கள் மட்டும்தான் வயதான காலத்தில் திருப்தியாக இருக்கிறார்கள் என்பதனை நிறுவுதல் என் நோக்கம் இல்லை. அனைவருக்கும் அது சாத்தியமுமில்லை. ஆனால், ஆர்வம் இருந்தும் அச்சம் காரணமாக வாய்ப்புகளைத் தவறவிடுபவர்களைப் பற்றிப் பேசுகிறேன். தொழில்முனைவு என்பது பணம் சம்பாதிக்கும் பொருட்டு வேலைக்குப் போவதற்கு ஒரு மாற்று அல்ல. தொழில்முனைவு என்பது ஒரு வாழ்க்கை முறை.

உங்கள் எண்ணங்களே உங்களை உருவாக்குகின்றன. உங்கள் உள்ளுணர்வு என்பது எண்ணங்களின் இயற்கை ஊற்று. உங்கள் உள்ளுணர்வு நீங்கள் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறது என்பதை அவதானித்துப் பாருங்கள். அதுவே உங்கள் உண்மையான வழிகாட்டி என்கிறார் ஸ்டீவ் ஜாப்ஸ். ஒவ்வோர் இளைஞருக்குள்ளும் அற்புதமான படைப்பாற்றல் இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னால்கூட அத்தகைய படைப்பாற்றலுக்குத் தேவையான வடிகாலை நமது புறச்சூழல் தந்ததில்லை. ஆனால், இப்போது ஆர்வமும் ஆற்றலும் மிக்க இளைஞர்களின் கனவுகளுக்கு வடிவம் கொடுக்க உங்கள் புறச்சூழல் பல்வேறு வாய்ப்புகளைக் கொட்டிக் கொடுக்கிறது.

அது காலமாற்றத்தின் பலன். இன்று நீங்கள் ஒரு தொழில்முனைவோராக விரும்பினால் அதற்கான காலம் கனிந்துவந்திருக்கிறது. ஆனால் பெரும்பாலான கல்லூரி மாணவர்கள் அந்த வெற்றிப் பாதைகளைப் பற்றி ஏன் சிந்திப்பதில்லை? இதற்கு உங்களைச் சுற்றி உள்ள பெற்றோர், உறவினர், சமூகத்தினர் திணித்த அச்சம்தான் காரணம். உங்களைப் பற்றி மிக நன்கு அறிந்தவர் நீங்கள்தான். உங்கள் மனத்தின் உண்மையான தேடலை உங்கள் உள்ளுணர்வின் குரலைக் கேட்பதன் மூலமாகப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்குள் ஒரு தொழில்முனைவோர் இருந்தால் அவரைக் கைகுலுக்கிக் கட்டி அணைத்துக்கொள்ளுங்கள். தீராத ஆர்வமும் புதுமைக்கான தேடலும் உங்களிடத்தில் இருந்தால் ஒரு வெற்றிகரமான புதுயுகத் தொழில் நிறுவனத்தை நீங்கள் உருவாக்குவதை யாராலும் தடுக்க முடியாது. உங்கள் பின்புலமோ, உங்கள் பெற்றோரின் தகுதியோ, நீங்கள் வாழும் ஊரோ, நீங்கள் படிக்கும் கல்லூரியோ எதுவுமே உங்களுக்குத் தடையாக இருக்க முடியாது.

## வெற்றிபெற்றவரின் சொத்து

மனம்தான் உங்களை வழிநடத்தும் சக்தி. எனவே உங்களைப் பற்றிய தன்மதிப்பு எப்போதும் உயர்வாகவே இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் மீது உங்களுக்கே ஒரு மதிப்பு இல்லை என்றால் ஏன் என்று ஆராயத் தொடங்குங்கள். நம்பிக்கையானவர்களிடம் பேசுங்கள். உங்களுக்கு விடை கிடைக்கும். அந்த விடைகளை உங்களுக்குள் உள்வாங்கும்போது உங்கள் தன்மதிப்பு தானாகவே உயரும். பெரும் வெற்றி பெற்ற மனிதர்களின் முதல் சொத்து இதுதான். தன்னம்பிக்கை என்பது உங்கள் மீது நீங்கள் கொண்டிருக்கும் தன்மதிப்பின் மூலமாகவே தொடங்குகிறது.

தன்மதிப்புடனும், தன்னம்பிக்கையுடனும் பயணிக்கத் தொடங்கும் ஒருவர் புதுமையான சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவனத்தைத் தொடங்க நினைக்கலாம். ஆனால் அதுவே அவருக்கு வெற்றியைக் கொண்டுவந்து சேர்க்காது. அது ஒரு முதல் படிதான். ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கான பாதை சற்றுக் கடினமானது. ஆனால் வெகு சுவாரசியமானது. தீராத ஆர்வத்துடன் கூடிய தேடல்களும் மிகுந்த சவால்கள் நிறைந்த பயணங்களும் எப்பொழுதுமே நமக்கு ஒரு பெரும் திருப்தியைத் தரும். வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைத் தரும். அதன் விளைவுகளே செல்வமும் புகழும். தொழில்முனைவு என்பது பணத்தைத் தேடிய பயணம் அல்ல. ஒரு அர்த்தத்தைத் தேடிய பயணம். தொழில்முனைவு என்பது ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சி. அத்தகையதொரு முயற்சியில் ஒரு சிறு விளைவாகக் கிடைப்பதுதான் பணம். பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஒரு தொழில்முனைவோர் தன் பயணத்தைத் தொடங்கினால், தோல்விகள் வரும்போது



துவண்டுவிடுவார். அந்தப் பயணத்திலிருந்து விலகிவிடுவார். ஆனால் ஒரு குறிக்கோளை, ஒரு நோக்கத்தை, ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் மனோபாவத்தைக் கொண்டிருக்கும்போது தோல்விகள் நம்மை துவளச் செய்யாது. தொழில்முனைவு சார்ந்த மனவியல் இப்படித்தான் வேலைசெய்கிறது.

## தொழில்முனைவின் அனுகூலங்கள்

சரி, ஒரு தனிமனிதராக, மனவியல் அடிப்படையில் நீங்கள் ஏன் தொழில்முனைவோர் ஆக வேண்டும் என்று பார்த்தோம். அதைத் தாண்டி சிந்திப்பீர்களேயானால் வேறு பல உண்மைகள் உங்களுக்குப் புலப்படும். செல்வம் சார்ந்த இந்த உலகம் பெரும்பாலும் தொழில்முனைவோர் செயல்பாடுகள் காரணமாகவே இயங்குகிறது. மிகச் சிறிய எண்ணிக்கையிலான அவர்கள் உருவாக்கும் நிறுவனங்கள்தான் பெரும்பான்மை மக்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கித் தருகிறது. ஒரு தொழில்முனைவோர் உருவாகும்போது அவருடைய குடும்பம் மட்டுமின்றி தலைமுறையே மிகப் பெரிய நன்மாற்றத்தை அனுபவிக்கிறது. அதிக எண்ணிக்கையிலான தொழில்முனைவோரைக் கொண்ட மாநிலங்களும் நாடுகளும் ஏனைய நிலப்பரப்புகளுடன் ஒப்பிடும்போது சக்தி மிகுந்தவையாக இருக்கின்றன. எனவே, தொழில்முனைவு என்பது சுயமுன்னேற்றம் சார்ந்தது மட்டும் அல்ல. நம் ஊரின், மாநிலத்தின், நாட்டின் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கிறது.

அதுவும் இன்றைய காலகட்டத்தில் தொழில்முனைவு என்பது எல்லோராலும் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பாக மாறிக்கொண்டிருக்கிறது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் கடந்த 50–60 வருடங்களில் ஏற்பட்ட கல்விப் புரட்சியின் காரணமாக ஒரு அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கி இருக்கிறோம். ‘ஸ்டார்ட்அப்’ என்று சொல்லப்படும் புதுயுகத் தொழில்முனைவு என்பது அறிவாற்றலின் அடிப்படையிலானது. எனவே, ஸ்டார்ட்அப் நிறுவனங்களை உருவாக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு சாதகமானது. இந்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது.

20 – 25 வருடங்களுக்கு முன்பு உருவான மென்பொருள் துறை வாய்ப்புகள் அந்தக் காலகட்டத்தில் மிகப் பெரிய பொருளாதார உயர்வை நம் சமூகத்தில் உருவாக்கின. அது ஒரு கால மாற்றத்தின் வாய்ப்பு.



இப்போது அதைவிட உயர்வான தொழில்நுட்பம் சார்ந்து உருவாகும் தொழில்முனைவு வாய்ப்புகள் தமிழ்ச் சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லக் கூடியவையாக உருவாகியுள்ளன. சம்பளம் வாங்கும் ஒரு பிரிவினரைக் கடந்தகால மென்பொருள் துறை உருவாக்கியது என்றால், இப்போது பெருகிவரும் ஸ்டார்ட்அப் வாய்ப்புகள் பலருக்கும் சம்பளம் தரும் ஒரு குழுவினரை உருவாக்கும் ஆற்றல் படைத்தவையாக இருக்கின்றன.

> **உங்கள் எண்ணங்களே உங்களை உருவாக்குகின்றன. உங்கள் உள்ளுணர்வு என்பது எண்ணங்களின் இயற்கை ஊற்று. உங்கள் உள்ளுணர்வு நீங்கள் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறது என்பதை அவதானித்துப் பாருங்கள். அதுவே உங்கள் உண்மையான வழிகாட்டி என்கிறார் ஸ்டீவ் ஜாப்ஸ்!**

## வளமான தொழில் வாய்ப்பு

ஒரு புதுமையான சிந்தனையும் தொழில்நுட்பமும் இணையும்போது ஒரு வளமான தொழில் வாய்ப்பு உருவாகிறது. அத்தகைய வாய்ப்பை உருவாக்கும் சக்தியானது, ஒவ்வொரு மாணவருக்குள்ளும் நிறைந்து கிடக்கிறது. உங்கள் பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் உங்களுக்குள் நிறைந்து இருக்கும் இந்தப் படைப்பாற்றலை, தொழில்முனைவுக்கான உந்துதலை, ஒரு நிறுவனத்தை உருவாக்கும் அந்தப் பேராற்றலை, பலருக்கும் வேலை தருவதைப் பற்றி எண்ணிப் பாருங்கள். அதை யாராலும் தடுக்க முடியாது.

குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம் சொன்னதுபோல் கனவுகாணுங்கள். அவர் சொன்னார்: 'தூக்கத்தில் வருவது அல்ல கனவு' உன்னைத் தூங்கவிடாமல் செய்வதே கனவு". அதன் அர்த்தத்தை இந்தக் கட்டுரையோடு கொஞ்சம் பொருத்திப் பாருங்கள். அவர் சொல்லும் கனவு என்பது இங்கே உங்கள் உள்ளுணர்வில் தோன்றும் ஊக்கமிகு எண்ணங்கள்தான். அதுவே உங்களை ஒரு நிறுவனத்தின் படைப்பாளியாக மாற்றும் உந்துவிசை. அத்தகையதொரு கனவு உங்களைத் தேடல் மிகுந்த ஒரு மனிதனாக மாற்றுகிறது. நீங்கள் கற்பனை செய்து பார்த்திராத அளவுக்கு அது சாதனை படைக்கத் தூண்டுகிறது. நான் உங்களோடு பகிர்ந்துகொண்ட பெரியவரின் கடைசி நாள்களின் ஏமாற்றம் கலந்த ஏக்கத்தைப் போல் உங்கள் வாழ்க்கையும் வீணாகாமல் தடுக்கிறது.

தமிழ்நாடு அரசு தனது புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மூலமாகப் பல்வேறு முன்னெடுப்புகளை மாநிலம் முழுவதும் செய்துவருகிறது. www.startuptn.in என்ற இணையதளத்தில் தொடர்புகொள்வதன் மூலம் உங்களுக்குத் தேவையான ஒரு தொழில்முனைப்புக்கான அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழர்கள் பொருளாதாரத்தில் வளம் மிக்கவர்களாக உருவாக வேண்டும். உலகெங்கும் வேலை தேடி தமிழர்கள் செல்லக் கூடாது. உலகெங்கும் இருப்பவர்களுக்குத் தமிழர்கள் வேலைகள் தர வேண்டும். உலகத்துக்கான நிறுவனங்களைத் தமிழ்நாட்டில் தொடங்க வேண்டும். உலகின் தலைசிறந்த தொழில்முனைவு மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்ற வேண்டும். அது உங்கள் கையில்தான் இருக்கிறது. நாளைய தமிழகத்தைப் பொருளாதார வல்லமை மிக்க நிலப்பரப்பாக நீங்கள் மாற்றுவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம். நீங்கள் ஒரு தொழில்முனைவோராக வாழ்த்துகள்.

நன்றி: சிவராஜா இராமநாதன், CEO, TANSIM

# 18 அதிக முதலீடு தேவைப்படாத இணையத் தொழில்கள்

கணினிக் கண்டுபிடிப்பும், இணைய வளர்ச்சியும் உலகுக்குப் புதியதொரு பாதையை வகுத்துக் கொடுத்துள்ளது. கணினியும் இணையமும் சேர்ந்துதான் ஒவ்வொரு நாட்டிற்குமான எண்ணிமப் பொருளாதாரம் (Digital Economy) என்கிற தவிர்க்க முடியாத துறையைத் தோற்றுவித்துள்ளது. எண்ணிமப் பொருளாதாரத்தில் உள்ள வேலை, தொழில் வாய்ப்புகளை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்.

1. **தொழில்நுட்ப சேவைகள் (Information Technology Services)**
2. **பயனரின் தன்முனைவுத் தகவல்கள் (User Generated Content)**

எண்ணிமப் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணியில் உள்ளது. குறிப்பாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் அயல்பணி ஒப்படைப்பு (Outsourcing) துறையில் அதிகமானோரைக் கொண்டு நிறைய வேலைவாய்ப்புகள் இந்தியாவில் இன்னும் உருவாகிக்கொண்டே வருகின்றன. UGC எனப்படும் பயனர் தன்முனைவுத் தகவல்கள் இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவு வணிகரீதியிலான வெற்றி பெற்றுவருகின்றன. ஃபேஸ்புக், அமேசான் கிண்டில், யூடியூப், ட்ரெல், ஷேர்சாட் எனப் பல நிறுவனங்களின் சேவைகள் இதில் முன்னணியில் உள்ளன. அதாவது, இதுபோன்ற செயலிகள்/தளங்களின் மூலம் பயனாளர்களே தங்கள் செய்திகளை உரையாகவோ புத்தகமாகவோ காணொளியாகவோ கொடுத்து பார்வையாளர்களை ஈர்த்து விளம்பரம் மூலமோ விற்பனை மூலமோ வருவாய் திரட்டுதலே UGC எனப்படுகிறது. இந்தத் துறையில் இந்தியா உலகிலேயே முன்னணியில் இருப்பதற்கு நாட்டின் மக்கள்தொகையும் காரணம். இதனாலேயே வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் பேரளவில் முதலீடு செய்ய ஆர்வமாக உள்ளன.

மென்பொருள் உருவாக்கம் மற்றும் மேலாண்மை, சினிமா வரைகலை, பல்லூடக வடிவமைப்பு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல், புதிய தகவல்களை உருவாக்குதல், மொழிபெயர்ப்பு, தரவுத்தள மேலாண்மை, இணையதள உருவாக்கம், செயலிகள் உருவாக்கம், நிறுவனக் கணக்குவழக்குகள், நிறுவனச் சந்தைப்படுத்துதல், நிறுவனத்திற்காக சேவைகளை வழங்குதல், தரவுப் பதிவு, அலுவலகரீதியான வேலை, தேடுபொறி இசைவாக்கம், தானியங்கு உரை செயலி, செயற்கை நுண்ணறிவு, நல்வாழ்வுக்கான வழிகாட்டுதல் எனப் பல பணிவாய்ப்புகள் இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளில் கொட்டிக் கிடக்கின்றன.






மேற்குறிப்பிட்டுள்ள பணிவாய்ப்புகள் ஒவ்வொன்றிலும் ஏறக்குறைய 30–க்கும் மேற்பட்ட உள்துறைகள் உண்டு. கிராபிக்ஸ் டிசைன் எனப்படும் வரைகலை வடிவமைப்பில் விளம்பர வடிவமைப்பு, இலச்சினை வடிவமைப்பு, பத்திரிகை வடிவமைப்பு என்று உள்துறைகளின் பட்டியல் நீளும். மென்பொருள் உருவாக்கம் என்றால் கணினி, இணையம், செயலி என்ற மூன்று உள்துறைகள் இருக்கின்றன. அந்த மூன்றையும் ஒருங்கிணைத்து மேகக் கணிமை (Cloud Computing), சாட்பாட், வாடிக்கையாளர் சேவை, செயற்கை நுண்ணறிவு என இதிலும் நீட்டிக்கலாம்.

என் தனிப்பட்ட கணக்கின்படி, தகவல் தொழில்நுட்பத் துறையில் சராசரியாக 520 வகையான பணி வாய்ப்புகள் இருக்கின்றன. இதில் ஒருவர் தனக்கு உள்ள திறமை, பணிவாய்ப்பு, முதலீட்டுத் தொகை உள்ளிட்ட பல்வேறு படிநிலைகளைக் கருத்திற்கொண்டு தங்களுக்கு ஏற்ற ஒன்றைத் தேர்வுசெய்யலாம். இப்போது, இதில் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

## வரைகலை வடிவமைப்பு (Graphics Designing)




தொழில் வாய்ப்புகளை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட குறைந்தபட்ச முதலீடே இல்லாமல் சம்பாதிக்கும் இடம் இந்த கிராபிக்ஸ் டிசைன். ஏனெனில், கணினி அறிவும் ஃபோட்டோஷாப் அறிவும் இருந்தால் போதும். ஒரு நிறுவனத்திற்குத் தேவையான லோகோ உருவாக்கம், விசிட்டிங் கார்டு, லெட்டர்பேட் முதல் சமூக வலைதளச் சந்தைப்படுத்துதல் வரை இன்று இதற்கான தேவை மிக அதிகம்.

ஒருவேளை, உங்களுக்கு ஃபோட்டோஷாப் மென்பொருள்கள் குறித்த அறிமுகம் இல்லையென்றாலும் கவலையில்லை. இன்றுள்ள நுட்ப காலக்கட்டத்தில், இணையத்தில் கிடைக்கும் 'Canva' போன்ற எண்ணற்ற செயலிகளைக் கொண்டே, மிக எளிதாக எல்லா வகையான பேனர்களையும் உருவாக்கிட முடியும். எனினும், இணையதள உருவாக்கம், செயலிகள் உருவாக்கத்துக்கு முதலில் தேவைப்படும் பயனர் இடைமுகம் (User Interface), பயனர் அனுபவத்திற்கு (User Experience) போட்டோஷாப், கோரல்ட்ரா, இல்லஸ்ட்ரேட்டர் உள்ளிட்டவற்றின் அறிமுகம் தேவைப்படும். எனவே, இதற்கு உள்ளூரில் DTP (Desktop Publishing) சான்றிதழ் படிப்பைப் படியுங்கள். எப்போதும் வேலைவாய்ப்புள்ள துறையாகக் கருதப்படும் இதற்கு மிக முக்கியமான தேவை கற்பனைத் திறன்தான்.

அமேசான் கிண்டில் உள்ளிட்ட மின்புத்தக உருவாக்கத்திற்கு Microsoft Word, Open Office போன்றவற்றின் பயன்பாட்டுப் புரிதல் இருந்தாலே போதும், மற்றவர்களுக்குத் தேவையான மின்புத்தகங்களைத் தயார்செய்து அதன் வழியாகவும் வருவாய் ஈட்ட முடியும்.

## சமூக வலைத்தளச் சந்தைப்படுத்துதல் (Social Media Marketing)



தற்காலத்தில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இணையவழி சந்தைப்படுத்துதல் அத்தியாவசியம். யாரும் எளிதாகச் செய்துவிடக்கூடியதாகத் தோன்றும் இந்தப் பணிக்கு மிக முக்கியமான தேவை படைப்புத்திறனும் சொல்வளமும்தான். இன்று நீங்கள் பார்க்கும் தொலைக்காட்சி விளம்பரங்கள், வானொலி விளம்பரங்கள், பத்திரிகை விளம்பரங்கள், இணைய விளம்பரங்களை உருவாக்கிக் கொடுக்க நிறையவே வாய்ப்புகள் இருக்கின்றன.

## இணையதள உருவாக்கம்

இன்று எல்லா நிறுவனங்களுக்கும் இணையதளம் தேவை. இதை மிக எளிதாக Content Management System எனப்படும் தகவல் மேலாண்மை மென்பொருள் மூலம் சில மணித் துளிகளிலேயே உருவாக்கிட முடியும். இதற்கு WordPress, Joomla, Drupal, Dijango உள்ளிட்ட பல்வேறு மென்பொருள்கள் உதவுகின்றன. இவற்றில் சிலவற்றை நிரலாக்கமின்றி உருவாக்கிவிட முடியும் என்றாலும் அடிப்படை HTML அறிவு இருப்பது நல்லது. அதேபோன்று PHP, CSS அறிவும் கொஞ்சம் அவசியம். எனவே, உள்ளூரிலோ இணையத்திலோ இணையதள வடிவமைப்பு குறித்த படிப்பில் சேர்ந்து CSS, PHP, JavaScript போன்றவற்றைக் கற்றறியலாம்.

## மின் வணிக இணையதள உருவாக்கம்

மின் வணிக இணையதள உருவாக்கத்துக்கு இன்றும் நிறைய வாய்ப்புகள் உள்ளன. இதற்கும் உடனடியாக ஆரம்பிக்கும் வகையில் 'Shopping cart' மென்பொருள்கள் உள்ளன. WooCommerce, Shopify, Megento, Open cart எனப் பல செயலிகள் உள்ளன. தமிழகத்திலிருந்து செயல்படும் Zoho நிறுவனமும் Zoho commerce என்ற பெயரில் மின் வணிக இணையதள சேவையைக் கொடுக்கிறது. இதற்கும் PHP நிரலாக்க அறிவு அவசியம். இதில், சிறப்பம்சம் என்னவென்றால், பொதுவாக நீங்கள் நிறுவனத்திற்கு இணையதளத்தை உருவாக்கிக் கொடுத்தால், அதைத் தொடர்ந்து பராமரிக்கும் பணியும் உங்களுக்குக் கிடைக்கும்பட்சத்தில் நிலையான வருமானம் பெறலாம்.

## வியாபார நுண்ணறிவு (Business Analytics)

வியாபாரம் செய்பவர்களுக்கு வியாபாரத்தைப் பெருக்கிட உதவும் வகையில் பல செயலிகள் இருக்கின்றன. இதன் மூலம் வியாபாரங்களை மேலாண்மை செய்ய முடியும். இதற்கு Google Data Studio, Tableau, Zoho analytics போன்றவை உதவும். இதற்கு Data science என்ற சான்றிதழ் படிப்பு இருந்தால் நலம்.

## கணக்குவழக்கு நிர்வகித்தல் (Account Maintenance)

இன்று இந்தியாவில் பல சிறிய நிறுவனங்களும் ஜி.எஸ்.டி. (சரக்கு மற்றும் சேவை வரி) தாக்கல் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. எனவே, ஜி.எஸ்.டி. தாக்கல் செய்துகொடுத்தல், நிறுவனத்தின் கணக்குகளை ஜி.எஸ்.டி. ஒத்திசைவுடன் கூடிய மென்பொருளில் பராமரித்தல், பொருள் விவரப் பட்டியல் (Invoice), மென்பொருள்கள், POS (Point of Sale) மென்பொருள்களைப் பராமரித்துக் கொடுத்தல் எனப் பல்வேறு பணிகளை செய்து கொடுக்க முடியும்.

## தகவல் தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல் (Data collection, Data processing)

எல்லா நிறுவனங்களும் இன்று தரவுகளின் அடிப்படையிலேயே செயல்படுகின்றன. எனவே, எல்லா நிறுவனங்களுக்கும் தரவுகளைத் திரட்டித்தருதல், தொகுத்துக் கொடுத்தல், பகுப்பாய்வு செய்தல், மொழிபெயர்ப்பு, விளம்பரத் தகவல்களை உருவாக்கிக் கொடுத்தல், பிழைதிருத்தல் என வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. இதில் மொழிப்புலமை, கற்பனைத் திறன் மட்டுமின்றி ஒருவர் தனது தொடர்பு வட்டத்தைப் பெருக்கிக்கொள்வதே புதிய தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கான அடிப்படையாக விளங்குகிறது.

## கூகுள் ஷீட் (Google Sheet)

கூகுள் ஷீட் பார்ப்பதற்குச் சாதாரண எக்ஸல் ஷீட் போல்தான் இருக்கும். ஆனால், அதை வைத்து லட்சக்கணக்கான செயல்பாடுகளையும் குறுஞ்செயலிகளையும் உருவாக்கிட முடியும். இதற்கும் அடிப்படைக் கணினி அறிவு போதும். இதுகுறித்து இணையத்தில் பணம் செலுத்தியும் இலவசமாகவும் கற்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

## வாடிக்கையாளர் சேவை, தானியங்கு உரைப்பான் (Customer support and Chat bot)

இன்று சிறிய நிறுவனம் முதற்கொண்டு பெரிய நிறுவனங்கள் வரை வாடிக்கையாளர் சேவை மையத்தை வைத்திருக்கின்றன. ஆனால், இன்னமும் மிகச் சிறிய நிறுவனங்கள் தமக்கான பிரத்யேக வாடிக்கையாளர் சேவை மையத்தை உருவாக்கிடவில்லை. அவர்களுக்கு நீங்கள் ஏதாவது ஒருவகையில் சேவை அளிக்க முனையலாம். அதற்கும் நிறைய செயலிகள் இணையத்தில் இலவசமாகவே கிடைக்கின்றன. கொஞ்சம் நிரலாக்கம் தெரிந்திருந்தால் நீங்கள் தானியங்கு உரை நிகழ்த்தும் மென்பொருளை வடிவமைக்கலாம். இன்று நிரலாக்கம் தெரியாமலேயே நாம் நமக்குத் தேவையான மென்பொருள்களையும் செயலிகளையும் உருவாக்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

> “
> கல்வி இல்லாத குழந்தை சிறகு இல்லாத பறவை போன்றது.
> *—திபெத்தியப் பழமொழி*
> ”

ஒட்டுமொத்தமாகப் பார்த்தோமானால் வாய்ப்புகள் எப்போதும் வளமாகவே இருக்கின்றன. நமக்கான வாய்ப்புகளை நாம்தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருவர் கணினி சார்ந்த தனது அடிப்படை அறிவைத் தொடர்ந்து வளர்த்துக்கொள்வதன் மூலம் இந்தத் துறையில் குவிந்திருக்கும் வாய்ப்புகளை வசப்படுத்திக்கொள்ள முடியும்.

இதுவரை தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் பற்றிப் பார்த்தோம். இனி பயனரால் உருவாக்கப்படும் உள்ளடக்கங்கள் (User Generated Content) பற்றிப் பார்ப்போம். சுருக்கமாகச் சொல்வதென்றால், இருக்கிற வளங்களைப் பயன்படுத்தி நமக்கு நாமே வாடிக்கையாளர்கள்/பார்வையாளர்களை உருவாக்கி அதிலிருந்து பணம் ஈட்டுதலே UGC எனப்படுகிறது.

> **தகவல் தொழில்நுட்பத் துறையில் சராசரியாக 520 வகையான பணி வாய்ப்புகள் இருக்கின்றன. இதில் ஒருவர் தனக்கு உள்ள திறமை, பணிவாய்ப்பு, முதலீட்டுத் தொகை உள்ளிட்ட பல்வேறு படிநிலைகளைக் கருத்திற்கொண்டு தங்களுக்கு ஏற்ற ஒன்றைத் தேர்வுசெய்யலாம்!**


## யூடியூப்

இதுவரை யூடியூபில் பார்வையாளராக மட்டுமே இருந்தவர்கள், தாங்களே புதிய சேனலை உருவாக்கி, காணொளிகளைப் பதிவேற்றலாம். இது வெளியிலிருந்து பார்ப்பதற்கு எளிதில் பணம் ஈட்டும் வழியாகத் தெரியலாம். உண்மையில், அதற்குக் கடின உழைப்பும், தொடர் முயற்சியும் வேண்டும். இதேபோன்ற வழிமுறையைப் பயன்படுத்தி ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களிலும் பணம் ஈட்டுவதற்கான வாய்ப்புள்ளது.

## மின்நூல்

எழுத்தாளர்கள், எழுத்தாளராக விருப்பம் உள்ளவர்கள் தங்கள் புத்தகங்களை அமேசான் கிண்டில் போன்ற சேவைகளின் வழியே பதிவேற்றி, வாசகர்களைப் பெருக்குவதன் மூலம் பணம் ஈட்டுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இதனூடாகப் புத்தகம் விற்றால் அந்தந்த நிறுவனங்களின் சேவைக்கட்டணம் நீங்க, மீதிப் பணம் மாதம் ஒரு முறை உங்கள் வங்கிக்கணக்கிற்கு அனுப்பிவைக்கப்படும்.

## சமூக வலைத்தளச் செல்வாக்கான நபர் (Social Media Influencer)



இது சிலருக்குக் கொஞ்சம் புதிதாக இருக்கலாம். ஆனால், இதுவும் ஒரு வகையில் வருமானம் ஈட்டக்கூடிய வழிதான். அதிகமான நபர்கள் பின்பற்றும் (Followers) பக்கங்களை உடையவர்கள்தான் செல்வாக்கான நபர்கள். நீங்களும் சமூக வலைத்தளத்தில் செல்வாக்கான நபர் என்ற நிலையை அடைய வேண்டுமானால் படிப்பவர்களுக்குப் பயனுள்ள தகவல்களைக் கொடுத்துக்கொண்டே இருங்கள். இந்த உலகில் அதிகமான மக்கள்தொகை உள்ளவரை இதுபோன்ற தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் வாய்ப்புகள் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும்.

இங்கே கொடுக்கப்பட்டவை மிகச் சிலவே, இதையும் தாண்டி இன்னமும் பல துறைகளில் பணி வாய்ப்புகள் இருக்கின்றன. புகழ்பெற்ற மர்பி கோட்பாட்டின்படி, எப்போது ஒரு வேலை முடிக்கப்படுகிறதோ அப்போதே இன்னொரு தேவை ஆரம்பித்துவிடுகிறது. எனவே, நமக்கான வேலைகள் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கும். முயற்சி, கற்பனைத் திறன், உத்திகளைப் பயன்படுத்தி உங்கள் வாழ்வை வளப்படுத்துங்கள்.

நன்றி: செல்வமுரளி, 'பிபிசி தமிழ்'

# 19 பயன் தரும் செயலிகள்

இன்றைய கையடக்கக் கைபேசிகளில், பல்வேறு வசதிகளைச் செயலிகள் (Apps) நமக்குத் தருகின்றன. செயலி எனும் பெருங்கடலில் போட்டித் தேர்வு, கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு உதவும் செயலிகளும் நிறைய உள்ளன. அனைத்துத் தரப்பினருக்கும் உதவும் முக்கியச் செயலிகள் குறித்து ஓர் அறிமுகம்:

## ஒருங்கிணைப்புப் பணிகள்

**Evernote:** அவசரகதியில் தகவல்களைச் சேமிப்பது பெரும் சவால். வேகமான உலகத்தில், தகவல்களைச் சேமிக்க உதவும் சிறந்த செயலி இது. தேர்வுகளை மையமிட்டுப் படிக்கும் மாணவர்களுக்கு உடனடியாகக் குறிப்பு எடுப்பது என்பது, அவர்களின் மதிப்பெண்ணை நேரடியாகத் தீர்மானிக்கும் அம்சம். Evernote செயலி உதவியுடன் ஒருவர் பல்வேறு வகையிலும் குறிப்புகளை எடுக்க முடியும். அதாவது எழுத்து, படம், ஒளிப்படம், ஒலிக்குறிப்புகள் என. இந்தச் செயலியை 'கிளவுட்' முறையில் பதிவுசெய்துவிடுவதால் எங்கிருந்தாலும் இணையத்தின் உதவியுடன், வேறு எந்தக் கருவியைக் கொண்டும் குறிப்புகளை உடனே எடுத்துப் பார்க்க முடியும். Url: http://bit.ly/2Ai5PBO

**Feedly:** நீங்கள் தொடர்ந்து பல வலைப்பூ, வலைத்தளங்களிலிருந்து கட்டுரைகளைப் படிப்பவர் என்றால், இந்தச் செயலி உங்களுக்கு அவசியம். இந்தச் செயலியின் உதவியுடன் உங்களுக்கு விருப்பமான வலைத்தளங்களை ஓரிடத்தில் சேர்த்துவிட்டால் போதும், அங்கே பதிவேற்றப்படும் கட்டுரைகளை உடனுக்குடன் உங்களுக்கு நேரவரிசையில் காட்டிவிடும். உங்கள் துறை சார்ந்து குவியும் செய்திகள், கட்டுரைகளை உங்கள் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் நீங்கள் வகைப்படுத்தியும் கொள்ளலாம். மாணவர்கள், போட்டித் தேர்வுக்குப் படிப்பவர்களுக்குப் பெரிதும் உதவும் செயலி இது. Url: http://bit.ly/2Ox/wR

**Examtime:** நீங்கள் ஒரு செயலியின் உதவியுடன் குறிப்புகளை எடுத்து வைத்துக்கொள்கிறீர்கள். ஆனால், பரீட்சைக்குப் படிக்க அந்தக் குறிப்புகள் மாத்திரம் போதுமா, அந்தக் குறிப்புகள் அழகாக ஒழுங்கமைக்கப்பட்டு உங்களுக்குக் கிடைத்தால் எப்படி இருக்கும்? இந்தச் செயலி அந்த உதவியை



உங்களுக்குச் செய்யும். நீங்கள் குறிப்பெடுக்கும் தகவல்களை வகை பிரிக்க இது உதவும். அந்தக் குறிப்புகளிலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட சிறுசிறு 'ஃபிளாஷ் கார்ட்ஸ்' உங்கள் குறிப்புகளைத் தொகுத்துக்கொள்ளவும் இந்தச் செயலி உதவும். Url: http://bit.ly/2KtNt4H

**Mendeley:** நீங்கள் ஆய்வுக் கட்டுரை எழுதுபவராக இருந்தால், இந்தச் செயலி உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் எழுதும்போது எங்கிருந்து தகவல்களை எடுத்தோம் என்ற ஆய்வுக் குறிப்புகளுடன் அவற்றை ஆதாரமாகக் காட்ட வேண்டிய பொறுப்பு இருக்கிறது. பல இடங்களிலிருந்து பெறப்படும் அந்தத் தகவல்களை ஒழுங்கமைத்துக்கொள்ளவும் கட்டுரையில் சுட்டிக்காட்டவும் இந்தச் செயலி பயனுள்ளதாக இருக்கும். கட்டுரை எழுதும்போது ஆதாரத் தகவல்களை ஒப்பிட்டுச் சரிபார்த்துக்கொள்ள இந்தச் செயலி கைகொடுக்கும். Url: http://bit.ly/2KtDn30

**EasyBib:** ஒரு கட்டுரை எழுதும்போது, அந்தக் கட்டுரைக்காக மற்ற கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள், புத்தகக் குறிப்புகளைச் சரியாகப் பட்டியலிடுவது சிரமம்தான். சரியாகப் பட்டியலிடவில்லை என்றால் கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அப்போது உங்கள் உதவிக்கு வரும் செயலி இது. இந்தச் செயலி உதவியுடன் கட்டுரை எழுதும்போது, நீங்கள் எடுத்த குறிப்புகளைப் பட்டியலிடலாம். அத்துடன் கட்டுரைக்கான ஆய்வுக்குக் குறிப்பு எடுக்கவும் மிகவும் பயனுள்ள செயலி இது. Url: http://bit.ly/2DGGDrb

## கற்றல்

**Wunderlist:** பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள் படிக்க வேண்டியவற்றை, செய்ய வேண்டிய செயல்களைப் பட்டியலிட்டுக்கொள்வதும் அவற்றைக் கொண்டு திட்டம் வகுத்துக்கொள்வதும் அவர்களின் வெற்றிக்கு மிக அவசியம். அப்படிப் பட்டியலிடவும் திட்டமிடவும் பயன்படும் சிறந்த செயலி இது. இந்தச் செயலியின் உதவியுடன் ஒரு பட்டியலைத் தயாரித்து, அதற்குக் கெடு நிர்ணயித்துவிட்டால், குறிப்பிட்ட நேரத்தில் அதை நினைவூட்டும். உங்களுடைய பட்டியல், தகவல்களை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் இந்தச் செயலி உதவியாக இருக்கும். Url: http://bit.ly/2znQhw5

**Mathway:** பள்ளி, கல்லூரி மாணவர்கள் பலருக்கு வேப்பங்காயாகக் கசப்பது கணக்குப் பாடம்தான். அதில் இருக்கும் பல சூத்திரங்களை நினைவில் வைத்துக்கொள்வது மிகவும் கடினம். நினைவில் வைத்துக்கொண்டாலும், சரியான இடத்தில் அதைப் பயன்படுத்தி விடை காண்பது கடினம். இந்தச் செயலியை வைத்திருந்தால் ஒவ்வொரு கணக்குக்கும் சரியான சூத்திரம் எது, அதை எப்படிப் படிப்படியாகக் கையாண்டு விடை கண்டறிவது என்பதைப் பற்றி விரிவாக விளக்கிவிடும். Url: http://bit.ly/2Sb2qey

**Duolingo:** பல மொழிகளைக் கற்க வேண்டுமா, பல மொழிகளில் குறைந்தபட்ச சொற்களையாவது தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியென்றால் இந்தச் செயலியைப் பயன்படுத்துங்கள். உலகின் பல மொழிகளை எளிமையான முறையில் கற்க உதவும் செயலி இது. Url: http://bit.ly/2Kw4eMH

**Dictionary.com:** ஆங்கிலத்தில் படிக்கும் மாணவர்களுக்கே மிகவும் சிரமமான காரியம், ஆங்கிலத்தில் குவிந்துகிடக்கும் பல்வேறு சொற்களின் அர்த்தங்களைத் தெரிந்துகொள்வதுதான். அதற்கு உதவும் செயலி இது. இந்தச் செயலியின் உதவியுடன் ஒரு சொல்லுக்கு உலகின் பல ஆங்கில அகராதிகளில் என்ன அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியலைப் பெறலாம். அது மட்டுமில்லாமல் அந்த வார்த்தையை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதற்காகத் தரப்பட்டிருக்கும் ஒலிக்குறிப்புகளும் பெரிதும் உதவும். ஆங்கிலம் பெரிதாகப் பயன்பாட்டில் இருக்கும் இந்தியா போன்ற ஒரு நாட்டில், கிட்டத்தட்ட அனைவருக்குமே உதவக்கூடிய செயலி இது. Url: http://bit.ly/2DWswiB

## குறிப்புதவி

**Scribd:** இந்தச் செயலி இருந்தால், உலகின் மிகப் பெரிய மின்நூலகம் உங்கள் கைவசம் இருப்பதாக அர்த்தம். இந்தச் செயலி இலவசமாகப் பல புத்தகங்களைத் தருகிறது. அதேநேரம் அறிவியல் அல்லது அரிதான துறை சார்ந்த புத்தகங்கள், கட்டுரைகளைக் கட்டணம் செலுத்தித்தான் படிக்க முடியும். அந்தப் புத்தகங்களைத் தரவிறக்க முடியாது. வாடகைக்கு எடுத்த புத்தகத்தைப் படிப்பது போன்று இந்தச் செயலியிலும் உலகில் மிக அரிதான புத்தகங்களைத் தேடித்தேடிப் படிக்கலாம். Url: http://bit.ly/2R9Obd

> “
> போட்டியும் பொறாமையும் பொய்ச் சிரிப்பும் நிறைந்த இவ்வுலகில் நமது பாதையில் நாம் நேராக நடந்துசெல்ல நமக்குத் துணையாக இருப்பது கல்வி மட்டுமே.
>
> *– அறிஞர் அண்ணா*
> ”

**NCERT:** இந்தியப் பள்ளி மாணவர்களுக்கும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுபவர்களுக்கும் உதவும் அற்புதமான செயலி இது. இந்தச் செயலியின் உதவியுடன் அரசுக் கல்வித் துறையின் பல புத்தகங்களைத் தரவிறக்கிக்கொள்ளலாம். குறிப்பாக, அரசுப் போட்டித் தேர்வுகளுக்கு வரலாறு, சமூகவியல் தொடங்கி பல்வேறு புத்தகங்களைப் பெறலாம். இந்தச் செயலியின் வழியாகப் பல துறை சார்ந்த பயிற்சிக் காணொளிகளையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதன் மூலம் அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த பல தகவல்களைப் பெறலாம். Url: http://bit.ly/2POq

**TED:** நீங்கள் போட்டித் தேர்வுகளுக்குப் படிப்பவராக இருந்தால், உங்களுக்குப் பல சமூகப் பிரச்சினைகள் குறித்த கருத்துகள், உங்களுக்கு ஊக்கம் தரும் நிபுணர்களின் பேச்சுகள் ஆகியவற்றைப் பெற உதவும் செயலி இது. சர்வதேச அளவில் புகழ்பெற்ற தொழில்முறை சார்ந்த பேச்சுகளின் தொகுப்புதான் இந்தச் செயலி. 'Tedx talks'–இல் இடம்பெற்ற பல துறை சார்ந்த நிபுணர்களின் 20 நிமிடச் சொற்பொழிவுகள் இதில் குவிந்துகிடக்கின்றன. இந்தச் செயலியின் உதவியுடன் பல துறைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள முடியும். Url: http://bit.ly/2AjaQte

## திட்டமிடுதல்

**Habit building:** மாணவர்களுக்கான பெரும் சவால், குறிப்பிட்ட பழக்கத்துக்குத் தங்களை உட்படுத்திக்கொள்வதுதான். சரியான நேரத்துக்குத் தூங்குவது, உடற்பயிற்சி செய்வது, படிப்பு தொடர்பான வேலைகளைத் திட்டமிட்டபடி முடிப்பது போன்றவற்றை ஒரு பழக்கமாக அவர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். அதற்கு உதவும் செயலி இது. இந்தச் செயலி சொல்வதுபோல் திட்டமிட்டு நடந்துகொண்டால், பல நல்ல பழக்கவழக்கங்களை உருவாக்கிக்கொள்ள முடியும். தினசரி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அவற்றைச் சரிபார்த்துக்கொள்ளவும் இந்தச் செயலி பெரிதும் உதவும். Url: http://bit.ly/2P2rN0i

**WHOOPS:** நம்முடைய கனவுகளை நனவாக்க அறிவியல்பூர்வமாகத் திட்டமிட உதவும் செயலி இது. வெறும் கனவுகளை மட்டும் கொண்டிருந்தால், அவை பகற்கனவுகளாகவே கரைந்துவிடும். நமக்கு இருக்கும் கனவை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாகப் பல தடங்கல்கள் இருக்கலாம். அவை ஏற்படுத்தும் தோல்விகளுக்குத் துவண்டுவிடாமல் இருக்க, அறிவியல்பூர்வமாகவும் படிப்படியாகவும் திட்டமிட உதவும் செயலி இது. இந்தச் செயலி இருந்தால் எந்தக் கனவையும் நீங்கள் நிறைவேற்ற வழிகாட்டும். Url: http://bit.ly/2BtSQ19

**Any.do:** உங்கள் ஸ்மார்ட்போனில் இந்தச் செயலியை வைத்திருப்பது, பல ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்து ஒரு காரியதரிசியை வைத்துக்கொண்டிருப்பதற்குச் சமம். திட்டமிடலுக்கு உதவும் அற்புதச் செயலி இது. நம்முடைய வேலைகளைச் சரியான நேரத்துக்குத் திட்டமிடுவது, அந்த நேரத்துக்கு முன்பாக நமக்கு நினைவூட்டுவது, வேலை முடியவில்லை என்றால் அதை 'ஃபாலோஅப்'பில் போடுவது, ஒருவரை அழைக்க வேண்டுமென்று இதில் பதிவேற்றிவிட்டால், குறிப்பிட்ட நேரத்துக்கு உங்கள் ஸ்மார்ட்போனிலிருந்து தானாகவே அழைப்பது என நாம் செய்ய நினைக்கும் அனைத்தையும் இந்தச் செயலி செய்துவிடும். அந்த அளவுக்கு நவீனத் தொழில்நுட்பத்துடன், ஒரு மனிதரைப் போலவே உதவும் செயலி இது. Url: http://bit.ly/2S5fyC6

## மன அழுத்தக் குறைப்பு

**Pacifica:** மனச் சோர்வு, மன உளைச்சல் உள்ளவர்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட செயலி இது. மாணவர்கள் பரீட்சை நேரத்தில் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். அதேநேரம், அதை உணராமலும் போய்விடுகிறார்கள். உளவியல் நிபுணர்களின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்ட இந்தச் செயலியின் உதவியுடன், குறிப்பிட்ட அளவுக்கு மன உளைச்சலைக் கட்டுப்படுத்தவும் மனச் சோர்வை நீக்கவும் பல வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. Url: http://bit.ly/2TKLNbs

**Moodkit:** இதுவும் பசிபிகா போன்ற செயலிதான். மனச் சோர்வு, எதிர்மறை மனநிலையிலிருந்து உங்களை மீட்க உதவும் செயலி. இந்தச் செயலி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதன் மூலம், உங்கள் மனநிலையை அது கணிக்கும். மனநிலையை மேம்படுத்த சில ஆலோசனைகளையும் இந்தச் செயலி வழங்கும். உளவியல் நிபுணர்கள் உதவியுடன் உருவாக்கப்பட்டிருக்கிறது. Url: http://bit.ly/2DGeUqF

**Happify:** உங்கள் பணியின் காரணமாக அதிக மன அழுத்தத்துக்கு ஆளாகும் நபரா? மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்கான நல்ல செயலி இது. இந்தச் செயலியில் அறிவியல் முறைப்படி பல விளையாட்டுகள், விடுகதைகள், சுவையான கட்டுரைகள், சின்னச் சின்ன வேலைகள் எனக் குவிந்து கிடக்கின்றன. உங்களுக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்துச் செய்வதன் மூலமாக, உங்கள் மனத்தை ஆசுவாசப்படுத்தி மகிழ்ச்சியை நோக்கி இந்தச் செயலி மெல்ல நகர்த்தும். Url: http://bit.ly/2SaCyiV

**Just One Minute:** பிரபல நரம்பியல் ஆய்வு நிபுணர் ரிக் ஹான்சனால் உருவாக்கப்பட்ட செயலி இது. மன அழுத்தம் அதிகம் இருக்கும் நேரத்திலும் மிகவும் வேதனையாக இருக்கும் நேரத்திலும், தொடர்ந்து ஒரே ஒரு நிமிடம் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டிய சில அறிவியல்பூர்வமான விளையாட்டுகளை இது தரும். இதனால் உங்கள் மனத்தை அமைதியாக்குவதுடன், மகிழ்ச்சியை நோக்கியும் நகர்த்தும் செயலி இது. Url: https://apple.co/2POmWVI

## சமூக வலைத்தளம்

**HootSuit:** நீங்கள் பல்வேறு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துபவராக இருந்தால், உங்களுக்கு உதவும் முக்கியச் செயலி இது. ஃபேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் என அனைத்து சமூக வலைத்தளங்களையும் ஒரே இடத்தில் இணைக்கும் செயலி இது. இதனால் அனைத்து வலைத்தளங்களிலிருந்தும் உடனடித் தகவல்களை ஒரே இடத்தில் பெற முடியும். Url: http://bit.ly/2S9as7J

**Linkedin:** சமூக வலைத்தளங்கள் என்றாலே நேரத்தை வீணடிக்கும் விஷயம், வாழ்க்கையைக் கெடுக்கும் விஷயம் என்றுதான் அனைவரும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், லிங்க்ட்இன் போன்ற தொழில்முறை சமூக வலைத்தளங்கள் துறைசார்ந்த நண்பர்களுடனும் நிபுணர்களுடனும் தொடர்பு வைத்துக்கொள்ளவும், தொழில் சார்ந்த நவீன வளர்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும் உதவும். இந்தச் சமூக வலைத்தளம் செயலியாகவும் கிடைக்கிறது. இதில் இருப்பதன் மூலம் வலைத்தளத்தில் இருந்த மாதிரியும் ஆயிற்று, நம் தொழிலை நன்றாகக் சுற்றுக்கொண்டதாகவும் ஆயிற்று. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க உதவும் செயலி இது. Url: http://bit.ly/3wn4G8R



## தொழில்நுட்பக் கட்டுப்பாடு

**Hold:** ஸ்மார்ட்போன் போன்ற டிஜிட்டல் கருவிகள் நம் வேலையைச் சுலபமாக்குவது உண்மைதான் என்றாலும், ஒரு கட்டுரை எழுதும்போதோ படிக்கும்போதோ தொடர்ந்து கவனத்தைத் திசைதிருப்பவும் சிதறடிக்கவும் காரணமாக இருப்பது டிஜிட்டல் கருவிகள்தான். இது போன்ற சந்தர்ப்பங்களில் உங்களுக்கு உதவும் செயலிதான் ஹோல்ட். இந்தச் செயலியை உங்கள் ஸ்மார்ட்போனில் தரவிறக்கம் செய்துவிட்டு, குறிப்பிட்ட நேரத்தைச் சொல்லிவிட்டால், ஒரு வேலையை நீங்கள் செய்து முடிக்கும்வரை உங்கள் ஸ்மார்ட்போனுக்கு வரும் அலர்ட்களை இந்தச் செயலி தடுத்து நிறுத்திவைக்கும். கவனம் சிதறாமல் வேலையை முடித்துவிடலாம். **Url: http://bit.ly/2zy4kiP**

**SelfControl:** நவீன காலத்தில் பலருக்கும் சிரமமான காரியம் ஸ்மார்ட்போன் தொந்தரவு இல்லாமல் ஒரு வேலையைச் செய்து முடிப்பதுதான். அதிலும் குறிப்பாகப் படிப்பது. படிக்கவோ எழுதவோ உட்காரும்போது ஸ்மார்ட்போனிலிருந்து தொடர்ந்து எழும் மணிச் சத்தம் நம் மனத்தைத் திசைதிருப்பிக்கொண்டே இருக்கும். இந்தச் செயலியின் உதவியுடன், குறிப்பிட்ட நேரம்வரை உங்கள் ஸ்மார்ட்போனைக் கட்டுப்படுத்த முடியும். அதேநேரம் ஸ்மார்ட்போன் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்தும் இந்தச் செயலி, செல்போனைக் குறிப்பிட்ட மணிநேரத்துக்கு 'லாக்' செய்து வைத்துவிடுகிறது. அவசர அழைப்புகளை மட்டுமே மேற்கொள்ளலாம் அல்லது வரும் அழைப்பை ஏற்கலாம். **Url: http://bit.ly/2TzlLb3**

நன்றி: வினோத் கே. ஆறுமுகம், 'இந்து தமிழ்' இயர்புக் 2020

# 20 மொழிகள் கற்போம் வாய்ப்புகள் பெறுவோம்

உலகம் முழுவதும் 6,000 மொழிகள் புழக்கத்தில் உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க மொழிகள் மட்டுமே அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளன. வெளிநாட்டு மொழிகளைக் கற்பதன் வாயிலாக வேலைவாய்ப்புகளும், தொழில் வாய்ப்புகளும் கிடைக்கின்றன. அத்துடன் அந்தந்த நாடுகளின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் தெரிந்துகொள்ளவும் மொழியறிவு உதவுகிறது.

வெளிநாட்டு மொழியைக் கற்பதால் சாதகமான அம்சங்கள் பல உள்ளன. ஒரு குறிப்பிட்ட நாட்டிற்குச் செல்வதற்காக அந்த மொழியைக் கற்க வேண்டும் என்று அவசியமில்லை. ஒரு வெளிநாட்டு மொழியை அறிந்துகொண்டால் உள்நாட்டிலேயே பல வாய்ப்புகள் கிடைக்கக்கூடும்.

ஆங்கிலம் பரவலாகப் பேசப்படும் மொழி என்றபோதிலும் பெரும்பாலான நாடுகள் தங்களுக்கெனத் தனி மொழியை ஆட்சி மொழியாக வைத்துள்ளன. கல்லூரிப் படிப்பை முடித்து அடுத்த கட்டமாக வேலைக்குப் போனாலும் சரி, உயர் படிப்பை மேற்கொண்டாலும் சரி வெளிநாட்டு மொழியை அறிந்திருப்பது வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கவே செய்யும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## மொழியைப் பயில்வதன் பயன்கள்

ஒரு வெளிநாட்டு மொழியை அறிந்திருப்பது உங்களது தன்னம்பிக்கையை அதிகரிக்கும். அது மட்டுமன்று; புதிய மொழியைக் கற்கும்போது, மூளையின் செயல்பாடு அதிகரிக்கிறது. மாணவப் பருவத்தில் வெளிநாட்டு மொழியைக் கற்பது மிகவும் எளிதும்கூட. மற்றொரு மொழியைக் கற்பதால் அல்சைமர் எனப்படும் மறதி நோய் வளர்ச்சி தடுக்கப்படும் என அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நினைவாற்றல் அதிகரிப்பதோடு மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் உதவுகிறது. கூடுதல் மொழி கற்றவர்கள் பல்திறன் பெற்றவர்களாக விளங்குகின்றனர். அனைத்திற்கும் மேலாக மற்றவர்களுடன் எளிதில் பழகுவதற்கு மொழி நிச்சயம் உதவியாக இருக்கும். பிற மொழி கற்றவர்கள் மற்றவர்களுடன் எளிதாகக் கலக்க முடியும்.

> “
> உடலுக்கு எப்படி
> உடற்பயிற்சியோ
> அதுபோல மனப் பயிற்சி
> புத்தக வாசிப்பு.
>
> *– சிக்மண்ட் பிராய்டு*
> ”

ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளை அறிந்தவர் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு எளிதாக மாறலாம். அமெரிக்காவிலேயே கடந்த 10 ஆண்டுகளில் ஆங்கிலம் தவிர்த்து பிற மொழி தெரிந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் 6 கோடி மக்கள் ஆங்கிலம் மட்டுமின்றி மற்றொரு வெளிநாட்டு மொழியையும் அறிந்தவர்களாக உள்ளனர்.

படிப்பதற்காகவோ வேலைவாய்ப்பின் பொருட்டோ ஒரு நாட்டிற்குச் செல்கிறீர்கள் என்றால், அந்த நாட்டு மொழியைத் தெரிந்துகொள்வதன் மூலம் உங்களது அன்றாட அலுவல் பணிகள் எளிதாகும். மொழிப்புலமை பெறுவதன் மூலம் உங்களது வேலைத் திறன் மேம்படும். இவ்விதம் வெளிநாடு சென்றவர்கள் அந்த நாட்டு மொழியைக் கற்க விரும்பினால் அந்நாட்டில் உள்ள தூதரகத்தை அணுகினால் அதற்குரிய ஆலோசனைகளை வழங்குவார்கள்.

பெரும்பாலும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் தங்கள் நாட்டு மொழியைக் குறைந்த செலவில் கற்றுத் தருவதற்கான வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

## மொழிகள் பயில்வோம்


ஆங்கில மொழியைக் கற்பதற்கு பிரிட்டன் தூதரகம் சென்னையில்கூட வகுப்புகளை நடத்துகிறது. இதேபோல ரஷ்ய மொழியைக் கற்பதற்கு அந்நாட்டுத் தூதரகம் வசதியை உருவாக்கியுள்ளது. பெரும்பாலான ஐரோப்பிய மொழிகள் ரோமானிய எழுத்துருக்களையே பயன்படுத்துகின்றன. ஓவியம் வரைவதில் ஆர்வம் உள்ளவர்களைக் கவரும் மொழி சீனத்தின் மாண்டரின்தான். சற்றுக் கடினமான மொழியாக இது கருதப்படுகிறது.

ஜப்பானிய மொழி பரவலாகப் பெரும்பாலானோரால் கற்கப்படுகிறது. இதற்குக் காரணம் அந்த மொழி வழங்கும் வாய்ப்புகள்தான். தற்போது கொரிய மொழியும் பரவலாகப் பலரும் விரும்பும் மொழியாகி வருகிறது. இதற்கு, இளைஞர்கள் மத்தியில் கொரியத் திரைப்படங்கள், வெப்சீரிஸ்கள் மிகவும் பிரசித்தி பெற்றுவருவதே காரணமாகும்.

ஒரு மொழியைக் கூடுதலாகத் தெரிந்து வைத்திருப்பது என்பது நிச்சயம் அது உங்களுடைய ஆளுமைத் திறனை அதிகரிக்கச் செய்யும்.

## கொரியா

இன்கோ மையம் (InKo Centre): சென்னையில் இயங்கிவரும் இம்மையத்தில் கொரிய மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. கிங் செஜோங் மைய அறக்கட்டளை மற்றும் சாங்மியுங் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது இது. கொரிய மொழி சார்ந்த அனைத்து விவரங்களையும் இங்கு பெறலாம். தற்காப்புக் கலை



பயிற்சியான டேக்வாண்டோ, கொரியத் திரைப்படம், கலாச்சார நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இங்கு நடைபெறும். கொரிய மொழி வகுப்பு மூன்று நிலைகளைக் கொண்டது. ஆரம்ப நிலை, இடை நிலை மற்றும் உயர் நிலை எனப்படுகிறது. கொரிய மொழியில் திறன்மிக்க ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர்.

**இணையதள முகவரி: enquiries@inkocentre.org**

## ரஷ்ய மொழி

ரஷ்யப் பண்பாட்டு மையம் லாப நோக்கின்றி நடத்தப்படுவதாகும். இங்கு ரஷ்யத் தூதரகத்துடன் இணைந்து, அந்நாட்டின் பண்பாட்டை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மையத்தில் மூன்று நிலைகளுக்கான மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. முதல் இரண்டு நிலைகள் தலா 120 மணி நேர வகுப்புகளைக் கொண்டது. மூன்றாம் நிலை 180 மணி நேர வகுப்பை உள்ளடக்கியது.

**இணையதள முகவரி: ruscult@gmail.com**

## ஸ்பானிஷ்

சென்னையில் ஸ்பானிஷ் மொழி கற்பதற்கான மையம் உள்ளது. 22 ஆண்டுகளாகச் செயல்படும் ஹிஸ்பானியா மையத்துக்கு டெல்லி, மும்பை, பெங்களூரு, புனே, பாட்னா ஆகிய நகரங்களிலும் மையங்கள் உள்ளன. ஸ்பானிஷ் மொழி ஏ1, ஏ2, பி1, பி2, சி1, சி2 என ஆறு வகுப்புகளைக் கொண்டது.

**இணையதள முகவரி: infochennai@institutohispania.com**

## ஜெர்மன்

ஜெர்மன் மொழி பயில்வதற்கு உதவியாக மேக்ஸ்முல்லர் பவன் செயல்படுகிறது. பெர்லின், ஹம்பர்க், மூனிச் நகரங்களுக்குச் செல்பவர்களுக்கு இம்மொழி கற்பது கூடுதல் பயன்தரும். சென்னையில் செயல்படும் மேக்ஸ்முல்லர் பவன் ஜெர்மனி பண்பாட்டு மையத்துடன் இணைந்தது. ஜெர்மானிய மொழி வகுப்பு மொத்தம் 6 நிலைகளைக் கொண்டது.

**மின்னஞ்சல் முகவரி: info@chennai.goethe.org**

## மாண்டரின்

சீனாவில் புழக்கத்தில் உள்ள மொழி மாண்டரின். எழுத்து வடிவமும், பேச்சு வழக்கும் சற்றுச் சிக்கலானது. இம்மொழி வகுப்பு நான்கு நிலைகளைக் கொண்டதாகக் கற்பிக்கப்படுகிறது. மாண்டரின் கற்பது வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்யும், சீன நாட்டுப் பண்பாட்டை அறிந்துகொள்ளவும் உதவும்.

**மின்னஞ்சல் முகவரி: mandarinschoolchennai.com**

## பிரெஞ்சு

சென்னையில் இரண்டு மையங்கள் பிரெஞ்சு மொழியைக் கற்றுத் தருகின்றன. அலையன்ஸ் பிரான்ஸைஸ் நிறுவனம் பிரெஞ்சு மொழியைக் கற்றுத் தருகிறது. இதற்கு தமிழகத்தில் கோவை, திருச்சியிலும் கிளைகள் உள்ளன. இம்மையங்களில் பண்பாட்டு நிகழ்ச்சிகளும் கருத்தரங்குகளும்




நடத்தப்படுகின்றன. ஐந்து நிலைகளைக் கொண்டதாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. முதல் இரண்டு நிலைகள் தலா 160 மணி நேர வகுப்புகளைக் கொண்டது. மூன்றாவது மற்றும் நான்காவது நிலைகள் தலா 200 மணி நேர வகுப்புகளைக் கொண்டது. ஐந்தாவது நிலை 240 மணி நேர வகுப்பைக் கொண்டது. வழக்கமான மொழி வகுப்புகள், குறுகியகாலப் பயிற்சி உள்ளிட்டவையும் இங்கு நடத்தப்படுகின்றன.

**மின்னஞ்சல் முகவரி: contact.afmadras@gmail.com**

## ஜப்பான்

ஜப்பான் மொழியைப் பயிற்றுவிக்க பல கல்வி மையங்கள் உள்ளன. இதில் முதன்மையாக உள்ளது ஹயகவா ஜப்பானிய மொழிப் பள்ளி. உயர்கல்வி பயில ஜேஎல்பிடி தேர்வு எழுதும் மாணவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் வகுப்புகளை நடத்துகிறது. மொத்தம் 4 நிலைகளைக் கொண்டது. வகுப்புகள் குறைந்தது 3 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரை உள்ளன. தொலைநிலை மொழிப் பயிற்சி வகுப்புகளையும் இம்மையம் நடத்துகிறது.

**மின்னஞ்சல் முகவரி: contact@hayakawa.in**

இம்மையம் தவிர சென்னையில் ஏபிகே – ஏஓடிஎஸ் தொசோகாய் மையமும் ஜப்பானிய மொழியைக் கற்றுத் தருகிறது.

**மின்னஞ்சல் முகவரி: abkaots@gmail.com**

இம்மையங்கள் தவிர லாங்குவேஜ் லேப் (Language Lab) எனப்படும் மையம் இத்தாலிய மொழியையும், இனாவேர்டு மையம் பல்வேறு வெளிநாட்டு மொழிகளையும் கற்றுத் தருகின்றன. இந்த மையங்களிலும் மாணவர்கள் சேர்ந்து தங்களுக்கு விருப்பமான மொழியைக் கற்கலாம்.

**மின்னஞ்சல் முகவரிகள்: languagelab.chennai@gmail.com**
**inawordlanguages.com**

தமிழ் மொழியுடன் பிற மொழிகளையும் கற்றுத் தேர்ந்து
தரணி எங்கும் தமிழ் மணம் பரப்புவோம்.

**நன்றி: செல்லப்பா, ஊடகவியலாளர்**

21

# சமூகம் பழகு: உலகுடன் ஒட்ட ஒழுகுவோம்!

பள்ளி வாழ்க்கையாக இருந்தாலும் சரி, கல்லூரிக் காலமாக இருந்தாலும் சரி ஒருவகையில் மாணவப் பருவம் மிகவும் பாதுகாப்பானது. எப்படி என்கிறீர்களா? காலை எழுகிறோம். உணவு தயாராக இருக்கிறது. சாப்பிட்டுவிட்டுப் படிக்கக் கிளம்புகிறோம். அங்கே அட்டவணைப்படி எல்லாம் நடக்கிறது. முடிந்ததும் வீடு திரும்பி படித்து, உண்டு உறங்கச்செல்கிறோம். மீண்டும் விடிகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதம் என்றாலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான அன்றாடம், இல்லையா? நம் உணவு உடைக்கான பொறுப்பையும், கல்விக்கான பொறுப்பையும் குடும்பமும் சமூகமும் ஏற்றுக்கொள்கின்றன. சொல் பேச்சு கேட்டு நடக்க வேண்டும் என்பதுதான் நம் மீதான ஒரே எதிர்பார்ப்பு. வீட்டிலும் அதுதான், கல்லூரியிலும் அதுதான். பெரும்பாலும், எல்லோருடைய மாணவப் பருவமும் இப்படியாகவே இருக்கிறது. உண்மையான சவால் எங்கே தொடங்குகிறது என்றால், படிப்பை முடித்துவிட்டுக் கல்லூரி வளாகத்திலிருந்து வெளியே காலடி எடுத்துவைக்கும் அந்த நாளில்தான். எப்படி என்று பார்க்கலாம்.

படிக்கும் காலத்தில் ஆசிரியர்கள் கற்றுத்தருவதைக் கேட்கிறோம். பிறகு, நண்பர்களுடன் கலந்துரையாடியபடி படிக்கிறோம். இங்கே நம் செவிமடுக்கும் திறமைக்கும், கற்றுக்கொள்ளும் திறமைக்கும், மனனம் செய்யும் திறமைக்கும், புரிந்துகொள்ளும் திறமைக்கும், எழுதும் திறமைக்கும்தான் சோதனையே தவிர சுயமாக முடிவெடுப்பதற்கான எந்த நிர்ப்பந்தமும் கிடையாது. ஆனால், சமூகச் சூழலில் அப்படி இல்லை. இதற்கு முந்தைய காலகட்டத்துக்கு அப்படியே நேரெதிரானது அது. ஒவ்வொரு நாளும் வெவ்வேறு மனிதர்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களோடு பழக வேண்டியிருக்கும். அவர்கள் நமக்குப் பணிப்பதைக் கேட்டுச் செய்ய வேண்டியிருக்கும். நாம் அவர்களுக்கு வேலை தர வேண்டியிருக்கும். இந்த எல்லா இடங்களிலும் நாம் சுயமாகச் சிந்தித்து அதன்படி நடக்க வேண்டிய தேவை உள்ளது.



மிகப் பெரிய முடிவெடுக்கும் தருணங்கள் தொடங்கி அன்றாடம் நடக்கும் சாதாரண விடயங்கள் வரை என அனைத்திற்கும் நம்முடைய அணுகுமுறையும் பேச்சும் நடவடிக்கையும் மிக முக்கியப் பங்காற்றும். இதற்கான அடிப்படை என்ன தெரியுமா? சமூகம் பழகுதல்!


நாம் அடிப்படையில் சமூக உயிரி என்பதால் சமூகத்தோடு பழகியாக வேண்டியது மிகமிக அவசியம். சமூகத்தோடு ஒன்றுகலக்காமல் தனித்திருக்க முடியாது. அப்படியென்றால், சமூகத்தோடு எப்படி ஆக்கப்பூர்வமான உறவை வளர்த்துக்கொள்ளப்போகிறோம் என்பது பிறர் நலன் தொடர்பான கேள்வியா என்று தோன்றலாம். இல்லவே இல்லை, அதில் நம்முடைய நலனும் இருக்கிறது. நம் குடும்பத்தில், நாம் பணியாற்றும் இடங்களில், பொது இடங்களில் சமூகத்தை எப்படி எதிர்கொள்கிறோம் என்பது நம்முடைய தனிப்பட்ட மனநலனில் தாக்கம் செலுத்தக்கூடிய விடயம்தான். நம்மை நோக்கி வரும் பிரச்சினையையும் நெருக்கடியையும் நல்ல விதமாக எதிர்கொண்டோம் என்றால் அது எந்த நெருக்கடியையும் இலகுவாக்கும், நம்மையும் மன உளைச்சலுக்கு ஆளாகாமல் காப்பாற்றும். ஒரு வகையில் சமூகத்தோடு பழக நாம் நிர்ப்பந்திக்கப்படுகிறோம் என்பதே உண்மை. சமூகத்தோடு பழகுவதையெல்லாம் கற்றுக்கொள்ள முடியுமா? நிச்சயமாக முடியும்!

நாம் சமூகத்தோடு உரையாடுவதற்கான கருவியாக இருப்பது மொழி. மொழியைப் பயன்படுத்தி சமூகத்துடன் உறவாடுவது அடிப்படையில் ஒரு சமூகச் செயல்பாடு என்பதை நினைவில் கொள்வோம். ஆக, சமூகம் பழகுவதற்கான முதல் படி மொழியைத் திறமையுடன் கையாள்வதற்குத் தயாராவதுதான். மென்பொருள் துறை, மார்க்கெட்டிங் துறை, உயர் பதவிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவற்றுக்கு ஆங்கிலம் இன்றியமையாதது. பல நேரங்களில், நம்முடைய திறமையைவிட மொழிப் புலமை நம்மைக் காப்பாற்றிவிடும். எனவே, மொழியைக் கற்றுக்கொள்வதற்கான மெனக்கெடல் மிகமிக அவசியம். நல்ல உச்சரிப்பு, தடுமாற்றமில்லாத பேச்சு போன்றவையெல்லாம் வேலையில் உச்சம் நோக்கிச் செல்வதற்கான ஆதார அம்சமாகும்.

### வாசிப்பு எனும் ஆயுதம்

ஒருவேளை, ஆங்கிலம் தேவைப்படாத சூழலில் நமக்கான பணி வாய்ப்பு அமைந்துவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். நான் அன்றாடம் தமிழ்தான் பேசுகிறேன், பள்ளி கல்லூரிகளில் அதைத்தான் படித்திருக்கிறேன், பிறகு என்ன என்று தோன்றுகிறதா? நமக்குப் பழகிய சூழலில் பேசுவதும், பொது இடங்களில் பேசுவதும் ஒன்றல்ல. வீட்டில் நன்றாக வாயாடுபவர்களாக நாம் இருக்கக்கூடும். பொது இடத்திலும் அலுவலகத்திலும் நான்கைந்து பேர் கூடியிருக்கும் இடங்களிலும் அதே வாயாடும் திறமை எடுபடாமல் போகலாம். ஆக, மொழியில் புலமையுடன் இருப்பது மட்டும் முக்கியமல்ல. இங்கே தேவைப்படுபவை, தன்னம்பிக்கையும் நிலைமைகளை அனுசரித்துப் போகும் தன்மையும். நாம் தன்னம்பிக்கையுடன் சமூகத்தை எதிர்கொள்ள வேண்டுமென்றால் மொழியில் புலமையோடு இருப்பதுபோல் சிந்தனையிலும் புலமையோடு இருக்க வேண்டும். சிந்தனையை வலுவாக்க உதவும் ஆற்றல்மிக்க ஆயுதம் – வாசிப்பு.

நம் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தை அன்றாடம் எடுத்துக்கொள்வதைப் போல நம் சிந்தனைக்கும் மனதுக்கும் தேவையான ஊட்டச்சத்தையும் அன்றாடம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, வாசிப்பை நம் அன்றாடத்தின் பகுதியாக வைத்துக்கொள்ள வேண்டும். முதலில், நம் பணிச் சூழலுக்குத் தேவையான துறை சார்ந்தவற்றை வாசிக்கலாம். பிறகு இலக்கியம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் என வெவ்வேறு வாசிப்புகளை அத்துடன் இணைத்துக்கொள்ளலாம். மிக முக்கியமாக, நாளிதழ் வாசிப்பு. அன்றாடம் ஒன்றுக்கும் மேற்பட்ட நாளிதழ் வாசிப்பை வைத்துக்கொள்ளுங்கள். நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்வதும், எவையெல்லாம் நம்மை இயக்கிக்கொண்டிருக்கின்றன என்று தெரிந்துகொள்வதும் மிகவும் முக்கியம். எல்லாவற்றுக்கும் மேலாக, இவையெல்லாம் ஒன்றுக்கொன்று பங்களிக்கக்கூடியவை. இலக்கிய வாசிப்பும், அரசியல் வாசிப்பும், வரலாற்று வாசிப்பும், நாளிதழ் வாசிப்பும் நம் அன்றாடத்துக்கு எப்படிப் பயன்படுகிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ளத் தொடங்கிவிட்டோம் என்றால் பிறகு யாராலும் அவ்வளவு எளிதில் நம்மை அசைத்துப்பார்க்க முடியாது.



இத்தகைய வாசிப்பு இல்லாமல் போனால் சமூகத்துடன் முறையான ஒட்டுதல் இல்லாமல் சமூகத்திலிருந்து தனியே பிரிந்து போய்விடக்கூடிய ஒரு சூழல் உருவாகிவிடலாம். அதே நேரத்தில் வெறும் புத்தகப் புழுவாகச் சுருங்கிவிடுதலும் சரியன்று. இன்றைய இளைஞர்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் நெருக்கமில்லாமல் இருக்கிறார்கள் என்ற பேச்சு உள்ளது. அதேபோல் மைதான விளையாட்டுகளை விட்டு பெரும்பாலான இளைஞர்கள் விலகிவிட்டார்கள். இந்த இரண்டிலும் கவனம் கொள்ளுங்கள். மைதான விளையாட்டுகளைப் பழகிக்கொள்ளுங்கள். அது மிகப் பெரிய ஆசுவாசம் மற்றும் புத்துணர்ச்சி தரும் செயல்பாடு என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். வாசிப்பைப் போல் விளையாட்டும் வசப்பட்டுவிட்டால் நினைத்தாலும் விட்டுவிட முடியாத அளவு கெட்டியாக நம்மைப் பற்றிக்கொள்ளும். நமக்குக் கிடைக்கும் நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவிட புத்தக வாசிப்பும் மைதான விளையாட்டும் உதவும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஒவ்வொரு மனிதரும் இன்னொரு மனிதரை ஏதோ ஒருவகையில் சார்ந்து வாழ வேண்டியதிருக்கிறது என்பதுதான் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பு. ஆகவே, மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் அன்புடனும் ஆதரவுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பு. அந்தச் சமூகத்தின் ஓர் அங்கம்தான் குடும்பம். குடும்பத்தின் ஓர் அங்கம் நீங்கள். எனவே நீங்களும் சமூகத்தின் ஓர் அங்கம். நமக்கு அன்பு கிடைக்க வேண்டுமானால், நாமும் அன்பை வெளிப்படுத்த வேண்டும். அப்படி வெளிப்படுத்தும்போது, நாம் நமது குடும்பச் சூழலிலும் பணிச் சூழலிலும் சமூகச் சூழலிலும் ஆசுவாசம் கொள்ள முடியும்.

கைபேசியும் கணினியும் தொழில்நுட்பமும் நமக்குத் தேவையான எல்லா வசதிகளையும் தந்துவிடாது. மனம் சோர்வுகொள்ளும் சமயத்தில் சாய்ந்துகொள்ள ரோபாட்டைவிட ரத்தமும் சதையுமான சக மனிதரே தேவை என்பதை நாம் மறுக்க முடியுமா என்ன? அந்த மனிதர் குடும்ப உறவாகவோ, புரிதல் கொண்ட நண்பராகவோதானே இருக்க முடியும். அப்படிப்பட்ட உறவையும் நட்பையும் துணையாக்கிக்கொள்தலும் அவசியம்.

ஆகவே, நூல்களை வாசிப்போம், மனிதரை நேசிப்போம், சமூகத்துடன் உறவாடுவோம்!

நன்றி: த.ராஜன், ஊடகவியலாளர்